PUBLIC LIBRARY JAFFNA

அறிமுக விலை 20/=

# புதியவன்

PUTHEYAVAN

ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்

பாதை 01 | ஒகஸ்ட் 12-ஒகஸ்ட் 19 - 2013 | பயணம் 04 | பக்கங்கள்-20

**சிந்தித்திரு..**



தன்னை அடக்கியாளத் தெரிந்த மனிதனைத் தவிர வேறு எவனுமே சுகந்திரானவன் என்று கூறமுடியாது.

- எபிக்டேடஸ்


# அபிவிருத்தியும், அடக்குமுறையும்



இது தேர்தல் காலம் - வேட்பாளர்களின் நாற்காலிக் கனவுகளும் வாக்காளர்களின் வாழ்வியல் கனவுகளும் சந்தேகங்களுடன் சந்தித்துக் கொள்ளும் களம் பரபரப்பாகத் தொடங்கியிருக்கிறது.

குறிப்பாக வடமாகாணத்தை தம்வசப்படுத்தும் முனைப்பில் அரசும் கூட்டமைப்பினரும் எத்தகைய வியூகங்களை மேற்கொள்ளப்போகிறார்கள் என்பது சில நாட்களில் தெரியவந்து விடும்

கூட்டமைப்பினர் முன்வைக்கப்போகும் விடயங்கள் எதுவும் புதுமையானவையல்ல. 13ஆம் திருத்தச்சட்டத்தை பாதுகாத்தல் காணி-பொலிஸ் அதிகாரங்களுக்காக போராடுதல் போன்ற வழமையான விடயங்களையே அவர்கள் முன்வைக்க முடியும்



ஆனால் இவையனைத்தையும் இன்றைய அரசு முற்றாகவும் வெளிப்படையாகவும் நிராகரித்து வரும் நிலையில் தமிழ் மக்களின் ஜீவாதாரப் பிரச்சினைகள் வெறும் பேசு பொருளாகவே இருக்கும்.



அரசு அபிவிருத்தி பற்றியே பேசும். உரிமைகள் பற்றி வாய் திறக்காது கட்டடங்கள், காப்பெற் வீதிகள் எனக் புறக் கவர்ச்சி காட்டும் அரசு தமிழ் மக்களிற்கான - உரிமைகள் அதிகாரங்கள் பற்றி வாய்திறக்காது . அரசை ஆதரிக்கும் தமிழ் கட்சிகளும் குழுக்களும் அரசுக்கு ஆமா போடும் வில்லுப்பாட்டு பிற்பாட்டுகாரர்களாகவே இயங்குவர்.

இந்த நிலையில் அபிவிருத்தி என்பதும் வாழ்வுரிமை என்பதும் வேறுவேறு விடயங்கள் என்பதை தமிழ் மக்கள் உணர்ந்தே உள்ளனர். எனவே இனி மேலும் தம்மை ஏமாளிகளாகவும் கோமாளி களாகவும் நினைத்து அரசியல் பண்ண வருவோரை நம்பி இடுப்பின் எஞ்சியிருக்கும் அரைத் துண்டையும் இழக்கத் தயாரில்லை என்பதே சாதாரண சாமானிய தமிழனின் மனப்பதிவாக இருக்கும்.

இதே சமயம் தென் பகுதியில் அபிவிருத்தி பணிகள் பெருமளவுக்கு நடைபெறும் போதும் அங்குள்ள சாதாரண சிங்கள மக்களுக்கும் சிறுபான்மை இஸ்லாமிய மக்களுக்கும் எதிரான வன்முறைகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. அரசின் இத்தகைய இருமுக அரசியலின்ராஜதந்திர மூலோபாயத்தின் உள் நோக்கம் எது என்பது அரசுக்கே வெளிச்சம்.








24X7 மணிநேர முதன்மைச் செய்திகள்.

www.putheyavan.com

அரசியல்,சினிமா,அழகு,அழகு,திரைவிமர்சனம்
விநோதம் போன்ற சுவாரசியமான அம்சங்களுடன்

உள்ளதை உள்ளபடி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவன் பதில்கள்

**க.அருணாசலம் - விசுவமடு**

**மிகவும் கவலைக்குரிய விடயம் எது?**

உரிமைக்காக ஆயுதமேந்திப் போராடிய இனம், நிவாரணத்திற்காக அடிபடும் இனமாகிவிட்டமைதான்.

**தவகுமார் - திருநெல்வேலி**

**விதியை மதியால் வெல்ல முடியும் என்கிறார்களே... சரியா?**

வெறும் மதி மட்டும் போதாது தம்பி. இந்த உலகில் அதற்கு 'நிதி'யும் வேண்டும்.... இல்லையேல் அதோ கதிதான்.

**க. சந்திரகலா - மாவிட்டபுரம்**

**பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், கண்ணதாசன், வாலி மூவரையும் ஒப்பிடுக.....!**

மா-பலா-வாழை... முக்கனிகளில் எது சிறந்தது எனக் கூறுதல் கடினம்.

**ப.ஜீவரதன் - சங்கானை**

**தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களிடம் இல்லாத விடயம் எது?**

கூட்டுறவு மட்டுமே!

**தி. ஞான பாஸ்கரன் - இயக்கச்சி**

**முன்னைய தமிழ் திரைப்படங்கள் முடியும் போது 'சுபம்', வணக்கம் என்றுபடத்தின் முடிவில் காட்டுவார்கள். இப்போது அப்படியில்லையே ஏன்?**

அப்போதைய திரைப்படத் தயாரிப்பாளர்கள் பார்வையாளர்ளான ரசிகர்கள்மகிழ்வோடு படத்தைப் பார்த்து ரசித்து 'சுபமாக' வீடு போய் சேர வேண்டுமென்று வணக்கம சொல்லியனுப்பும் பண்புடையவர்களாக இருந்தனர். ஆனால் இபபோதைய ரசிகர்கள் எப்படா முடியும் படம், எப்படி இந்த உபத்திரவத்திலிருந்து தப்பலாம் என இருப்பவர்கள்.... அவர்கள் வணக்கம் போட முன்பே தியேட்டரை விட்டு வெளியேறிவிடுவதாக... தயாரிப்பாளர்களுக்கு இது நன்கு தெரியும்...!

**செ.பரமசிவன் - சுன்னாகம்**

**எங்கள் வீட்டிற்கு அருகில் வசிக்கும் ஒருவர் எப்போதும் கெட்ட வார்த்தைகளையே பேசிக் கொண்டிருக்கிறார் என்ன செய்வது?**

மன்னித்து விடுங்கள்... அவருக்கு அது தான் தாய் மொழி போலும்!

**இளையநிலா - குமுழமுனை**

**13வது திருத்தச் சடடம் எந்த நிலையில் உள்ளது?**

'கோமா' நிலையில் உள்ளது. அதை திருத்த வேண்டும் என்கிறது அரசு. திருத்த விடமாட்டோம் என்கிறது இநதியா, திருத்தினால் ஆபத்து என்கிறது கூட்டமைப்பு..
திருத்தி என்ன? திருத்தாமல் விட்டாலென்ன? என்கிறார்கள் தமிழ் மக்கள்.

**அ.அன்புக்கரசி - அளவெட்டி**

**நமது தமிழ்த் தலைவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

தமிழ் மக்களின் தலை விதியை மாற்றும் தகைமையற்ற தலைவர்கள் அவர்களைப் பற்றி என்ன நினைப்பது... பாவம் தமிழ் மக்கள்.

**கே.செல்வசேகரன் - ஸ்கந்தபுரம்**

**தமிழ்ப் படங்கள் பெரும்பாலும் இப்போது ஆபாசமாக வருகிறதே ஏன்?**

'கதை' பஞ்சம் தம்பி... அதனால் 'சதை'யைக் காட்டி வியாபாரம் செய்கிறார்கள்....

**தாமோதரம் மேனகா - பன்னாலை**

**நமது கலை, கலாசாரம், பண்பாடு இவற்றின் இன்றைய நிலை கவலை தருவதாக உள்ளதே கவனித்தீர்களா?**

"அந்நிய மோகம் ஆபத்தான நிலையில் நமது பாரம்பரியத்தை தள்ளிவிட்டுள்ளது. கலை கலைந்த நிலையில், கலாசாரம் காரமற்ற நிலையில், பண்பாடு தன்பாட்டில்
தள்ளாடும் நிலையில்... நாம் எங்கே நிற்கிறோம்...? எங்கே போகிறோம்? புரியவேயில்லை.

**எஸ்.சுரேஸ்குமார் - வட்டுக்கோட்டை**

**ஒரு காலத்தில் பெருமைப்படும் வகையில் இருந்த நம் கல்வி இப்போது ஏன் வீழ்ச்சி காண்கிறது?**

நமது ஆசிரியப் பெருமக்களில் பெரும்பாலானோர் "கலவி" வியாபாரிகளாகி -ரியூட்டரிக் கடையில் நிலை கொண்டு விட்டதால்

**ப.தர்மசீலன் - இலுப்பைக் கடவை**

**பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு மன்மோகன்சிங்கிற்கு ஜி.எல்.பீரிஸ் நேரில் சென்று அழைப்பு விடுக்கப் போகிறாராமே...! ஏற்பாரா?**

ஏற்க மாட்டார்.... ஆனால் ஏற்பார்...! (பாவம் இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் நிலை இப்படியாகிவிட்டதே)

**க.கடம்பேஸ்வரன் - உருத்திரபுரம்**

**பொது மக்களின் (தமிழர்களின்) காணிகள் கபளீகரம் செய்வது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூடடமைப்பினர் என்ன செய்யப் போகிறார்கள்?**

அடுத்தடுத்து அறிக்கைகளை விட்டு... பின் அடங்கிப் போவார்கள் அவ்வளவு தான்.

**த.இளையவன் - புத்தூர்**

**தமிழர்களின் கைகளில் இருப்பது வாக்கு என்ற ஆயுதம் மட்டுமே என்று கூட்டமைப்பின் தலைவர்கள் கூறுகிறார்களே...!**

தம்மிடம் இருப்பது வெறும் வாக்குறுதிகள் மட்டும் தான் என்பதையும் அவர்கள் கூறியிருக்கலாம்.

**ம.செபஸ்தியான் - மாதகல்**

**தமிழ் மீனவர்களின் நிலையை கவனிபாரில்லையா?**

முன்பு அரசுகளே கடல் வலயச்சட்டம் போட்டு மீனவர்களின் வாழ்வை கரையில் முடங்க வைத்தது. இப்போ, சிங்களவர், இந்தியர், சீனர் என்று அனைவரும் எமது கடல் வளத்தை சுரண்டி நம் மீனவர்களை ஏதிலிகள் ஆக்குகிறார்கள்... அது நிறைவேற்று அதிகார அடக்கு முறை. இது வல்லாதிக்க மேலாதிக்க ஒடுக்குமுறை.

**பரமகுரு தயாளன் - மானிப்பாய்**

**'வெலிவேரிய' துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கு பயன் படுத்திய 90 துப்பாக்கிகளையும் பகுப்பாய்வுக்கு விடப் போகிறார்களாமே?**

முள்ளிவாய்க்காலில் பயன்படுத்திய துப்பாக்கிகள், பீரங்கிகள், கொத்துக் குண்டு, எறிகணைகள் போன்றவற்றை ஏன் பகுப்பாய்வுக்கு விடவில்லையாம்?

**மா.மாதவநாதன் - அல்லாரை**

**நமது கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் எதற்கெடுத்தாலும் (முக்கியமான பிரச்சினைகளின் போது) இந்தியா பறந்து விடுகிறார்களே... ஏன்?**

குடும்பநலனை கவனிக்கவும்... இந்திய நலனை தெரிந்து கொள்ளவும் மட்டுமே!

**எஸ்.பத்மசிகாமணி - பரந்தன்**

**கூட்டமைப்பின் 'தலைவர்' சைலண்ட் ஆகிவிட்டார் போலிருக்கிறதே...**

கூட்டமைப்பின் 'சந்தை இரைச்சலில்' அவர் சைலண்ட் ஆவதை விட வேறு வழியில்லை.

**து.வானமரன் - பளை**

**ஆட்சி மாறும் போது கட்சி மாறும் அரசியல்வாதிகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

மக்கள் ஆட்சியை மாற்றும் போது நாங்கள் கட்சி மாறுவதில் என்ன தவறு என்று நினைப்பவர்கள்.

**சா.தர்ஷனா - நல்லூர்**

**தயா மாஸ்டர் தேர்தலில் போட்டியிடவில்லையே!**

போட்டியிடவில்லையா? போட்டியிட அனுமதிக்கவில்லையா? எதுவானாலும் ஆரம்பத்திலேயே அரசியல் அனாதை ஆவதிலிருந்து தப்பிவிட்டார்.

**க.சுந்தரமொழி - பூநகரி**

**எமது பெண்மணிகளின் பெரும்பாலானோர்களின் கண்மணிகளில் ஏன் இத்தனை சோகம்?**

'மெகாசீரியல்' நாயகிகளின் துயரங்களில் நிரந்தரமாக தினமும் தோய்ந்து போய் விடுவதால்.

**ப.திருவாலவாயன் - உரும்பிராய்**

**மாகாண சபைக்கு காணி, பொலிஸ் அதிகாரம் கிடைக்குமா?**

ஒரு கட்டடமும் உறுப்பினர்கள் அமர கதிரைகளும் கடடாயம் கிடைக்கும்.

## அறிவன் பதில்கள்

அறிவன் பதில்களுக்கான உங்கள் கேள்விகளை தபால் மூலமோ, மின்னஞ்சல் மூலமோ வாசகர்கள் அனுப்பி வைக்கலாம்.



**தபால் முகவரி:-**
அறிவன் பதில்கள்
புதியவன், இல. 87, பிரதான வீதி,
மன்னார்.

**மின்னஞ்சல்:-**
Puthiyavan2013@gmail.com



# ரென்சன் மணியம்

**வீ**திப்போக்குவரத்தில் கவனம் வேணும். கண்டபடி வீதியில ஒடித்திரியிறதால விபத்துக்கள் தான் கூடுது பாருங்கோ. இப்ப ஆஸ்பத்திரியில கூடுதலாக விபத்துக்களில் காயப்பட்டவர்கள் தான் சிகிச்சைக்காக சேர்க்கப்படுகினம்.

அதுல இளம் பெடியள், இளம் பெட்டையள் தான் விபத்தில காயங்களுக்கு உள்ளாகிறார்கள். வயது போனவர்கள் விபத்து இடம்பெற்ற இடத்திலேயே உயிரை விடுகினம். வீதியால் ஏற்படும் விபத்தா அல்லது மனிதரால் ஏற்படும் விபத்தா என்று தான் சொல்ல முடியாமல் உள்ளது.

போர் முடிவடைந்த கையோடு போரினால் பாதிப்படைந்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்யப்போகிறோம். என்று கிளம்பியவை வீதியை மட்டும்தான் காப்பெற் வீதியாக போட்டிருக்கினம். காப்பெற் வீதியால விபத்துகள் பல இடம்பெறுகின்றன. ஒழுங்கான முறையில் காப்பெற் வீதிகளை போட்டிருந்தால் இந்த விபத்துகள் இடம்பெற வாய்ப்பிருக்காது. என்று எங்கட சனம் குற்றம் சொல்கினம் காப்பெற் வீதிக்கு அருகில் கிடங்குகள் மூடப்படாத நிலையில் காணப்படுகின்றது.

நாளாந்தம் காப்பெற் வீதியால் பயணம் செய்பவர்கள் எத்தனை பேர் அந்த கிடங்குகளில விழுந்து எழும்புகினம். தெரியுமோ. காப்பெற் போட்ட கையோடு அருகில் இருக்கும் கிடங்குகளையும் மூடி விட வேண்டும். மூடாமல் இருப்பதால் தான் பல விபத்துகள் இடம் பெறுகின்றன.

எங்கட ஆக்களும் சும்மாவா இருக்கினம். காப்பெற் வீதி போட்ட கையோடு அருகில் இருக்கும் கிடங்குகளையும் மூடி விட வேண்டும். மூடாமல் இருப்பதால் தான் பல விபத்துகள் இடம்பெறுகின்றன.

எங்கட ஆட்களும் சும்மாவா .காப்பெற் வீதிபோட்ட கையோடு சும்மா இருந்த வாகனங்களை வீதிக்கு கொண்டு வந்து கண்டபடி வீதி ஒழுங்கு முறை தெரியாமல் ஓட வெளிக்கிட்டு விபத்தை ஏற்படுத்தி தாம் மட்டுமல்ல மற்றவரையும் விபத்துக்குள்ளாக்கி விடுகின்றனர்.

இதனை உணர்கிறார்கள் இல்லை வீதி விபத்து சம்பந்தமாக முன் அறிவித்தல் பலகைகள் இல்லாத நிலையில் பல வதிகள் காணப்படுவதால் பல விபத்துகள் ஏற்பட வாய்ப்பாக இருக்கிறது. போக்குவரத்து பொலிஸாரும் தமது கடமைகளை சரிவரச் செய்யாத காரணத்தாலும் வீதி விபத்து ஏற்படுகிறது. இப்படியாக வீதி விபத்துகளுக்கு பல காரணங்கள் இருக்கிறது. இந்தக் காரணங்களை இனங்கண்டு நிவர்த்தி செய்வர்கள் ஆயின் விபத்துகளை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும்.

விபத்துகள் இடம்பெறும் என்று தெரிந்தும் கண்டும் காணாமல் இருப்பவர்களை என்ன செய்யமுடியும்.

அந்நியன் படத்தில் குற்றம் இழைப்பவர்களுக்கு தண்டணை கொடுப்பது போல கொடுக்க முடியுமா? சம்பந்தப்பட்டவர்கள் தான் சிந்திக்க வேண்டும். வீதிகளையே ஒழுங்காக புனரமைக்க முடியாதவர்களால் எப்படி ஏனைய அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும். என்பது தான் இன்று வரை கேள்விக்குறியாக இருக்கிறது.

காப்பெற் வீதியை போட்டவர்கள் சந்திகளில் சமிக்ஞைகளையும் போட வேண்டும். அப்போது தான் சந்திகளை கடக்கும் வாகனகாரர்கள் சிக்னலைப்பார்த்து தமது வாகனத்தை விபத்து ஏற்படாத வண்ணம் செலுத்த முடியும் ஒரு சந்தியில் அடிக்கடி விபத்து ஏற்படுமாக இருந்தால் அந்த சந்தியை விபத்து ஏற படாத வகையில் மாற்றிக்கொள்ள வேண்டும். போர் ஓய்ந்து ஏ9 பாதை திறக்கப்பட்ட அன்றில் இருந்து இன்று வரை ஏ9 வீதியால் பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்லுகிறது. இதனாலும் விபத்துகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

இன்றைய பத்திரிகை செய்திகளில் நாளாந்தம் வெளியிடும் செய்தியில் நின்ற வாகனத்துடன் வாகனம் மோதி விபத்து . மஞ்சள் கோட்டைத் தாண்டிய நடை பாதை பாதசாரிகளை மோதி தள்ளிச்சென்ற வாகனம், வீதியோரமாக சென்றவர் மீது வாகனம் மோதி விபத்து, மின்சாரக் கம்பத்துடன் மோதி விபத்து, ஆற்றில் பாய்ந்த வாகனம், குடிமனைக்குள் புகுந்த வாகனம், எதிரே வந்த வாகனத்துடன் மோதி விபத்து போன்ற செய்திகளை பார்க்க முடியும்.

இந்த விபத்துகள் சாரதிகளால் ஏற்படும் விபத்துகள் ஆகும். ஒழுங்கு விதிகளை மீறி வாகனம் செலுத்துவதால் எற்பட்ட விபத்தாகும். இப்படிப்பட்டவர்களுக்கு எவர் சாரதி அனுமதிப்பத்திரம் கொடுத்தது. முதல் அவர்களிடம் இருந்து சாரதி அனுமதிப் பத்திரத்தை பறிமுதல் செய்ய வேண்டும். வெளிநாடுகளில் வீதி ஒழுங்கு முறையை மீறி வாகனத்தை செலுத்துபவர்கள் கமரா மூலம் அடையாளம் காணப்பட்டு வழக்குத்தாக்கல் செய்து தண்டம் அறவிடப்படுகிறது மட்டுமல்லாமல் சாரதி அனுமதிப் பத்திரமும் பறிமுதல் செய்யப்படுகிறது. குற்றத்தை பொறுத்து தண்டணை வழங்கப்படுகின்றது. வாகனத்தை செலுத்த முடியாத அளவுக்கும் தண்டணையை பெற்றிருக்கிறார்கள்.இந்த தண்டணையைப் பார்த்ததும் மற்றவர்கள் வீதி ஒழுங்கு முறைக்கு ஏற்ப வாகனத்தை செலுத்துகிறார்கள். அதனால் அங்கு விபத்துகள் குறைவு. சில நாடுகளில் வாகன விபத்துகளே ஏற்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதே போல எமது நாட்டிலும் வீதி போக்குவரத்து சம்பந்தமான நடை முறையை ஏற்படுத்தி விபத்துகளை இல்லாமல் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும். இதன் மூலமே வீதி விபத்துகளை இல்லாமல் செய்யமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியவன்
PUTHEYAVAN

ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்

# 87 பிரதான வீதி, மன்னார்.
தொலைபேசி.இல. 023 3238444
E.mail: putheyavan2013@gmail.com


## முள்ளிவாய்க்காலும் வெலிவேரியாவும்

துப்பாக்கிகள் உணர்ச்சியற்றவை

ஏவுபவன் கட்டளைக்கு கீழ்ப்படிந்து இயங்குபவனின் கைகளின் அசைவுக்கு ஏற்ப இயங்குபவை .

நியாய அநியாயம். தர்ம அதர்மம் பற்றி அவற்றிற்கு அக்கறை கிடையாது

ஏவலிடுபவன் அதிகார மமதையில் இயலாதவதை அச்சுறுத்தவோ, ஆடிபணியவைக்கவோ கூலிக்கு சேவகம் செய்யும் காவலரை ஏவும்போதில் துப்பாக்கிகள் பேசும் அப்போது கட்டளைக்கிணங்க உணர்ச்சியற்று செயல்படும் சுய சிந்தனையற்ற இயங்குதருக்கு இசைந்து கொடுக்கும் ஆயுதம் எத்தனையோ அவலங்களுக்கு காரணியாகி விட்டு மௌனித்து விடுகிறது. துப்பாக்கிகளும் அதனை ஏந்தியவர்களும் வன்னி மாவட்டத்தில் - முள்ளிவாய்க்கால் வரை எந்த அவலத்தை அப்பாவி மக்களுக்கு வழங்கினார்களோ அதே கறைபடிந்த கரங்களாலேயே வெலிவேரியா அவலத்தையும் அரங்கேற்றி முடித்துள்ளனர்.

இரு சம்பவங்களினதும் பரிமாணங்கள் வேறு வேறு கனதிகளைக் கொண்டிருந்தாலும். அதனால் விளைந்த மானுட அவலத்தின் கனதி ஒன்றே !

ஜனநாயகத்தில் நியாயம் கோரி நீதியாக குரல் கொடுத்தால் துப்பாக்கி முனையில் - வன்முறையில் பதில் சொல்லும் பண்பாட்டு கலை இலங்கையில் ஆழ வேரூன்றி விட்டதற்கு வெலிவேரிய சம்பவம் மற்றொரு வலிமையான சான்று இதனைக் குறித்துக் கொள்ள வேண்டியவர்கள் மனித உரிமை, அமைதி, சமாதானம் பற்றி -இவையனைத்தையும் கருத்தில் கொள்ளாது தத்தம் அரசியல் இராணுவ நலன்களைக் கருத்தில் கொண்டபடி பேசி அறிக்கையிட்டு பரபரப்பு காட்டி விட்டு அமைதியாகிவிடும் சர்வதேச மேலாதிக்க அரசுகள் தான்.

தமக்கு ஒவ்வாத நீதிகோரி நியாமமான முறையில் போராட்டம் நடத்துவோரைக் கூட பயங்கரவாதிகள் ,கிளர்ச்சிக்காரர்கள் என முத்திரை குத்திவிட்டு அநியாய வாதிகளின் கொடுமைகளுக்கு கௌரவமளித்து விருது வழக்கும் அதிகாரம் கைக்கொண்டோரால் அடிக்கடி மானுடம் தோல்வியடைகின்றது. அவமானத்தால் தலை குனிகின்றது .

வெலிவேரிய சம்பவத்தில் கொல்லப்பட்டோரும் காயமுற்றோரும் சாதாரண பொது மக்களே !

அவர்கள் கேட்டதெல்லாம் தொழிற்சாலை கழிவால் - நஞ்சாக்கப்பட்ட நீரால் தமக்கு ஏற்பட்ட இழப்புகளை பாதிப்புகளை நீக்க ஆவணை செய்யுங்கள் என்பது தானே

இதற்கு பதிலை இந்த நாட்டின் அரசு துப்பாக்கி ரவைகளால் தான் சொல்ல வேண்டுமா?

அரசியல் யாப்பின் எந்தப்பிரிவில் இத்தகைய சட்டம் எழுதப்பட்டுள்ளதாம்!

இக் கொடுமையான சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட தொண்நூறுக்கும் மேற்பட்ட துப்பாக்கிகளை ஆய்வுக்குப்படுத்தப் போகிறார்களாம் !

இதனை விடவும் நகைப்புக்கிடமான விடயம் பொதுபல சேனா அமைப்பின் முக்கியஸ்தர் இடையில் தோன்றி தான் தான் படையினரை வெலிவேரியாவுக்கு அனுப்பினார் என வெளிப்படையாக எந்த விதமான அச்சுமின்றி அறிக்கை விட்டிருக்கிறார் என்றால் என்னத்தைச் சொல்வதாம் !

பொதுபலசேனா சிகல உறுமய தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என எத்தனை பேர் வெளிக்கிட்டிருக்கிறார்கள் பாருங்கள். இவர்களை வழிகாட்டிகளாக வைத்துக்கொண்டோ. இவர்களுக்கு அடங்கி நடப்பதன் மூலமோ சிறிலங்காவை ஆசியாவின் அதிசயமாக்க முடியுமென அரசு நினைக்கிறதா?

இது குறித்து சிங்கள சகோதரர்கள் மிக ஆழமாக சிந்திக்க வேண்டிய காலம் இதுவாகும்.




# அபிவிருத்தி எனும் மாயப் போர்வையில் ஓரங்கட்டப்படும் அரசியல் தீர்வு

தமது தரப்பு தவறுகளை மூடி மறைத்து பிறர் மீது குற்றம் சுமத்தி வரும் அரசு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு எதனையும் கண்டு கொள்ளத் தயாராக இல்லாத நிலையில் அபிவிருத்தி என்ற மாயப் போர்வையின் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி விடமுடியும் எனக் கனவு காண்கிறது. இந்தக் கோட்பாடு உள்நாட்டுப் போர் முடிவடைந்த காலந் தொட்டே அரசாங்கத்தால் கைக்கொள்ளப்பட்டு வரும் ஒன்றாக உள்ளது.

அபிவிருத்தித் திட்டங்கள், புதிய காபெற் வீதிகள், புதிய கட்டிடங்கள் என்பவற்றின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு விடலாம். அல்லது அவர்களின் உள்ளங்களை வென்று விடலாம் என்று அரசாங்கம் தப்புக் கணக்கு போடுகின்றது.

இதன் மூலம் கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்களைப் பலி கொடுத்து நடத்தப்பட்ட ஆயுதப் போராட்டத்திற்கும், சுதந்திரத்திற்குப் பின்னரான ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக இன்னமும் நீடிக்கும் அரசியற் போராட்டத்திற்கும் வெறுமனே அபிவிருத்திக் குறைபாடுகள் காரணம் என்றது போன்ற ஒரு மாயையான குறுகிய வட்டத்திற்குள் கொண்டு வர அரசாங்கம் முனைகின்றது.

தமிழ் மக்கள் அபிவிருத்திக் குறைபாடுகளினால் போராட்டங்களை நடத்தவில்லை. தமிழ் மக்கள் அவர்களது மொழி உரிமை மறுக்கப்பட்டதனாலும், கல்வி உரிமைகள் நசுக்கப்பட்டதனாலும் அவர்களது பாரம்பரியமான நிலங்களில் இருந்து விரட்டப்பட்டதனாலுமே தான் தமது உரிமைகளை உறுதிப் படுத்திக் கொள்வத்காகப் போராட்டங்களில் இறங்கினார்கள்.

இன்று வரையிலும் கூட இந்த உரிமைகள் உறுதிப்படுத்தப்படாத நிலையில் வெறும் அபிவிருத்தி எனும் மாயத்தைக் காட்டி அரசாங்கம் மக்கள் போராட்டத்தை நசுக்கி விடலாம் எனக் கருதுகின்றது. அபிவிருத்திகளில் மயங்கித் தமிழர்கள் தமது உரிமைகளை மறந்து விடுவார்கள் என்ற தப்புக் கணக்கு அரசாங்கத்திடம் இருக்கும் வரைக்கும் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு எனும் முயற்சிப் பாதையில் அரசினால் ஒரு அடி தன்னும் முன்னேற முடியாது. "அரசுக்கு எதிராக விமர்சனம் செய்யும் வெளிநாடுகளுக்கு இங்கு நடைபெறும் அபிவிருத்தியும், நல்லிணக்கமே எமது பதிலாக இருக்கும்" எனக் கடந்த சுதந்திர தின விழா நிகழ்வின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றுகையில் கூறியிருந்தமையும் அரசு கொண்டிருக்கும் அத்தகையதோர் தப்புக் கணக்கையே சுட்டிக் காட்டுவதாக உள்ளது.

வெளிநாடுகள் மெச்சும் படியான வெளிப்படையான சில அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள போதிலும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ஆக்கபூர்வமான எதனையும் அரசாங்கம் இன்று வரைக்கும் சாதிக்கவில்லை.

அரசியல் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றினைக் காண்பதற்கான கடப்பாட்டினை அரசாங்கம் அக்கறையெடுத்து நிறைவேற்றத் தவறியுள்ள இந் நிலையில் அக் குறையை மூடி மறைப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லையென நீண்டகாலமாகவே குற்றஞ்சாட்டுவதன் மூலம் தமிழத் தேசியக் கூட்டமைப்பு அபிவிருத்திக்கு எதிரானவர்கள் எனச் சித்தரிக்கும் போக்கு அரசாங்கத் தரப்பில் வலுவடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடாத்தும் பொறுப்பு அரசு தரப்பிடமே உள்ளது. இந் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இக் கூட்டங்களுக்கு அழைக்கப்படாது புறக்கணிக்கப்படுவதும் பின்பு அதற்கு ஏதேனும் சாக்குப் போக்குக் கூறுவதும் வழக்கமானதொன்றாகவே ஆகிவிட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளுக்குக் கூட இக் கூட்டங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்காமல், அவர் ஒத்துழைப்பதிலலை என்றும் அபிவிருத்திக்கு தடையாக உள்ளனர் என்றும் குற்றம் சுமத்துவது எந்தவிதத்தில் நியாயமாகும்? அதைவிட இன்றைய காலநிலையில் வடக்கில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் என்பன ஓர் அரசியல் மேடையாகவே மாறிவிட்டது.

தொடர்ந்து அபிவிருத்திக்குத் தடையானவர்கள் என்ற குற்றச்சாட்டு அரச தரப்பில் இருந்து வருவதைத் தவிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அபிவிருத்தி மீது கவனத்தத்தைத் திருப்பிக் கொள்வது முக்கியமானதாகும். அதேவேளை அரச தரப்பும் வெறும் பேச்சளவில் நல்லிணக்கம் என்று கூறுவதை விட்டுவிட்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் அரவணைத்து நடந்து கொண்டால் தான் அவர்களுக்கும் நம்பிக்கை ஏற்படும். அத்தோடு நல்லிணக்கத்திற்கான வழியும் திறக்கும். அவ்வாறானதோர் நம்பிக்கையை உருவாக்காமல் ஒரு போதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்திடம் தான் உள்ளது. ஏனெனில் போரின் வெற்றியை அனுபவிப்பவர்கள் அவர்களே. அவர்களிடம் இருந்து தான் அது வர வேண்டும்.

இவை யாவும் ஒரு புறமிருக்க மறுபுறத்தில் இலங்கையின் முதலாவது சிறுபான்மையினமான தமிழ் சமூகம் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் இரண்டாவது சிறுபான்மையினமான முஸ்லீம் சமூகமும் இன்று பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த பின்னர் அடுத்த இனரீதியான அடக்குமுறை முஸ்லீம்களுக்கே என்று முன்பு பலராலும் எதிர்வு கூறப்பட்டிருந்த நிலையில் அது இன்று நிறைவேறத் தொடங்கிவிட்டது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இலங்கையில் இனி இனவாதம், மதவாதம் ஒன்றுக்குமே இடமேயில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடிக்கடி கூறி வருகின்ற போதிலும் இன்று முஸ்லீம்களுக்கு எதிரான இனவாதம் தெற்கிலிருந்து தோற்றம் பெற்றுள்ளது.

'பொதுபல சேனா', 'ஜாதிக ஹெல உறுமய' போன்றவை பௌத்த சிங்கள கடுங்கோட்பாடு கொண்ட அமைப்புகளாகும். இவற்றைச் சார்ந்தவர்கள் நிச்சயமாக இனவாதிகளாகவே இருப்பர் என்பது சொல்லித் தெரிய வேண்டிய தொன்றல்ல.

பொதுபலசேனா போன்ற அமைப்புகள் மதவாதத்தையும, இனவாதத்தையும் ஊக்குவித்து நாட்டை மற்றொரு அழிவுப் பாதையை நோக்கி வழி நடத்துவதாக பல சிங்கள அரசியல் வாதிகளே அபிப்பிராயம் தெரிவித்து வருகின்றமை பல ஊடகங்கள் வாயிலாகத் தெரிய வருகின்றது.


இவையெல்லாவற்றிற்கும் மேலாக இலங்கை அரசுக்கு எதிரான சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. ஐ.நா.மனித உரிமை ஆணையம், அமெரிக்காவின் மனித உரிமைப்பிரிவு, பொதுநலவாய அமைப்பு ஆகியவை இலங்கைக்கு எதிராகப் பல கோணத் தாக்குதலை ஆரம்பித்துள்ளன.


இலங்கை இதிலிருந்து மீட்சியடைய வேண்டுமெனில் அரசாங்கம் வெறும் அபிவிருத்தி ஆசியாவின் அதிசயம் எனும் பேச்சளவில் கூறுவதை விடுத்து நீதியானதும், நீடித்து நிலைக்கக் கூடியதும் சகலராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஓர் தீர்வினை எட்டுவதற்கு முனைப்புடன் ஈடுபடுவதே சாலச் சிறந்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ. ஜவனியன்







மக்களின் மனங்களில் ஏற்படப் போகும் வாழ்தல் என்ற செயற்பாட்டின் அபிவிருத்தி ஏற்படாத நிலையில் சாதாரணமாக வீதிகளும் கட்டிடங்களும் சீரமைக்கப்படுவது மாத்திரம் அபிவிருத்தி என்ற அர்த்தப்பாடாகிவிடாது.

புனர்வாழ்வு பெற்றவர்கள் பலரும் இன்று சொந்தமாக மோட்டார் சைக்கிள் வாங்கிவிட்டாலே அவர் பற்றிய புலனாய்வு முடக்கி விடப்படும் நிலையில் தனி நபர் அபிவிருத்திகளை காணாது தவிக்கும் மக்களுக்கும் வெறுமனே கட்டுமான அபிவிருத்தி மட்டுமே தீர்வாகி விடப்போவதில்லை. இவ்வாறு தொடர்ச்சியாக அவ்வாறான அபிவிருத்தியில் மாத்திரம் கவனம் செல்லுமாக இருப்பின் உளவள பிரிவிற்கு வரும் உளபாதிப்புக்குள்ளாகும் மக்களின் தொகையும் குறையப்போவதில்லை என்பது ஜதார்த்தம்.

இந்நிலையில் வட மாகாண சபைத்தேர்தலை எதிர்கொள்ளப்போகும் மக்கள் தாம் வெறுமனே கட்டுமான அபிவிருத்திகளை மாத்திரம் ஏற்றுக்கொண்டவர்களா நாம் என்பதனை காட்டும் களமாகவும் இத்தேர்தலை மாற்றப்போகின்றனர் என்பது நிதர்சனம்.

உளத்தின் வலிகளை வெளிக்காட்ட முடியாதவர்களாக அங்கலாய்க்கும் தமிழ் மக்கள் தமது துயரை மற்றவரிடம் கூறி ஆறதலடைவதா அல்லது அவரது துயரைக் கேட்டு ஆறுதல் சொல்வதா என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நிலையில் வெறுமனே வடக்கில் வசந்தம் என்ற பெயரில் நடந்தேறும் அபிவிருப்பதா என்ற கேள்விகளும் மறு முனையில் இருக்கத்தான் செய்கின்றது. அவ்வாறு இருப்போமேயானால் எமது பிரதேசத்தின் அபிவிருத்திகளை நாமே கண்காணிக்க வேண்டும் என அரசால் விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கு பதில் அளிக்கப்போவதும் அவ்வபிவிருத்தியினை அனுபவிக்கப்போகின்றவர்கள் என்ற வகையில் அது சாத்தியமானதா எனவும் நோக்கவேண்டும்.

வடக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்கு வடக்கின் வசந்தம் என பெயர்ப்பலகை இடப்பட்டு அவற்றை அரசியல் சாயம் பூசுவதை விட மக்களின் தேவை கருதிய அபிவிருத்திக்கு அனைத்து தரப்பினரையும் செயற்பட அனுமதிப்பதன் மூலம் அபிவிருத்தியின் வேகத்தினையும் முழுமைத்தன்மையையும் காணக்கூடியதாக இருக்கும். அது மட்டுமின்றி அரசியலுக்கு உட்பட்ட வேலைத் திட்டமாக அபிவிருத்தியை நோக்காது சமூகம் சார்ந்ததும் மக்கள் மயமானதுமான அபிவிருத்தி என்ற தோரணை வளர்க்கப்படுமானால் மக்களின் ஆதரவுடனான அபிவிருத்தியை பெறக் கூடியதாகவிருக்கும் என்பது வெளிப்படை.

# தேவையற்ற அபிவிருத்திகளை வட பகுதி மக்கள் ஏற்கவில்லை என்பதை பறைசாற்றப்போகும் வட மாகாணசபை தேர்தல்

வட மாகாணசபைத்தேர்தல்கள் சூடு பிடித்துள்ள நிலையில் பிரச்சார போர் இன்னும் சில தினங்களில் வடக்கு முழுவதும் அதிரும் ஓர் அங்கமாகிவிடும் என்பது ஜதார்த்தம்.

இந் நிலையில் பல தரப்பாலும் செய்யப்பட்டவைகளும் செய்யப்படாதவைகளும் கருத்துக்களமாக மாறும் நிலை ஏற்படும்போது அபிவிருத்தி எனும் பதம் பெரும் கருப்பொருளாக உருவெடுக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

அரச தரப்பு தாம் சார்ந்த அபிவிருத்திகளை படம்போட்டுகாட்ட முட்படும்எண்பதுடன்ஏனைய தரப்பினர் இவ் அபிவிருத்தியானல் மக்கள் அடைந்துள்ள ஜதார்த்தத்தின் தன்மையை வெளிக்கொண்டவர்.

எனினும் அபிவிருத்தி எனும் தளத்தில் நின்று நாம் எண்ணுகின்றபோது 'வெந்த புண்ணில் வேல் பாச்சியது போல்' யுத்தத்தின் பாதிப்புக்களில் இருந்து முழுமையாக மீள முடியாத மக்களை மீண்டும் மீண்டும் மன அழுத்தத்திற்கு இட்டுச்செல்லப்படும் சம்பவங்களே இடம்பெறுகின்றது என்பது அப்பகுதி மக்கள் மனங்களின் வெளிப்பாடாகியுள்ளது.

ளின் சாத்தியத்தன்மைகள் சற்று சிந்திக்கப் பட வேண்டியதாகியுள்ளது.

இந் நிலையில் கிராமிய ரீதியில் நடத்தப்படும் உளவியல் ரீதியிலானதும் சமூக ரீதியிலுமான மன அபிவிருத்திக்கான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதுள்ளமையானது அபிவிருத்திகளின் பின்னடைவான விடமாகியுள்ளது.

யுத்த நிறைவின் பின்னரான காலப்பகுதியில் மன அழுத்தத்திற்கு உட்பட்டவர்களின் தொகை அதிகரித்திருப்பதும் அதனால் ஏற்படும் தற்கொலைகளும் அதிகரித்துள்ளதாக வடக்கில் காணப்படும் வைத்தியசாலைகளின் உளவளத்துணை பிரிவின் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்நிலையில் வெறுமனே கட்டுமான அபிவிருத்தி மட்டுமே மீள்குடியேற்ற பகுதிகளுக்கும் வடக்கு கிழக்கிற்கும் தேவையென்று எண்ணுவது மடமைத்தனமான சிந்தனையாகும்.

தமது உறவுகளை பறிகொடுத்தவர்களும் தனது குடும்ப அங்கத்தவர்கள் கண்முன் இறக்க கண்டவர்களும் இதுவரையும் உறவுருத்திகளை அவர்கள் கருத்தில் எடுத்ததாக தெரியவில்லை.

இவ்வாறான நிலையில் அபிவிருத்திகளும் கூட தரமற்ற விதத்திலான நீண்ட கால நோக்கற்ற விதத்தில் மேற்கொள்ளப்படுகின்றமை பல கட்டுமான வேலைத்திட்டத்தின் வெளிப்பாடாகியுள்ளது.

இவ்வாறான அபிவிருத்திகள் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் வடக்கிலும் கிழக்கிலும் அபிவிருத்தியினை மேற்கொள்கின்றோம் மக்களுக்கான பரிபூரண நிறைவினை மேற்கொண்டு வருகின்றோம் என சர்வதேசத்திற்கான மழுப்பலாக இருக்கப்போகின்றதா என்ற கேள்விகளே அபிவிருத்தி செயற்பாட்டில் முன்வைக்கின்றது. இதயசுத்தியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தியாக இருப்பின் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 270000 மக்களின் அபிலாசைகளை நிவர்த்தி செய்யும் செயற்பாடாக இல்லையேல் அவை மக்களின் தேவையறிந்து மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளாக இருக்கக்போவதில்லை.

அவ்வாறு எல்லாவற்றையும் காலத்தின் பதிலென விட்டுவிட்டு நாம் சேர்ந்துபோய்

எனவே இன்று நடக்கும் அபிவிருத்தியின் பெயரிலான திருவிழாக்களை நிறுத்தி மக்களை கவரும் விதமான செயற்பாடுகளே முன்னெடுத்தல் முக்கியமானதாகவிருக்கும். அந்த வகையில் மாற்றங்கள் காணப்பட்டால் மாத்திரமே மக்கள் அபிவிருத்தியில் திருப்தி கொள்வார்களேயன்றி வேறு எவ்வகையிலும் அபிவிருத்தியை மேற்கொண்டாலும் மக்கள் மனங்களை வெல்வது கடினமான பாதையாக இருக்கப்போகின்றது.

இந் நிலையில் அபிவிருத்தியை வைத்து வட மாகாணசபைத்தேர்தலை எதிர்கொள்வதென்பது மக்களை முட்டாளாகக் கருதி களத்தில் இறங்குவதாகவே இருக்கும்.

இவ்வாறான தருணத்தில் தரமற்றதும் தேவையறியாததுமான அபிவிருத்திகளை மக்கள் ஏற்றதாக இல்லை என்பதனை வெளிப்படுத்துவதாக இத் தேர்தலை மக்கள் பயன்படுத்த வேண்டும் என்ற பாரிய சவாலுக்குள் வட பகுதி மக்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்பதே ஜதார்த்தமாகியுள்ளது.





## முதியோரைப் புறக்கணிக்காதீர்!

பெரியோரை மதித்தல் என்பது நமது தமிழர் பண்பாட்டின் முக்கிய கூறாகும். ஆனால் அத்தகைய முதியோரை நமது இளைய தலைமுறையினர் எப்படி கவனிக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கும் போது வருத்தமே மிஞ்சுகிறது.

முதியோர் பராமரிப்பில் ஆரோக்கியம் முக்கியமானது. முதியோர் ஆரோக்கியத்தில் மூட்டுத் தேய்மானம் இன்றியமையாதது. ஒருவர் 50 வயதைக் கடக்கும் போது எலும்புத் தேய்மானப் பாதிப்பு ஏற்படுகிறது. குறைந்த வயதினருக்கும் இந்தப் பாதிப்பு ஏற்பட்டாலும், அதிக அளவில் முதியோருக்கே இந்தப் பிரச்சினை வருகிறது.

எலும்புகளுக்கு நடுவில் இருக்கும் மெல்லிய குருத்தில் ஏற்படும் பாதிப்பால் இந்தத் தேய்மானம் உண்டாகிறது. குருத்தில் எலும்புகள் ஒன்றோடு ஒன்று உரசும் போது தாங்க முடியாத வலியும் இறுக்கமும் ஏற்படும்.

வயதானவர்களுக்கு மட்டுமின்றி விபத்தில் காயமடைந்தவர்களுக்கும் மூட்டுப் பாதிப்பு ஏற்படுகிறது. அதுமட்டுமின்றி, ருமட்டாய்டு எனும் நோயாலும் மூட்டுப் பாதிப்பு வருவதுண்டு.

இந்தப் பாதிப்பு சினோவியல் மெம்ப்ரேன் எனப்படும் எலும்புகளைச் சுற்றியுள்ள எரிச்சலாலும், தடிமனாலும் ஏற்படுகிறது. எரிச்சல் பாதிப்பு எலும்புகளை சேதப்படுத்தி அதன் அசைவுகளை சிரமமாக்கும். இதைப் பொதுவாக 'எரிச்சல் எலும்பு நோய்' என்று அழைப்பர்.

முழங்கால் மூட்டுகளில் காயம் ஏற்படும் போதும் எலும்பு முறிவு ஏற்படும் போதும் போஸ்ட் டிராமட்டிக் ஆர்திரிடிஸ் பாதிப்பு ஏற்படுகிறது. மூட்டு எலும்புகளின் இணைப்புகளில் ஏற்படும் காயங்கள், எலும்பு முறிவு ஆகிய காரணங்களால் மூட்டு எலும்புகளின் அசைவுகள் குறையும் போது இந்தப் பாதிப்பு ஏற்படுகிறது.

மூட்டுப் பாதிப்புகளைக் குணப்படுத்துவதற்கான நவீன சிகிச்சை முறைகள் பெருகியுள்ளன. மூட்டுப் பாதிப்பை குணப்படுத்த மருந்துகள் பலன் தரவில்லையென்றால், அறுவைச் சிகிச்சை மூலமே தீர்வு காண முடியும்.

எலும்பு மூட்டு சிகிச்சைக்கான மாத்திரைகளை அதிகம் பயன்படுத்தினால் பக்க விளைவுகள் ஏற்படும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

மூட்டுத் தேய்மானப் பகுதிகளை நீக்கிவிட்டு, உலோகங்களைப் பொருத்தி அதனை மேம்படுத்துவது அறுவைச் சிகிச்சையின் நோக்கமாகும்.

முதியவர்களுக்கான மூட்டுப் பாதிப்பு, அவர்களை நடக்க விடாமல் செய்து விடுகிறது. இதனால் எந்த நிகழ்ச்சிகளிலும் அவர்கள் பங்கேற்க முடியாமல் போகிறது. இதனால் அவர்களது உடலும், உள்ளமும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, முதியோரை வலி இன்றி நடக்க வைப்பதற்கான சிறப்புச் சிகிச்சைகள் மதுரை ப்ரீத்தி மருத்துவமனையில் மேற் கொள்ளப்படுகின்றன. எம்ஐ எனப்படும் அறுவைச் சிகிச்சை மற்றும் கணனி நேவிகேஷன் முறை ஆகியன மூலம் துல்லியமாக நோயாளிகளுக்கு சிகிச்சைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய சிகிச்சைகள் நோயாளிகளுக்கு நீண்டகால பயனளிக்கும் வகையில் அமைகின்றன. ஆகவே, முதியோரைப் புறக்கணிக்காமல் சிகிச்சைக்கு உட்படுத்தி அவர்களை மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள்வது அவசியம்.


அறுவைச் சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் உலோகமான சிறுசிஆர்,டைட்டானியம்: மூட்டு உராய்வுப் பகுதியில் பயன்படுத்தப்படும் செராமிக்ஸ், க்ராஸ்லிங்குக்கு பயன்படும் பாலி எனப்படும் பிளாஸ்டிக் ஆகியன மூலம் மூட்டின் அசைவுகள் வலி இல்லாமலும், 15 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரையில் குறைபாடில்லாமலும் செயல்படுவதற்கு உதவுகின்றன.

எனவே, முதியோரின் மூட்டுகளைக் கவனித்து அவர்களும் மற்றவர்கள் போல் மகிழ்ச்சியுடன் வாழ வழி செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA




# இந்த வாக்குறுதியாவது காப்பாற்றப்படுமா?

கொழும்பு தெற்கு துறைமுகத்தின் கொள்கலன் முனையம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்ட போது, சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் மேலும் தீவிரமடைந்துள்ளதான கருத்து ஊடகங்களின் மூலம் வலுவாகப் பரப்பப்பட்டது.

உள்நாட்டு ஊடகங்களில் இதற்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை விட, வெளிநாட்டு ஊடகங்கள் கொடுத்த முக்கியத்துவம் தான் மிகமிக அதிகம்.

புவிசார் அரசியல் முக்கியத்துவம் காரணமாக, இந்த விவகாரம் சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

500 மில்லியன் டொலர் செலவில் அமைக்கப்படும் சர்வதேச கொள்கலன் முனையத்தின் முதற்கட்ட கட்டுமானப் பணிகள் மட்டுமே தற்போது நிறைவடைந்துள்ளன.

இன்னும் இரு கட்டங்களும் நிறைவடைய குறைந்தது ஏழு ஆண்டுகள் செல்லும்.

முதற்கட்டமாக நிறுவப்பட்டுள்ள கொள்கலன் முனையம், 20 அடி கொண்ட 18 ஆயிரம் கொள்கலன்களைக் கொண்ட கப்பல்களைக் 'கையாளும் வசதியைக் கொண்டது.

தெற்காசியாவிலேயே, இது தான் இத்தகைய அதிநவீன வசதிகளைக் கொண்ட முனையம் என்று கருதப்படுகிறது.

இந்த கொள்கலன் முனையம் கட்டப்பட்டதன் மூலம், உலகின் நவீன வசதிகளைக் கொண்ட - மிகப்பெரிய கப்பல்கள் கூட தரித்து நிற்கும் வசதி கொண்ட முதல் 20 ஆழ்கடல் துறைமுகங்களில் கொழும்பும் ஒன்றாக இடம்பெற்றுள்ளது.

ஆனால், இந்தக் கொள்கலன் முனையத்தின் மூலம் கிடைக்கப் போகும், பொருளாதார வளம் முழுவதும் இலங்கைக்குக் கிடைக்கப் போவதில்லை.

ஏனென்றால், இந்தக் கொள்கலன் முனையத்தைக் கட்டியுள்ள, சீன அரச நிறுவனமான சைனா மேர்ச்சன்ட் ஹோல்டிங்ஸ் இன்ரநசனல் நிறுவனத்துக்கே இதன் 85 வீத உரிமையும் இருக்கிறது.

இந்தத் திட்டத்துக்கு முதலீடு செய்த சீன நிறுவனமே, அதை 30 ஆண்டுகளுக்கு நிர்வகிக்கவும் போகிறது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத் திட்டத்தை விட இது வித்தியாசமானது.

அம்பாந்தாட்டைத் துறைமுகத்தை சீனா கட்டிக் கொடுத்தாலும், அதனை முகாமைத்துவம் செய்வது, சீனா அல்ல.

இலங்கைத் துறைமுக அதிகாரசபையே அதனை நிர்வகிக்கிறது.

ஆனால், கொழும்பு தெற்கு கொள்கலன் முனையத்தை, சீன நிறுவனமே நிர்வகிக்கப் போகிறது.

சீன நிறுவனம் என்றால், அது ஒன்றும் தனியார் நிறுவனம் அல்ல. சீன அரசு நிறுவனம் தான்.

இதன் மூலம், இலங்கையில் சீனாவின் செல்வாக்கு மேலும் உறுதிப்படுத்தப்படும்.

இந்த முனையத்தை உருவாக்கியதன் மூலம், கிழக்கு - மேற்கு கடற்பாதையில், சிங்கப்பூருக்கும், டுபாய்க்கும் இடையில், தனக்கென ஒரு தனியான கடல்வழித்தடத்தை சீனா உருவாக்கிக் கொண்டுள்ளது.

இதுவரை, கிழக்கு - மேற்கு கடற்பாதையில் பயணிக்கும் சீனாவின் பாரிய கப்பல்கள், அவ்வப்போது இந்தியத் துறைமுகங்களின் தயவை நாட வேண்டியிருந்தது.

ஆனால், அதற்கான தேவையை இல்லாமல் செய்து விட்டது கொழும்பு தெற்கு கொள்கலன் முனையம்.

இதன் மூலம், இந்தியப் பெருங்கடல் கடற்பாதையில், தனக்கெனப் பிரத்தியேகமானதொரு கடற்பாதையை சீனா உருவாக்கியுள்ளது.

இது இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக அமையும் என்ற கருத்துக்கள் ஊடகங்களில் பரவலாக வெளியாகின்ற போதிலும், இலங்கை அரசாங்கம் அதனை ஏற்கத் தயாராக இல்லை.

சீனாவிடம் கொடுக்கப்பட்டுள்ள போதிலும், இராணுவ ரீதியான பயன்பாட்டுக்கு இந்தத் துறைமுகங்களைப் பயன்படுத்திக் கொள்ள இடமளிக்காது என்று புதுடெல்லிக்கு உத்தரவாதம் அளித்துள்ளது இலங்கை.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவின் உதவியுடன் அமைக்கப்பட்ட போது கொடுக்கப்பட்ட இதே வாக்குறுதி மீண்டும் கொழும்புத் துறைமுக கொள்கலன் முனையத் திறப்பின் போதும் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த வாக்குறுதியை இந்தியா வேறு வழியின்றி நம்ப வேண்டிய நிலையில் உள்ளது.

இதுபோன்ற இலங்கையின் எத்தனையோ வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளன என்பதை இந்தியா உணர்ந்தேயிருந்தாலும், இந்த விடயத்தில், நம்புவதை விட வேறு வழியில்லை.

ஏனென்றால், இலங்கையில் சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதை இந்தியாவினால் தடுக்க முடியவில்லை என்பதே உண்மை.

கொழும்பு தெற்குத் துறைமுகத்தை சீனா கைப்பற்றியுள்ளது இந்தியாவுக்கு இரண்டு விதங்களில் அச்சுறுத்தலானது.

இங்கு கைப்பற்றியுள்ளது என்ற பதம் பயன்படுத்தப்படுவது மிகவும் பொருத்தமானது.

போரின் மூலம் பிடிப்பதற்குப் பதிலாக, இலங்கையில் பொருளாதார பலவீனத்தைப் பயன்படுத்தி, தனது முதலீட்டின் மூலம், சீனா இதனைச் சாதித்துள்ளது.

பலவந்தமாகவா, அல்லது சம்மதத்துடனா இதனை சீனா எடுத்துக் கொண்டது என்பது முக்கியமல்ல.

துறைமுகத்தின் மீதான அதிகாரத்தை அதன் கைக்குள் கொண்டு வந்துள்ளது என்பதே முக்கியமானது.

இதன் மூலம் இந்தியா, பொருளாதார ரீதியாகவும், பாதுகாப்பு ரீதியாகவும் அச்சுறுத்தல்கள் ஏற்படும் என்று உணர்கிறது.

இந்தியாவின் தூத்துக்குடி, கொச்சின் ஆகிய இரண்டு துறைமுகங்களுக்கு மிக அருகாக இந்தக் கொள்கலன் முனையம் அமைந்துள்ளது.

இதனால், இந்தத் துறைமுகங்களின் வருவாய் பாதிக்கப்படும் என்று கருதப்படுகிறது.

ஆனால் இந்தத் துறைமுகங்கள் ஆழமானவையோ, பெரிய கப்பல்கள் வந்து செல்லத் தக்கவையோ இல்லை எனறும், கொழும்பு முனையத்தை பயன்படுத்துவதால், இந்திய நிறுவனங்கள் விரைவாக சரக்குகளை கையாளலாம் என்றும் இலங்கைத் தரப்பில் ஒரு நியாயம் கூறப்படுகிறது.

இதுமட்டுமல்ல, இதுவரை சர்வதேச கடற்பாதை வழியாக செல்லும் பாரிய கப்பல்கள் சென்னைத் துறைமுகத்தைத் தேடிச் சென்ற நிலையும் மாறப் போகிறது.

கிழக்கு, அல்லது மேற்கு நோக்கிப் பயணிக்கும் கப்பல்கள், உட்புறம் பயணித்து சென்னைத் துறைமுகத்தை தேடிச் செல்வதற்குப் பதிலாக, தமது பயணப்பாதைக்கு அருகேயுள்ள கொழும்பு கொள்கலன் முனையத்தை நாடி வரும்.

இது இந்தியத் துறைமுகங்கள் எதிர்கொள்ளப் போகும் சவால்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை அமைக்கத் திட்டமிட்ட போது, இந்தியாவிடமே முதலில் உதவி கோரியிருநதார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

ஆனால், மிகப் பெரியளவில் முதலீடு செய்வதற்கு அது உகந்த திட்டமல்ல என்று நிராகரித்து விட்டது இந்தியா.

இந்தியா அவ்வாறு நிராகரிக்க இரண்டு காரணங்கள் இருந்தன.

ஒன்று, இதனால் பெரியளவில் பயனில்லை என்பது.

இரண்டாவது, இது திருகோணமலையில் தமது கட்டுப்பாட்டில் உள்ள எண்ணெய் குதங்களுக்கும், தமது நாட்டில் உள்ள துன்றமுகங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது.

இந்தியா நிராகரித்த பின்னரே இந்த வாய்ப்பு சீனாவைத் தேடிச் சென்றது.

கொழும்பு துறைமுக கொள்கலன் வாய்ப்பையும் இந்தியா உதறித்தள்ள காரணம், தமது துறைமுகங்கள் பாதிக்கப்பட்டு விடும் என்பதால் தான்.

இந்தியாவின் தவறான கொள்கையினாலும், கணிப்பினாலும், இந்த வாய்ப்புகள் சீனாவின் கைகளுக்குப் போயின.

இப்போது, இந்தியாவினால் தனது துறைமுகங்கள் பாதிக்கப்படுவதையும் தடுக்க முடியவில்லை.

பாதுகாப்பு அச்சுறுத்தலையும் முறியடிக்க முடியவில்லை.

இத்தகைய நிலையில் தான், கொழும்பு, அம்பாந்தோட்டைத் துறைமுகங்களை எந்தவொரு இராணுவத் தேவைக்கும் சீனா பயன்படுத்த இடமளிக்கமாட்டோம் என்று இலங்கை அரசாங்கம் கொடுத்துள்ள, வாக்குறுதியை நம்பிக் கொள்ளவும், அதனால் திருப்திப்பட்டுக் கொள்ளவும் வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது இந்தியா.

இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்குக் கொடுக்கின்ற வாக்குறுதிகளை ஒருபோதும், காப்பாற்றவில்லை.

13வது திருத்த விவகாரத்தில், இலங்கை கொடுத்த வாக்குறுதிகளுக்கு என்ன நடக்கிறது என்பது இந்தியாவுக்கு நன்றாகவே தெரியும்.

ஆனாலும், சீனா விவகாரத்தில், இலங்கையின் வாக்குறுதிகளை அது வேறுவழியின்றி நம்பியே ஆக வேண்டிய நிலை தான் இருக்கிறது.

ஏனென்றால் இந்தியாவின் சொல்லுக்குக் கட்டுப்படுகின்ற நிலையை மீறி, இலங்கை மீதான சீன ஆதிக்கம் பெரியளவில் வளர்ந்து விட்டது.

எனவே, இந்தியாவுக்கு இதுபோன்ற வாக்குறுதிகளை நம்புவதை விட வேறு வழியில்லை. ●

நவரத்தினம் கண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுந்தரச் சிரிப்பு...




நன்றி: சிரித்திரன்



**அரசியல்வாதி (மேடையில்)**
நான் ஒரு போதும் வாக்கு மாற மாட்டேன் என உறுதி கூறுகிறேன். போன தேர்தலில் என்ன சொன்னேனோ அதனையே இந்தத் தேர்தலிலும் சொல்லுகிறேன்... அதனையே நிச்சயம் அடுத்த தேர்தலிலும் கூறுவேன்....!



அரசியல்வாதி: நாட்டில் மக்களாகிய நீங்கள் ஆட்சியை அடிக்கடி மாற்றுவது சரியென்றால் நான் கட்சி மாறுவது மட்டும் எப்படிப் பிழையாகும்.

## வாய் விட்டு சிரிப்போம்

இன்று வாழ்வில் நாம் திரும்பிப் பார்க்கும் திசையில் எல்லாம் தெரிபவை இரண்டு.

அவைகளில் ஒன்று திருப்தி. மற்றொன்று பேராசை. இந்த இரண்டும் தனித் தனியாக்கூட இல்லை. உள்ளங்கையும் புறங்கையும் போல ஒன்றின் இருபக்கங்களாக இருக்கின்றன.

யாரிடம் பேராசை இருக்கிறதோ அவரிடம் மறுபுறம் திருப்தியும் இருக்கிறது. கிடைத்தறகுப் திருப்திப்பட்டுக் கிடைக்க வேண்டியதற்காக உழைக்கும் ஆரோக்கியமான மனநிலை தென்படவில்லை.

காரணம், மன இறுக்கம், மன உளைச்சல்.

இந்த மன புகைச்சலிருந்து விடுபட உதவுவது மனம் விட்டு சிரிப்பது.

N.S. கிருஷ்ணன் பாடிய சிரிப்பு பாடலைப் பலரும் கேட்டு இருக்கலாம்.

சில சிரிப்புகளை சிறிது அலசுவோம்.

வாய்விட்டு சிரிப்பது - நமட்டு சிரிப்பு - வாயை மூடிக்கொண்டு சிரிப்பது - ஓகோ என்று சிரிப்பது- அவுட்டு சிரிப்பு - வெடிச்சிரிப்பு - 'களுக்'கென்று சிரிப்பு - பயங்கரமாய் சிரிப்பது - புன்சிரிப்பு - வயிறு வலிக்க சிரிப்பது - விழுந்து, விழுந்து சிரிப்பது - குபீரென்று சிரிப்பு - மனதுக்குள்ளே சிரிப்பு [illegible] தட்டளவில் சிரிப்பு, வெறிச்சிரிப்பு - கலகலவென்று சிரி[illegible]க்'கென்று சிரிப்பு- குலுங்ககுலுங்க சிரிப்பு- கடைசியாக வ[illegible]தான் கபட சிரிப்பு விடுபட்ட சிரிப்பு இருந்தால் தெரிவிக்கலாம்.

நகைச்சுவை என்பது சில சமயம் கேலி செய்வதற்கு பயன்படுத்தப்படுகிறது. எதையும் கேலி செய்வதற்கு விஷயத் தெளிவு வேண்டும். அதை நகைச்சுவையோடு கேலி

செய்வதற்கு புத்திசாலிதனம் வேண்டும். அதுவும் பிறர் மனம் புண்படாமல் கேலிசெய்ய.

கேலி செய்வதற்கு பக்குவமான அறிவு வேண்டும். அத்துடன் சிந்தனையை தூண்டிவிட தெளிந்த மனம் வேண்டும்.



நம்ம தலைவர் பிழைக்கத் தெரிந்தவர். வீட்டுக்குளளேயே சின்னக் கோயிலைக் கட்டி பெரிய உண்டியலையும் வைத்து விட்டாரே...



சாத்திரியாரே.... நீங்க தானே முன்பு நாக தோஷத்திற்கு நிவர்த்தி சொன்னீர்கள்...?

ஆமாம். அதுக்கென்ன இப்போ?

இப்போ எனக்கு ஜலதோஷம் அதுக்கும் நீங்கதான் நிவர்த்தி சொல்லனும்.



காணி உறுதி எழுதிற சட்டத்தரணியை வேட்பாளராய் போட்டது பிசகாப்போச்சு.

ஏன் என்னவாயிற்று.

தேர்தல் வாக்குறுதிகளைஎழுதித்தரச் சொன்னா முத்திரைக் காசும் எழுத்துக் கூலியும் கேட்கிறார்.



நம்ம எழுத்தாளர் ஏகாம்பரம் தன் புத்தக வெளியீட்டு விழா அழைப்பிதழில் என்ன எழுதியிருக்கிறார் பார்த்தாயா?

என்ன?

சிறப்பு பிரதிக்கு அழைக்கபட்டுள்ளோர் அன்பளிப்பு பணத்தை தன்கையில் வெளப்படையாக தந்து பிரதியைப பெற்றுக் கொள்ளட் டாம்.

ஏனாம்?

போன வெளியீட்டு விழாவிலை எல்லாரும் வெறும் "என்வலப்பினை" தந்து புத்தகம வாங்கி விட்டு போய்விட்டார்களாம்?



என்ன நம்ம தலைவர் திடீரெண்டு செருப்பு வியாபாரத்தில் இறங்கீட்டார்.....

தேர்தல் கூட்டங்களிலே அவரை நோக்கி வீசப்பட்ட செருப்புகளையே மூலதனமாக்கி கடை விரிச்சிட்டார்.



"முதல்ல 'லஞ்சம்' என்று படம் எடுத்தீங்க.... பிறகு 'ஊழல்' என்று படம் எடுத்தீங்க.... இப்ப மோசடி என்று எடுக்கிறீங்க... ஏன் இதனை விட நல்ல பெயரில் படம் எடுக்கலாம் தானே.....

"நான் எடுக்கிற படமெல்லாம் அரசியல் படம தானே.
அதற்கு இதனை விட பொருத்தமான பெயர் அமையாது பாருங்க....."



என்ன நம்ம தலைவரோட எல்லாரும் ஏன் சண்டை பிடிக்கிறார்கள்?

சமாதான நீதவான் பதவிக்கு தங்களின் பெயர்களை சிபார்சு செய்யவில்லை என்று தான்!

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண் பவர் எங்கள் தலைவர்....!

எப்படி உறுதியாகச் சொல்கிறாய்?

மக்களுக்கெல்லாம் தேர்தல் அறிக்கை யோடு ஒவ்வொரு 'ஜோக்' புத்தகமும் இலவசமாகக் கொடுக்கிறார்....





### சிரிப்பு மொழிகள்

☹ நாட்டில் நல்லாட்சி நடக்கும் போது ஏழைகள் இருப்பது அவமானம்.

தவறான ஆட்சி நடக்கும் போது பணக்காரர்கள் இருப்பது கேவலம்.

-ஜோஷ் பில்லிங்க்ஸ்-

☹ தற்போது நாட்டுக்குத் தேவை வேலை வெட்டி இல்லாத அரசியல்வாதிகள்

-ஆன்ஜிலா டேவிஸ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஹொலிவுட்டில் ஹொரர் பட்டியலில் வருகின்ற சமீபத்திய திரைப்படங்கள் யாவும் முகம் சுளிக்க வைக்கும் கோரக் காட்சிகள், ஆபாசக் காட்சிகளைக் கொண்டுதான் திகழ்கின்றன. விஎஃப்க்ஸிர்க்கும், மேக்கப்பிற்கும் முக்கியத்துவம் தரும் அளவிற்கு கதைக்கோ, கதை மாந்தர்களுக்கோ அளிக்கப்படுவதில்லை. சமீபத்தில் வெளியாகிய 'ஈவில் டெட்(2013)', 'ஹேஸ்டெ-3', 'டெக்ஸ் செயின்', 'சா,' 'மாஸைகர்' இதற்கொரு உதாரணம்.

திரைக்கதையை ஒளி-ஒலி அமைப்பை சாதுர்யமாகக் கையாண்டு ரசிகர்களை திகிலடையச் செய்வதில் கில்லாடி 'ஜேம்ஸ் வான்'. இவர் இயக்கிய 'சா', 'இன்சீடியஸ்', 'டெட் சைலன்ஸ்' முதலிய படங்கள் கதையிலும் கையாளப்பட்ட விதத்திலும் தனித்தன்மை பெற்று விளங்கியது. உண்மை சம்பவத்தின் அடிப்படையில் அமைந்ததாக எடுக்கப்பட்டுள்ள 'தி கொன்ஜுரிங்' திரைப்படமோ 'எக்ஸார்ஸிஸம்', 'இன்சீடியஸ்', 'போல்டர் கீஸ்ட்' முதலிய படங்களின் கருவாகத்தான் திகழ்கின்றது. என்ன வித்தியாசம் என்றால் முந்தைய படங்களில் நிகழ் காலத்தில் சொல்லப்பட்ட கதை. இப்படத்தில் பீரியாடிக் நிகழ்வாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

புதிதாக ஒரு பெரிய வீட்டிற்குள் குடியேறும் மிடில் ஏஜ் தம்பதியினர் அவர்களின்




ஐந்து மகள்கள். வீட்டிற்குள் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளும் இவர்களை ஸ்தம்பிக்கச் செய்கிறது. பாதாள அறை, மரக் கப்போர்டின் பின் ஒளிந்திருக்கும் பாதை, இப்படி வீட்டைச் சுற்றி பல மர்மங்கள். வீட்டிலிருக்கும் நாய் இறக்கிறது. அடுத்தடுத்து வீட்டிலுள்ள அனைவரும் பல திக் திக் அனுபவங்களை சந்திக்கின்றனர். கண்டிப்பாக வீட்டில் அமானுஷ்ய சக்தி ஒளிந்திருப்பதை வீட்டார்கள் உணர, ஹாரர் ஹன்டர், லாரைன் மற்றும் எட்வாரன் தம்பதியினரின் துணையை நாடுகின்றனர்.

வீட்டிற்கு வந்து ஆய்வு செய்யும் இத்தம்பதியினர், வீட்டிலுள்ள மனிதர்கள் மீது அமானுஷ்ய சக்திகளின் தடம் பதிந்துள்ளதாகவும் இவர்கள் வீட்டை விட்டு வெளியேறினாலும் அது இவர்களை விடாது என அதிர்ச்சி அடைய வைக்க, மேலும் இதற்கு ஒரே விடை எக்ஸார்ஸிஸம் தான் ஆனால், இதன் முடிவுகள் விபரீதமாக அமையும் என எச்சரிக்கின்றனர். கடைசி யில் பேயை விரட்டினார்களா, குடும்பம் தப்பித்ததா என்பது மீதம்.

மனித நடமாட்டம் குறைந்து காணப்படுகின்ற ஒரு கிராமம். அங்கே ஒரு நதி. அதன் அருகே பெரிய ஆலமரம், சுற்றி நிசப்தம். இந்த சூழலில் அமைந்திருக்கும் ஒரு பூத் பங்களா. போதாக்குறைக்கு 1970ல் நடக்கும் கதையென்பதால் விஞ்ஞான ரீதியில் பெரிய தொலைத் தொடர்பும் அமையப் பெறமுடியாத ஒரு சூழல். கதைக்கேற்ற கதைக்களத்தை அமைத்ததிலேயே 'ஜேம்ஸ் வான்' முதல் வெற்றி பெறுகிறார்.

பேய் வரும் காட்சியை விட, அதற்கு கொடுக்கப்படுகின்ற காட்சிகள் தான் திகிலாக அமைந்துள்ளது. முகமெங்கும் வெள்ளை நிற பெயின்ட் அடித்து வருகின்ற பேயைப் பார்க்கும் போது சிரிப்பு எழுகின்றது.

படத்தில் அமையப் பெற்றிருந்த கலர் டோனே படத்திற்கு பெரிய பலம். யாவரும் நலம் திரைப்படத்தில் காணப்பட்ட ஒரு விதமான டார்க் லைட் டோனில் படம் முழுவதும் அமைந்துள்ள விதம். தேவையற்ற ஒப்ஜெக்ளின் மீது மனதை சிதறடிக்காமல் கதையோடு தங்க வைக்கிறது. 'ஜேம்ஸ் வான்' இயக்கிய அனைத்து பேய் படங்களிலும் இதைப் போன்ற நிழற்படம் அமைந்திருக்கும்.

படத்தில் வரும் பல காட்சிகள் ஜேம்ஸ் வான் முன்பு இயக்கிய 'இன்சீடியஸ்' திரைப்படத்தின் கூடுதல் பிம்பமாக விளங்குகிறது. வீட்டிற்குள் பேய் இருப்பதை உணர்ந்து நாய் குரைப்பது, ஆங்காங்கே கதவு டப் டப் என்று அடித்துக் கொள்வது, தொலைக் காட்சி தானாக இயங்குவது இதைப் போன்று பழகப்பட்ட சில க்ளீசே காட்சிகள் அமைந்திருந்தாலும், படமாக்கிய விதத்திலும், கதாபாத்திரங்களின் நடிப்பிலும் 'தி கான்ஜுரிங்' வேறுபட்டு நிற்கிறது.

மொத்தத்தில் தேவையற்ற ரத்த கோரங்களோ, ஆபாசமோ திணிக்கப்படாமல் ரசிகர்களை சீட்டின் நுனியில் அமர வைத்து அலற வைக்கும் ப்யூர் ஹாரர். வெகு நாளைக்குப் பிறகு ஒரு நல்ல பேய் படம் பார்த்த திருப்தியைத் தருகின்றது.




# கதிரேசனின் மகனா தனுஷ் புதிய பெற்றோரால் குழப்பம்



இந்தியில் ராஞ்சனா படத்தின் மூலம் மிகப் பிரபலமாகி வரும் தனுஷிற்கு புதிய சிக்கல் ஒன்று உருவாகியுள்ளது.

இயக்குநர் கஸ்தூரிராஜாவின் மகன் என்ற அடையாளத்துடன் கடந்த 2002ம் ஆண்டு துள்ளுவதோ இளமை படத்தின் மூலம் அறிமுகமானவர் தனுஷ்.

தனுஷ் அறிமுகமான அதே ஆண்டில் தொலைந்த தன் மகன் கலைசெல்வன் தான் தனுஷ் என்று புதிய சர்ச்சையை உருவாக்கியுள்ளார் சிவகங்கை பேருந்து நிலையத்தில் நேரக் கணிப்பாளராக பணியாற்றும் கதிரேசன்.

10ம் வகுப்பில் 365 மதிப்பெண் எடுத் திருந்த கலைச்செல்வன் மேற்கொண்டு படிக்க விருப்பமில்லாததால் கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டு 2002 ஆம் ஆண்டில் வீட்டை விட்டு வெளியே சென்றுவிட்டாராம் கலைச்செல்வன்.

அக்கடிதத்தில் அம்மா என்னை மன்னிச்சிடுங்க, எனக்கு இந்த படிப்பு பிடிக்கல. அதனால் நான் ஊரைவிட்டே போறேன். எனக்கு எப்பத் தோனுதோ அப்ப உங்களைத் தேடி வருவேன் என்று எழுதி வைத்துவிட்டு சென்றுள்ளார்.

இதுகுறித்து கதிரேசன் கூறுகையில், தனுஷ் எங்களது மகன் என்று ஒப்புக்கொண்டால் மட்டும் போதும், அவரது சொத்து எதுவும் எங்களுக்குத் தேவையில்லை. எனது மகன் என்று நிரூபிக்க பரிசோதனைக்கு கூட வரத் தயாராக உள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

திருப்பத்தூரில் கலைச்செல்வன் காணாமல் போனதாகப் பதியப்பட்ட வழக்கு இன்று வரை முடிவுக்கு வராமல் இருக்கிறதாம். தனுஷை சுற்றும் இந்த சர்ச்சைகளுக்கு அவரின் வார்த்தைகள் தான் தற்போது முற்றுப்புள்ளியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஐ படம் விரைவில்


அந்நியனைத் தொடர்ந்து பிரமாண்ட இயக்குனர் ஷங்கரும், சீயான் விக்ரமும் இணைந்துள்ள படம் ஐ. இப்படத்தில் மதராசப் பட்டினம் எமி ஜாக்சன் கதாநாயகியாக நடிக்கிறார். ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கும் இப்படத்துக்கு பி.சி.ஸ்ரீராம் ஒளிப் பதிவு செய்கிறார்.

ஆஸ்கார் பிலிம்ஸ் தயாரிக்கும் இப்படத்தில் பல கெட்டப்புகளில் நடிக்கிறார் விக்ரம். அதற்காகமாதக்கணக்கில் உடற்பயிற்சிகளை செய்து தனது உடல் எடையை அதிகப்படுத்தி, குறைத்து என மாறி மாறி நடித்து வருகிறார் விக்ரம். சீனா, பாங்கொங், பொள்ளாச்சி, கொடைக்கானல் மற்றும் சென்னை இடங்களில் படமாகி வந்த ஐ படப்பிடிப்பு இப்போது கடைசிக் கட்டத்தை நெருங்கி விட்டது.

தற்போது சென்னையிலுள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் நடைபெறவிருக்கும் படப்பிடிப்பு மொத்தம் 30 நாட்கள் நடைபெறுகிறதாம்.

அதோடு, கிட்டத்தட்ட அனைத்துக் கட்ட படப்பிடிப்பும் முடிந்துவிடும் என்கிறாரகள்.

இந்த நிலையில், இதுவரை ஐ படம் எந்த மாதிரியான கதைக்களம் என்பதே வெளியில் கசியாமல் இருந்தது. ஆனால், இப்போது ஒலிம்பிக்கை மையமாக வைத்து இப்படத்தின் கதை உருவாகி வருவதாக யூனிட் நபர்கள் கிசுகிசுக்கிறார்கள்.



## நான் துப்பட்டாவுடன் சண்டை போடுபவன் – ஷாருக்கான்

பொலிவுட் சினிமாவின் முன்னணி நடிகரான ஷாருக்கான் தான் துப்பட்டாவுடன் சண்டை போடும் ரொமான்ஸ் ஹீரோ என்று கூறியுள்ளார்.

ஷாருக்கான் தற்போது ரோகித் ஷெட்டி இயக்கத்தில் சென்னை எக்ஸ்பிரஸ் எனும் படத்தில் நடித்துள்ளார். இவர் ஜோடியாக தீபிகா படுகோனே நடித்துள்ளார். இப்படத்தின் பெரும்பகுதி தென்னிந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் நிறைய காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன.

இப்படம் குறித்து ஷாருக்கான் கூறுகையில்,

வடநாட்டு பையனுக்கும், சென்னை பெண்ணுக்கும் ஏற்படும் காதல் தான் சென்னை எக்ஸ்பிரஸ். எனக்கு தமிழ் ரசிகர்களை மிகவும் பிடிக்கும் என்பதால் தலைவா என்றொரு பாடலை எடுத்துள்ளோம். இந்த பாடலுக்கு ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. சினிமாவில் ஆக்ஷன் ஹீரோவாக வேண்டும் என்ற எண்ணத்தில் வந்தேன் ஆனால் என்னை துப்பட்டாவுடன் சண்டை போடும் ரொமான்ஸ் ஹீரோவாக மாற்றிவிட்டார்கள்.

மேலும் என்னை வைத்து ஆக்ஷன் படம் எடுக்க தயாராக இருக்கும் தமிழ் இயக்குநர்கள் இருந்தால் நாளைக்கே சென்னை வந்திடுவேன் என்கிறார் ஷாருக்கான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க.பஞ்சாங்கம்

> சினுவா அச்சிபே தன்னுடைய முதல் படைப்பான " பொருட்கள் விலகித்தனியாக வீழ்கின்றன" (1958) என்ற நாவல் மூலம் இலக்கிய உலகில் பெருங்கவனம் பெற்றார். இந்த நாவலில் தனக்குள் பரிச்சயமான மரபான இக்போ (Igbo) கலாச்சாரத்திற்கு ஐரோப்பியக் கலாசாரத்திற்கும் இடையிலான மோதல்களைச் சித்தரித்தார்.

# வெளி உலகிற்கு ஆபிரிக்காவைக் கொண்டு சென்ற கலைஞர்

**நோ**யின் கடுமை தாங்காமல் தனது 82ஆவது வயதில் சினுவா அச்சிபெ (1930-2013) ஏப்ரல் மாதம் இறந்து போனார். "நவீன ஆப்பிரிக்க இலக்கியத்தின் தந்தை" என்று கொண்டாடப்படும் ஆதிக்கப் பண்பாட்டிற்கு எதிராகத் தனது நாவல்கள், கட்டுரைகள், கவிதைகள் மூலமாகச் சொந்தப் பூமியின் பண்பாட்டை முன் நிறுத்தியவர் ஆவார். தங்கள் சொந்தப் பண்பாட்டு அடையாளங்களின் அருமையை ஆங்கிலம் பேசும் மேற்குலக மனிதர்களின் நடுவில் அவர்களின் ஆங்கில மொழி மூலமாகவே எடுத்துச் சென்று நிலை நாட்டிய முன்னோடியாக விளங்கினார். 1902இல் எழுதி மேற்குலக் இலக்கிய வெளியில் பெரிதும் கொண்டாடப்பட்ட ஜோசப் கொண்ராட்னுடைய "இருட்டின் இதயம்" (Heart of Darkness) என்ற படைப்பு "வெள்ளை மனிதர்களின் இன வெறுப்பை எதிரொலிக்கும் நூலெனக்" கடுமையாக விமர்சனம் செய்ததன்மூலம் காலனித்துவத்திற்கு எதிராகக் கிளப்பிய "பின் காலனித்துவ விமர்சன முறைக்கு" மாதிரியாக அது விளங்கியது. "ஓர் ஆபிரிக்கப் பிம்பம்: கொண் ராட்னுடைய 'இருட்டின் இதயத்தில்' வெளிப்படும் இனவெறுப்பு" என்ற அந்தக் கட்டுரை, மசாச்சுசெட்ங் பல்கலைக்கழகத்தில் 1975இல் அவர் நிகழ்த்திய உரையாகும். இந்த உரை 1977 இல் கட்டுரையாக வெளிவந்த போது பெரிதும் வாசிக்கப்பட்டது; விவாதிக்கப்பட்டது; ஆங்கில மொழிப் பாடத்திட்டத்திலும் இடம் பெற்றுக் கற்பிக்கப்பட்டது.

இந்தக் கட்டுரையில் சினுவா அச்சிபெ, கொண்ராட்னுடைய 'இருட்டின் இதயம்' என்ற அவர் தம் படைப்பு, ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தை விமர்சனபூர்வமாக அணுகியுள்ளது என்றாலும் அது, ஆப்பிரிக்க மக்களைக் காட்டுமிராண்டிகளாகவும் மனிதர்களிலும் கீழ்ப்பட்ட உயிர்களாகவும், ஊமைகளாகவும் உலகிற்கு முன்னால் காட்டியது. அந்த நாவலின் கலைத் தன்மையை ஏற்றுக்கொள்ளுகிற அதே நேரத்தில், அதை மட்டும் வைத்துக் கொண்டு அதைக் கொண்டாடுவது வெறுக்கத்தகுந்தது; கண்டிக்கத் தகுந்தது என வாதாடினார்; நாவலாசிரியரை அந்நாவலைத் தலைமேல் வைத்துக் கொணடாடும் மேற்குலக விமர்சகர்களைத்தான் பெரிதும் தாக்கினார்; சிறிதும் வெட்கமில்லாமல் அந் நாவலுக்குள் வெளிப்படும் இனவெறுப்பைக் குறித்துக் கவலைப்படாமல் கண்ணை மூடிக் கொள்கிறார்களே என விமர்சித்தார். மேலும் இந்தக் கட்டுரையில் இலக்கியக் கோட்பாடு சார்ந்த ஒரு விவாதத்தையும் மேலெடுத்தார்: ஒரு பிரதியை 'திருநூலா க்கும்' (மறைநூலாக்கும்) முறையியலையும், கலையில் சமூக மதிப்பீடு மற்றும் அறம் பெறும் இடம் குறித்தும் பேசினார். இவற்றின் அடிப்படையில் ஒரு சிக்கலான வினாவை எழுப்பினார்; ஓர் உயர்ந்த இலக்கியத்தில் இன வெறுப்பு அல்லது கண்டித்ததாக வேறு சில பார்வைகள் வெளிப்பட்டால் அந்த இலக்கியத்தை நாம் எவ்வாறு எதிர் கொள்வது? எனக் கேட்டார். அவரே பதிலும் கூறினார். அறம் சார்ந்த பார்வைக்கு அழுத்தம் தந்தார்; கலை கலைக்காக மட்டுமே என்ற ஒற்றை வாதம் சார்ந்த அழகியலை மறுத்தார்; ஓர் எழுத்தில் வெளிப்படும் அழகியல் கூறுகளை அல்லது அதன் மொழித்திறனை மட்டும் பாராட்டிக் கொண்டு மிதப்பதைப் புறம்தள்ளினார்; எந்தவொரு கலையும் அது தோன்றும் சமூகத்தின் பார்வைகளையும் மதிப்பீடுகளையும் எதிரொலிக்கிறது. மக்கள் நடுவில் கொண்டு செல்லுகிறது என்று கலையின் சமூகம் சார்ந்த இலக்கியக் கோட்பாட்டை வலியுறுத்தினார்: "ஒரு நாவல் படைப்பாளி ஓர் ஆசிரியரைப் போன்றவர்" (1965) என்றார்.

'இருட்டின் இதயம்' குறித்த இவருடைய விமர்சனத்திற்குப் பதில் காணும் முகத்தான், அந்த நாவல், உண்மையான ஆப்பிரிக்காவை அடையாளப்படுத்தவில்லை என்றும், ஆப்பிரிக்கா என்பது தனிப்பட்ட ஓர் உளவியல் மரபியல் மரபைச் சுட்டும் உருவகம் நன்மைக்கும் தீமைக்கும் நடக்கும் போராட்டத்தைக் குறிக்கிறது என்றும் விளக்கினர். ஆனால் இத்தகைய விமர்சனங்களுக்கெல்லாம் அர்த்தமில்லை; அந்த நாவல் அடிப்படையில் ஆப்பிரிக்காவை, அந்த மக்களை, அந்தப் பண்பாட்டை வெள்ளை ஐரோப்பியக் கண் கொண்டே சித்தரித்துள்ளது எனப் பதிலிறுத்தார்.

கிழக்கு நைஜீரியாவிலுள்ள ஒகிடி என்ற ஒரு கிராமத்தில் பிறந்த சினுவா, காலனித்துவத்தின் கோரமுகத்தைத் தானே நேரடியாகக் காணும் அனுபவத்தைப்பெற்றார். 'நைஜீரியா' ஐரோப்பியர் காலனித்துவ அதிகாரம் கட்டமைத்த ஒரு தேசமாகும். இந்தத் தேசமும் இதன் ஆதிகுடிகளும் 1906 தொடங்கி விடுதலையைச் சாதித்த 1960 வரை பிரிட்டீஸ் ஏகாதிபத்தியத்தின் ஆளுகைக்குள் கொண்டு வரப்பட்டனர்; சினுவா அச்சிபெயின்தந்தை, இவான்றிலிக்கல்புரொட்டெஸ்டன்ட் மதத்தைச் சார்ந்த சர்ச்சில் பணிபுரிந்தார். எனவே காலனித்துவாதிகள் நடத்திய உயர்நிலைப் பள்ளியிலும், அரசுக் கல்லூரியிலும் படிக்க வாய்ப்பு கிடைத்தது. 1948இல் இளங்கலைக்கான பயிற்சி பெறுவதற்கு புதிதாக உருவான பல்கலைக்கழகக் கல்லூரியில் சேர்த்தனர். பின்பு அந்தக் கல்லூரிலண்டன்பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்டது. 1953இல் பட்டப்படிப்பு முடித்த நிலையில் நைஜீரிய வானொலி நிறுவனத்தில் தயாரிப்பாளராகப் பணியாற்றினார். 1961இல் இருந்து 1966 வரை 'நைஜீரியாவின் குரல்' என்ற நிகழ்ச்சியை உருவாக்கி இயக்கினார்.

சினுவா அச்சிபெ தன்னுடைய முதல் படைப்பான "பொருட்கள் விலகித்தனியாக வீழ்கின்றன" (1958) என்ற நாவல் மூலம் இலக்கிய உலகில் பெருங்கவனம் பெற்றார். இந்த நாவலில் தனக்குள் பரிச்சயமான மரபான இக்போ (Igbo) கலாசாரத்திற்கும் ஐரோப்பியக் கலாசாரத்திற்கும் இடையிலான மோதல்களைச் சித்தரித்தார். உலக அளவில் இந்நாவல் புகழ்பெற்று, ஏறத்தாழ 50 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு இலட்சக் கணக்கான படிகள் விற்றன. 1967இல் நைஜீரியா பல்கலைக்கழகத்தில் முதுநிலை ஆராய்ச்சியாளராகவும், 1976இல் ஆங்கிலப் பேராசிரியராகவும் பணியாற்றினார். அமெரிக்கா உட்படப் பல்வேறு பல்கலைக் கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றியுள்ள இவர், ஆப்பிரிக்க இலக்கியத்தை வளர்த்தெடுக்கப் பெரிதும் பாடுபட்டார். குறிப்பாக 1962 முதல் 1967 வரை ஒரு பிரிட்டீஸ் பதிப்பகத்தின் ஆசிரியராகப் பணியாற்றி நூற்றுக் கணக்கான தலைப்புகளில் ஆப்பிரிக்க இலக்கியங்களை வெளிக் கொண்டுவந்தார். எழுத்தாளராக, கல்வியாளராக மட்டும் அமையாமல், பொது மக்களுக்கான ஒருவராக வெளிப்படையாக, வெடிப்புறப் பேசுபவராகவும் விளங்கினார். குறிப்பாக நைஜீரியாவில் உள்நாட்டுப் போர் (1967-70) நடந்த போது, நைஜீரியாவின் கூட்டமைப்பில் இருந்து பையாஃப்ரா சுதந்திரம் அடைவதை ஆதரித்துப் பேசினார்.

"காலனித்துவவாதிகளின்திறனாய்வு" (1975) என்ற அவருடைய செல்வாக்கு மிக்க கட்டுரை, கென்யாவின் நாவலாசிரியரும் விமர்சகருமான கூகி-வா-தியாங்கோ எழுத்துக்கள் போல ஆப்பிரிக்கா மேல் படிந்திருந்த வெள்ளை நிற மேலாதிக்கப் பார்வைகளை அகற்றி, ஆப்பிரிக்கப் பண்பாட்டின் மகத்துவத்தை உலகப் பரப்பில் கொண்டு செல்லப் பெரிதும் பயன்பட்ட கட்டுரையாகும். பிரான்ஸ் பனான், எட்வர்ட் செய்த போன்ற பின்காலனித்துவக் கோட்பாட்டாளர்கள் எவ்வாறு ஐரோப்பா, தங்களை விடுத்த மற்ற மூன்றாம் உலக மக்களை எல்லாம் "மற்றவர்களாக" வரலாற்றுக்கு வெளியே நிறுத்தியது என்பதை எல்லாம் விளக்குவதற்கு சினுவா அச்சிபெயின் எழுத்துக்கள் பெரிதும் பயன்பட்டுள்ளன.

இவர் ஆங்கில மொழியில் இலக்கியம் படைப்பதை சுகி வாதியாங்கோ போன்றவர்கள் விமர்சித்தபோது, என்து ஆங்கிலம் ஆதிக்கக்காரர்களின் ஆங்கிலம் அல்ல; என் மக்களின் பண்பாடணைடச் சுமக்கும் "ஆப்பிரிக்க ஆங்கிலமென"ப் பதில் கூறினார்.

சினுவா ஆச்சிபெ பல்வேறு உலகப் பரிசுகள் பெற்ற எழுத்தாளர் ஆவார். அவருடைய "Anthills of Savanah" என்ற நாவலுக்கு 2007இல் புக்கர் பரிசு கிடைத்தது. அதன் தேர்வுக் குழுவில் இருந்த புகழ் பெற்ற பெண்ணிய இலக்கிய கோட்பாட்டாளர் எலைன் கோவால்டர் இவ்வாறு கூறினார். இவர் நவீன ஆப்பிரிக்க நாவல் இலக்கியத்தைத் தொடங்கி வைத்தார். மற்றொரு தேர்வுக் குழு உறுப்பினரான தென்னாபிரிக்க நாவலாசிரியர் நாதின் கார்டிமர், "இவருடைய இந்தப் புனைகதை முதன்மையான உளவியல் நான்களின் கூட்டிணைவாகும். ஜாய்ஸ் பயன்படுத்த நனவோடை எழுத்து முறை கொண்டதாகும். தொடர்ச்சி இல்லாத பின்நவீனத்துவப் பணி நிறைந்ததாகும். வாசிப்பதற்கு மகிழ்ச்சி தரும் நடையுடையதாகும்" என்று வர்ணித்தார் நெல்சன் மாண்டேலா கூறும் போது, "வெளி உலகத்திற்கு ஆப்பிரிக்காவைக் கொண்டு சென்றவர்" என்றார். மேலும் "இந்த எழுத்தாளருடைய எழுத்துப் பக்கத்தில் இருக்கும் போது, சிறைச் சுவர்கள் கூடக் கீழே தாழ்ந்து விடுகின்றன" என்றார்.

1990இல் நைஜீரியாவில் ஒரு கார் விபத்தில் அடிபட்டு முடங்கிப் போன சூழலில் மருத்துவம் பார்ப்பதற்காக அமெரிக்காவிற்குச் சென்றே ஆக வேண்டிய சூழல் ஏற்பட்டது. "நான் நைஜீரியாவைப் பெரிதும் இழக்கிறேன்" என்று வருத்தப்பட்டார். தேசிய மதிப்பு வாய்ந்த "கூட்டுக் குடியரசின் காமெண்டர்" என்ற பட்டத்தை நைஜீரியா அரசு இரண்டு முறை இவருக்குக் கொடுக்க முயன்றது, இரண்டு முறையும் மறுத்துவிட்டார்". எனது தாய்மண் அமை ஆபத்தில் தவிக்கும்போது நான் பெரிதும் ஏமாற்றத்திற்கு உள்ளாகிறேன். எனவே எனது எதிர்ப்பைப் பதிவு செய்ய வேண்டும்" (2004) என்று அதிகாரத்திற்கு எதிராக ஒரு கலைஞர் உண்மையை எப்படிப் பேச வேண்டும் என்பதற்கு மாதிரியாக விளங்கினார். அவருடைய இந்த இறப்பு மூன்றாம் உலகத்தைச் சார்ந்த படைப்பாளிகளுக்கும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கும் ஒரு பாடமாக அமைந்தால் நன்றென இந்த நேரத்தில் சொல்லத் தோன்றுகிறது. இவருடைய நாவல்கள் எனக்குத் தெரிந்தவரை தமிழில் இரண்டு கிடைக்கின்றன. "Things fall aprtt" என்ற நாவல் "சிதைவுகள்" என்ற பெயரில் வெளிவந்துள்ளது. "No longer at case" என்ற நாவல் 'வீழ்ச்சி' என்று தமிழில் வெளிவந்துள்ளது. இரண்டையும் என்.கே. மகாலிங்கம் மொழி பெயர்த்துள்ளார். காலம் வெளியீடாக வந்துள்ளது. அவைகளைத் தேடிப் படிப்பது அவருக்கு நாம் செலுத்தும் அஞ்சலி மட்டுமல்ல, நவீனக் காலனித்துவம் மூன்றாம் உலக நாடுகளின் கழுத்தை இறுக்கிக் கொண்டிருக்கும் புதிய சூழலைப் புரிந்து கொள்ளவும் நமக்குப் பயன்படும்.




ஒரு நாள் காற்று வேகமாக வீசிக் கொண்டிருந்த போது, இரண்டு துறவிகள் மடத்தில் ஆடும் கொடியைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார்கள். ஒருவன் சொன்னான்:

"நான் சொல்லுகிறேன். கொடிதான் காற்றில் ஆடிக் கொண்டிருக்கிறது: காற்று அல்ல."

இன்னொருவன் சொன்னான்: "நான் சொல்லுகிறேன் காற்றுதான் அடித்துக் கொண்டிருக்கிறது: கொடி அல்ல."

அப்போது அவர்களைக் கடந்து செனறு கொண்டிருந்த துறவி இவர்கள் விவாதத்தைக் கேட்க நேர்ந்ததும் சொன்னார்: "காற்றும் ஆடவில்லை: கொடியும் ஆடவில்லை: உங்கள் மனாங்கள்தான் ஆடிக் கொண்டிருக்கின்றன."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்காபுரம்:-04



# அடங்கப்பற்றும் இராவணனும்

ஓர் ஆய்வுத்தொடர்

தலம் :திருவேணுபுரம் (93)
பண் : நட்டபாடை
"மலையான்மகள் அஞ்சவ்வரை
எடுத்த வ்வலி யரக்கன்
தலை தோளவை நெரியச்சரண்
உகிர் வைத்தவன் தன்னூர்........

தெளிவுரை: மலைமகளாகிய பார்வதிதேவியும் ஈசனும் கயிலை மலையில் வீற்றிருந்த போது, பெருமாட்டி கலங்குமாறு மலையைப் பெயர்த்த இராவணன் வலிமையையும், தலையையும், தோளையும் கலங்கும்படி தனது கால் விரலின் நகத்தால் செய்தவன் ஈசன்.

தலம் : திருஇடும்பாவனம் (181)
பண் :நட்டபாடை
தேர்ஆர்தரு திகழ்வாள் எயிற்று
ரக்கன்சிவ மலையை
ஓராது எடுத்து ஆர்த்தான்முடி
ஒருப.ஃதுஅவை நெரித்துக்
கூர்ஆர்தரு கொலைவாளொடு
குணநாமமும் கொடுத்த
ஏர்ஆர்தரும் இறைவர்க்குஇடம்
இடும்பாவனம் இதுவே

தெளிவுரை : வானத்தில் தேர்மீது இவர்ந்து வந்த ஒளி போன்ற பற்களை உடைய அரக்கன், ஆராய்ந்து பார்க்காமல் கயிலை மலையைப் பெயர்த்து ஆரவாரம் செய்தான். அஞ்ஞான்று அவனது பத்துத் தலைகளையும் நெரியுமாறு செய்த இறைவன், பின்னர் அவ்வரக்கனின் இசையால் மகிழ்ந்து தெய்வத்தன்மை பொருந்திய வாட்படையும், இராவணன் என்னும் பெயரையும் நல்கிய. சிறப்புப் பொருந்திய அவ்வீசன் விளங்கும் இடம் இடும்பாவனமாகும்.

குறிப்பு: இராவணனுக்கு இறைவனே "இராவணன்" என்ற நாமம் சூட்டியதாகவும் தெய்வத்தன்மை பொருந்திய வாட்படை வழங்கியதாகவும் குறிப்பிடப்படுவது முக்கியமான அம்சமாகும்.

முதலாம் திருமுறையில் "திருநெடுங்களம்" என்ற தலத்தைபற்றிப் பாடும்போது இலங்கையின் அமைப்பு முறைபற்றிப் பாடியதை கவனிக்கக் கூடிய தாய் இருக்கின்றது. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் இலங்கைக்கு வராமல் இராமேச்சரத்திலிருந்து தென்திசை நோக்கி இதனைப் பாடியமையும் குறிப்பிடத்தக்கது.

தலம் : திருநெடுங்களம் (566)
பண் : பழந்தக்கராகம்
குன்றின் உச்சி மேல் விளங்கும்
கொடிமதில்சூழ் இலங்கை
அன்றி நின்ற அரக்கர்கோனை
அருவரைக்கீழ் அடர்த்தாய்
என்று நல்ல வாய்மொழியால்
ஏத்திஇராப் பகலும்
நின்றுநைவார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே "

தெளிவுரை: நெடுங்களத்தில் மேவும் பெருமானே! குன்றின் உச்சியில் விளங்கும் கொடியும், மதிலும் சூழ் இலங்கையின் அரக்கர் கோனாகிய இராவணன் மாறுபட்டு நின்று, மலையைப் பெயர்த்து எடுத்தபொது அவனை அடர்த்து வலிமையை இழக்கச் செய்தவனே! நின் பெருமைகளாக இச்செயலுடன் மற்றும் பிறவும் உரைத்துப் போற்றி மனங்கசிந்து உருகும் அடியவர்களின் (பக்திப் பெருக்கினால் கசிந்து உருகுபவர் - நைவார்) இடரைக் களைவீராக.

குறிப்பு: ஒருகாலத்தில், வாயு தேவனுக்கும் ஆதிசேஷனுக்கும் வலிமையில் மிக்கவர் யார் என அறியும் போட்டி ஏற்பட்டது. அப்போது மேருமலையை ஆதிசேஷன் தனது பரந்து விரிந்த தலைகளால் மறைத்து மூடிக்கொண்டான். வாயுதேவன், கடுமையான காற்றை வீசியும் ஏதும் செய்ய முடியவில்லை. தேவர்கள் எல்லோரும் சேர்ந்து ஆதிசேஷனின் ஆற்றலுக்கு இணை இல்லை என மொழிந்து போட்டியை நிறுத்துமாறு வேண்டினர். ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேஷன் ஒரு தலையின் ஒருபகுதியைச் சற்று உயர்த்திப் பார்க்க, அக்கால அளவில் மூன்று சிகரங்கள் மேருமலையிலிருந்து வாயுதேவன் வீசிய காற்றினால் பறந்து சென்றன. அவற்றுள் இரண்டு கூறுகள் பாரதத்திலும் ஒரு கூறு இலங்கையிலும் விழுந்தது. இலங்கையில் விழுந்த இச்சிகரத்தின் சிறப்புத் தோன்ற குன்றின் உச்சி எனப் பாடப்பட்டதாக விளக்கவுரையாளர் தெரிவிக்கின்றனர்.

அரக்கர் குலத்தவர் மாய நெறியில் நிற்பவர்கள், ஆகாயத்திலும் நீரிலும் நிலத்திலும் இயங்குபவர்கள் என்ற கருத்தை திருமுதுகுன்றம் என்ற தலத்தைப் பற்றி பாடும்போது ஞான சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார்.

தலம் : திருமுதுகுன்றம் (576)
பண் : பழந்தக்க ராகம்
மயங்குமாயம் வல்லராகி
வானினொடு நீரும்
இயங்குவோருக்கு இறைவனாய
இராவணன் தோள் நெரித்த
புயங்கராக மாநடத்தன்
புணர்முலை மாது உமையாள்
முயங்கு மார்பன் முனிவர் ஏத்த
மேயதுமு துகுன்றே

தெளிவுரை :மயக்கத்தை உண்டாக்கும் மாயையில் வல்லவர்களாய், ஆகாயத்திலும் நீரிலும் இயங்கும் அரக்கர்களுக்கு தலைவனாகிய இராவணனுடைய தோளைப் புயங்க நடனத்தின் வாயிலாக நெரித்து, உமாதேவியோடு விளங்கும் ஈசன், முனிவர் பெருமக்கள் போற்றித் துதிக்க விளங்குவது முதுகுன்றம்.

குறிப்பு : நிலவுலகின் கண் மேவும் ஒழுக்க நெறியில் பொருந்தி நிற்காது, மாயை நெறியில் நிற்கும் அரக்கர்கள் என்பதை "வானினொடு நீரும் இயங்குவார்" என்பது உணர்த்திற்று. புயவலிமையால் அடர்த்த இராவணனது செருக்கினைப் புயங்க நடனத்தால், ஈசன் அடக்கினார் என்பதும் உணர்த்தப் பெற்றது.

அரக்கர்கள், ஆகாயத்திலும், நிலத்திலும், நீரிலும் உலவித் திரிந்தவர்கள் என்பதை இந்தத் தேவாரம் உணர்த்திற்று. ஆகவே இராவணன் அதீத சக்திபடைத்தவர் என்பதும் அவரிடம் ஆகாய ஊர்திகளும், கப்பல்களும் இருந்தன என்ற திருஞான சம்பந்தரின் கருத்தையும் நாம் இலகுவில் புறந்தள்ளி விட முடியாது.

ஏழாம் நூற்றாண்டில் அதாவது 1300 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்தவரான திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் ஆயிரத்தெட்டு சிவதலங்களைப் பற்றித் தேவாரங்களை அருளியுள்ளார். ஞானசம்பந்தருடைய காலத்தில் சமண சமயமும், வைஷ்ணவமும், புத்தருடைய போதனைகளும் சிவசமயத்திற்கு போட்டியாக இருந்தன. இதனால் இவர் தொண்டு தொட்டு இருந்த சிவதலங்களுக்குச் சென்று சிவனின் பெருமைகளை தேவாரங்களாகப் பாடியுள்ளார். இவர் பாடிய தேவாரங்கள் இந்து சமயத்தின் முதல் மூன்று திருமுறைகளாக தொகுக்கப்பட்டுள்ளன. இலங்கையில் வாழ்ந்த இராவணன் பற்றியும், இலங்கையில் உள்ள இரண்டு சிவதலங்களைப் பற்றியும் பத்து தேவாரங்கள் அடங்கிய பதிகங்கள் பாடப்பட்டுள்ளன. இதில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் மற்றும் சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோர் திருக்கேதீச்சரம் பற்றியும் திருக்கோணேச்சரம் பற்றி திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் மட்டும் பாடியுள்ளனர்.

இன்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் இரண்டாம் திருமுறையில் இராவணன் பற்றிய பாடல்களில் சில வற்றைத் தொகுத்துள்ளேன்.

இரண்டாம் திருமுறையில் இராவணன் :

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரே இராவணன் பற்றிய வரலாற்றை முதலில் திருமுறையில் பாடியுள்ளார் என்பது தெளிவாகிறது. இவருடைய இரண்டாம் திருமுறையில் 1331 தேவாரங்கள் உள்ளன. இராவணன் எவ்வாறான சிவபக்தனாக இருந்தார் என்பதை பல தேவாரங்களில் பாடியுள்ளார்.

தலம் : திருக்கோழம்பம் (139)
பண் : இந்தளம்
விற்றானை வல்லரக்கர் விறல்
வேந்தனைக்
குற்றானைத் திருவிரலாற் கொடுங்
காலனைச்சற்றானைச் சீர்திகழுந்
திருக்கோழம்பம்
பற்றானைப் பற்றுவார்மேல் வினை
பற்றாவே

தெளிவுரை: விற்படைகொண்ட அரக்கர்களின் தலைவனாகிய இராவணனை, அவன் செயல் கூடாதவாறு தடுத்து அடர்த்தும், கொடிய காலனைத் திருப்பாதத்தால் செற்று அழித்தும், சீர்திகழும் திருக்கோழம்பம் என்னும் இடத்தில் வீற்றிருக்கும் ஈசனை பற்றாகக் கொண்டு வணங்குபவர்களுக்கு வினையானது சாராது.

தலம்: திருவெண்ணியூர்(150)
பண் :இந்தளம்
மறுத்தானை மாமலை யைமதி
யாதோடிச் செறுத்தானைத் தேசுஅழி
யத்திகழ் தோள்முடி
இறுத்தானை எழிலமர் வெண்ணிஎம்
மானெனப்பொறுத்தனைப் போற்றுவார்
ஆற்றல் உடையாரே

தெளிவுரை: அகந்தையால் பகைமை கொண்டு கயிலை மலையை மதியாது பெயர்த்த இராவணனுடைய வனப்பு அழியுமாறு தோள்களையும் முடிகளையும் துன்புறுத்தியவன், எழில் மேவும் வெண்ணியில் விளங்கும் இறைவன். அப்போது அவ்வரக்கன் "எம் தலைவனே! காப்பாற்றுவீராக "என்று கலங்கி அழுது வேண்டி முறையிட, குற்றத்தைப் பொறுத்து அருள் புரிந்தவன் பரமன். அப்பெருமானைப் போற்றி வணங்குபவர்களுக்கு எல்லா விதமான ஆற்றலும் கைவரப் பெறும்.

திருஞான சம்பந்தரின் இரண்டாம் திருமுறையில் உள்ள "திருநீற்றுப் பதிகம்" திருவாலவாய் தலத்தில் பாடப்பட்டதாகும் இக்காலம் வரை இந்த இடம் மதுரை என வழங்கப்படுகிறது. இங்கு சொக்கலிங்க மூர்த்தியும் மீனாட்சியம்மையும் வீற்றிருக்கின்றனர். இந்தப் பதிகம் பாண்டியனுடைய வெப்பு நோய் நீங்கப் பாடப்பட்டதாகும். ஆனால் திருநீற்றின் மகிமைபற்றிக் கூறும் போது இராவணன் திருநீறு அணிந்ததினால் பெருமை பெற்றான் என்றும், அவன் சிவன் மீது ஆழ்ந்த பக்தி கொண்டவன் என்பதும் தெளிவாக்கப்படுகிறது.

தலம்: திருவாலவாய் (716)
பண்: காந்தாரம்
இராவணன் மேலது நீறு எண்ணத்
தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறு
ப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவமாவது
நீறு
அராவணங் கும்திரு மேனி ஆலவா
யான்திருநீறே

தெளிவுரை: இராவணன் திருநீறு அணியப் பெருமையுறச் பெற்றது.

சிறப்புரை: திருநீறு பூசிய இராவணனுடைய ஆற்றல் அருள் வண்ணத்தால் மேவி, வாளும், வாழ்நாளும் ஈட்டித் தந்த செம்மை குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது. இரண்டம் திருமுறையில் திருநீற்றுப் பதிகத்தின் பின்னால் பொது என்ற தலைப்பிலே சில தேவாரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இதற்கு கோளறு திருப்பதிகம் எனத் தலைப்பிடப்பட்டுள்ளது. இதே பதிகத்திலேயே இறைவன் கொன்றை மற்றும் வன்னி மரப் பூக்களை அணிபவர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கோளறு திருப்பதிகத்திலே பொதுவாகப் பாடப்பட்ட தேவாரத்திலும் இராவணனைப் பற்றிப் பாடப்பட்டுள்ளது.

பொது: 926 வது பதிகம்
பண்: பியந்தைக் காந்தாரம்
வேள்பட விழிசெய்து அன்று விடை
மேல் இருந்து
மடவாள்த னோடும் உடனாய்
வான்மதி வன்னி கொன்றை மலர்சூடி
வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழி லங்கை அரையன்ற
னோடும் இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல
நல்ல அடியார் அவர்க்கு மிகவே

தெளிவுரை: மன்மதனை நெற்றிக் கண்ணால் நோக்கி இடப வாகனத்தில் உமாதேவியுடன் வீற்றிருந்து ஒளிமிக்க சந்திரனும் வன்னி மற்றும் கொன்றை மர மலர்களைச் சூடி வந்து என் உள்ளம் புகுந்தனன். அதனால் கடல் சூழ்ந்த இலங்கை வேந்தனாகிய இராவணனோடும் சூழ வரும் இடர் ஏதும் வந்து நலிவுறச் செய்யாது. ஆழ்கடலும் நல்லதாய் அமையும். அவை அடியவர்களுக்கு மிகவும் நல்லதாகும்.

குறிப்பு: வன்னிமரத்தின் மலர்களைச் சூடுபவர் சிவபெருமான். இலங்கைத் தலங்களில் முக்கியமானவை அவர் வீற்றிருக்கும் திருக்கேதீச்சரமும் திருக்கோணேச்சரமும் ஆகும். இதனாலேயே இந்தப் பிரதேசத்திற்கு "வன்னி" என்ற பெயர் வந்ததாகக் கூறுவாருண்டு. வன்னி மரங்களின் மலர்களைச் சூடும் எம்பெருமான் தென்னிந்தியாவின் பல தலங்கள் இருப்பதாக திருமுறைகளில் பாடப்பட்டுள்ளன. அந்நிய தேசத்தவர்களால் இந்தப் பிரதேசத்திற்கு "வன்னி" என்ற பெயர் வழங்கப்பட்டது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

இரண்டாம் திருமுறையில் திருக்கேதீச்சரம் :

நாயன்மார்கள் இலங்கையிலுள்ள இரண்டு சிவதலங்களைப் பற்றிப் பாடியுள்ளனர். இவற்றில் ஒன்று அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்திலும் மற்றையது அதற்கு அண்மையிலும் அமைந்திருப்பது பிரதேசத்தின் சிறப்பம்சமாகும். சிறப்பு மிக்க மன்னார் பிரதேசத்தில் மாதோட்டமும் பாலாவியும் இருக்கின்றன. இலங்கையிலுள்ள ஈஸ்வர தலங்களில் மாதோட்டத்தில் உள்ள சிறப்பு மிக்க திருக்கேதீச்சர ஆலயம் இரண்டு நாயன்மார்களால் பாடப்பட்ட மகிமையுடையது. கேது பகவான் பூசித்து பேறு பெற்ற தலமாகவும் விளங்குகின்றது.

தொடரும்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிறுகதை



# ஒற்றைத் தென்னை

-நந்தினி சேவியர்-

பிரபஞ்சவெளியை ஊடுருவிக் கொண்டு நிமிர்ந்து நிற்கிறது அந்தத் தென்னை.

தொலை தூரத்தில் தெரியும் தீவுக்கூட்டங்களுக்கும், எட்டத்திலே வரும் இயந்திர வள்ளங்களுக்கும், பாய்கட்டி ஓடும் படகுகளுக்கும் குருநகர் ஜெட்டி இறங்கு துறையைக் காட்டும் கலங்கரை விளக்கம் அந்த ஒற்றைத் தென்னை.

வரிசையாக இறங்கு துறையோரம் நிற்கும் இயந்திர வள்ளங்கள் நீர்ச் சுழிப்பில் நர்த்தனமிட்டுக் கொண்டிருந்தன.

கடலின் முள்ளந்தண்டாக நீண்டு கிளைவிட்டு சுட்டியல் அமைப்பில் மல்லாந்து கிடக்கும் அந்த இறங்குதுறை ரோட்டின் மருங்கில் குவிக்கப்பட்டு இருக்கும் மீனை ஒருவன் பிளந்து பிளந்து எறிய, குடல்களையும் கழிவுப்பதார்த்தங்களையும் அலசி அலசி வீசுகிறான் மற்றொருவன்.

எறியப்படும் மீனை ரோட்டில் சாக்கைப் பிரித்துக் கொட்டியிருக்கும் உப்புக் குவியலில் பிரட்டி எடுத்து அடுக்குகிறான் இன்னொருவன்.

தொலைதூரம் நீரைக் கிழித்துக் கொண்டுவரும் ஒரு வள்ளம் இறங்கு துறையை அண்மித்து நிற்கிறது.

கயிற்றை எறிந்து இறங்குதுறையின் குத்துக் கல்லில் கட்டும் சந்தியாக் கிழவன்.

"மருமோன்...மருமோன்" என்று குரல் கொடுத்தான்.

அவன் முகத்தில் பூரணதிருப்தியின் சாயல்.

செவத்தி என்கிற செபஸ்தியாம்பிள்ளையும் அவனோடு வள்ளத்தை விட்டு வெளியில் வந்தான்.

"மிச்சம் நல்லாய் இருக்கு... செவத்திக்கு நல்ல மலிவு"

இறங்குதுறையில் மீன் பிடிக்கும் அல்போண்சனைப் பார்த்து முனகினான் சந்தியாக்கிழவன்.

அந்த வள்ளத்தை அவர்கள் பருத்தித்துறையிலிருந்து வாங்கியிருந்தார்கள். வெள்ளோட்டத்திற்காக அந்த வள்ளத்தை கௌதாரி முனைவரை ஓட்டிச் சென்று அவர்கள் இருவரும் திரும்பியிருந்தார்கள்.

வள்ளத்தின் அமைப்பும் இயந்திரங்களின் பாவனையும் சந்தியாக்கிழவனுக்கு நன்றாகப் புரியும்.

அல்போண்சன் சந்தியாக் கிழவனைப் பார்த்து.

"அம்மான்... நீ போனால் சும்மா சாதாரணமே... எடுப்பாய்!" என்று சிரித்தான்.

வெய்யிலின் அகோர எறிப்பிலும் கிழவன் அவர்களோடு தொழிற்பாடுகளைப் பற்றியே பேசிக் கொண்டு இருக்கிறான்.

செவத்தியின் மனைவி தூரத்தில் நின்று குரல் கொடுப்பது கேட்கிறது.

"ஓ... அம்மான்... அந்தாளையும் கூட்டிக் கொண்டு தேத்தண்ணி குடிக்க வா..." அவளின் குரல் மெதுவாக ஒலித்தடங்குகிறது.

"அம்மான் தான் இந்த நேரம் தேத்தண்ணி குடிக்கும். அக்கை சும்மா சாட்டுக்கு கூப்பிடுது..." என்றான் நீருள் மனை அலசியபடி நிற்கும் றொபேட்.

அவன் கூறியதில் நியாயம் இருப்பது போல் சிரித்த சந்தியா தலைப்பாகையை அவிழ்த்து முகத்தைத் துடைத்தபடி பிரதான வீதியை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

இறங்குதுறையில் நிற்கும் அநேக கண்கள் அவனை அனுதாபத்தோடு நோக்கின.

பெருமூச்சுக்கள் வெடித்துச் சிதறுகின்றன. அவன் நடக்கிறான்.

சந்தியாவுக்கு அறுபத்தைந்து வயது இருக்கும். ஆனாலும் கட்டுமஸ்தான தேகமும், வலிமை மிக்க மன உறுதியும் அவனை இன்னும் உசுப்பவில்லை.

குருநகர் வாழ் மீனவர்களுக்கும், மற்றைய சமூகத்தினருக்கும் அவனைப் பற்றி நன்றாகத் தெரியும்.

இன்று வரை அவன் யாருக்குமே பயந்ததுமில்லை. இனியும் பணியப் போவதுமில்லை.

சிறுவயதிலிருந்தே சுறாக்குட்டியைப் போல் சுறுசுறுப்பாக எதிர் நீச்சல் போட்டுப் பழகியவன் அவன்.

இன்று வரை அவனை அசரப் பண்ணியவர்கள் எவருமில்லை.

பெரிய சம்மாட்டிகள் முதலாளிகள் எத்தனையோ பேரை எதிர்த்து நின்ற ஒரே ஒரு நேர்மையான தொழிலாளி குருநகரில் உண்டென்றால் அது சந்தியாக்கிழவனேதான்.

எத்தனையோ முறை பொலிசாரைக் கொண்டு அவனுக்கு எதிராகப் பலவித நடவடிக்கைகளைப் பணமுதலைகள் செய்தன.

ஆனால் அவைகளினால் அவனை ஒன்றுமே செய்ய முடியவில்லை.

நெஞ்சுரம் பெற்றவன் சந்தியாக்கிழவன்.

அவனது குடும்பமே அழிந்தொழிந்தபோதும் அவன் அசராதவன்.

சுமார் ஒரு வருடத்திற்கு முன் நிகழ்ந்து விட்ட அந்த நிகழ்ச்சி...?

அவன் இப்போது இருப்பது போலத்தான் அப்போதும் கலகலப்பாக இருந்தான்.

மீன்களைப் பிளந்தெறியும் கைங்கரியத்தில் லாவகமாக அவன் ஈடுபடும் போது அதைப்பார்க்க சிலருக்கு ஆச்சரியமாகக் கூட இருக்கும்.

என்ன வேகம்.... என்ன வேகம்!

இன்றும் அவன் இறங்குதுறையில் நிற்கிறான். ஆனால் அவனோடு கூட வேலை செய்தவர்கள்...?

விக்டர், டேவிட், அதிரியார்...?

விக்ரரும் டேவிட்டனும் இன்று உயிரோடு இல்லை.

அதிரியார்...?

"அம்மான்... அம்மான்.! ஐயாவைக் கண்டியளே..."

வேகமாக நடக்கும் சந்தியாக் கிழவன்முன் அலங்க மலங்க ஓடி வந்தாள் மாகிரற்.

"ஏனடி பிள்ளை... எங்கை போனவன்...?"

பதறினான் கிழவன்

"நான் கைவேலையாய் இருந்தன்.. அப்ப அந்தாள் படலையைத் திறந்து கொண்டு வெளியிலை வந்திட்டுது..."

தூண்டிலில் சிக்கிய மீனைப்போல் அவள் துடித்தாள்.

"பயப்பிடாதை. உங்கைகிட்டடியிலை... எங்கையேனும் நிப்பான் நான் பாத்து கூட்டி வாறன்..."

சந்தியா திரும்பி நடந்தான்.

அவன் நினைத்தது வீண் போகவில்லை.

கடற்கரையின் கிழக்குப்புற ஒற்றைத் தென்னையில் சாய்ந்து கொண்டு கடலை வெறிக்கப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் அதிரியார்க் கிழவன்.

சந்தியா அவனை அனுதாபத்தோடு பார்த்தான்.

அதிரியாரின் எலும்புகள் துருந்தும் உடலம், மேலும் காய்ந்து கருவாடாகியும் இருப்பது அவனுக்குப்புரிகிறது.

அதிரியாருக்குச் சந்தியாவை விட மூன்று நான்கு வயது குறைவாகத்தான் இருக்கும்.

சந்தியாவுக்கும் அவனுக்கும் உள்ள வித்தியாசம்...?

முன்பு அதிரியாரும் நல்லவாளிப்பான தேகக்கட்டு உடையவனாகத்தான் இருந்தான்.

அதெல்லாம் சிதைந்து உருக்குலைந்தது...! அந்த ஒரு வருடத்திற்கு முன் நடந்த நிகழ்ச்சியினால்தான்...

அந்த நிகழ்ச்சி...?

"என்னடா இப்படியே... நெடுகலும் யோசிச்சு கவலைப்பட்டு.! சும்மா மனதை அலட்டாதே. பொடிச்சி உன்னைக் காணாமல் தவிக்கிறாள் எழும்பு"

குரலில் சற்று அனுதாபமும் கண்டிப்பும் தொனிக்க அலையாக அடித்தான் சந்தியா.

உப்பு நீரைக் குடித்து விட்டது போல் முகம் சுருங்கிக் கிடக்கும் அதிரியார் விம்மினான்.

"அண்ணை.... அண்ணை."

அவனுக்குக் குரல் அடைக்கிறது.

"யோசியாதை மோனை. யோசியாதை... நடந்தது நடந்திட்டுது... இனி என்ன...?

குரலில் எந்தவித சலனமுமின்றி உரத்த தொனியில் பேசினான் சந்தியாக்கிழவன்.

இரண்டு கிழங்களும் ஒரேதாக்கத்துள் சிக்குண்டவைதான். ஆனால் இரண்டும் இப்போது இருக்கும் நிலை மிக மிக வித்தியாசமானது.

பெரிய கோயில் சவுக்காலையை வெறிக்கப்பார்க்கும் அதிரியார் பலத்து அழுதான்.

பாலைத்தீவு படகு விபத்தில் அவனது மகன் விக்ரர் இறநது போகாதிருந்தால் இவன் இப்படி இருப்பானா...?

"அழாதையெடா... தம்பி... அழாதை..."

அதிரியாரைத் தேற்றும் சந்தியாவுக்கும் சற்று உடல் நடுங்குகிறது. ஆனால் அதை அவன் சமாளிக்கிறான்.

ஒரு மகனை இழந்து பயித்தியமாகிவிட்ட அதிரியாருக்கு அந்த விபத்திலே தனது குடும்பத்தையே இழந்து நிற்கும். அசையாது நிற்கும் அந்தத் தனி மரம் ஒற்றை மரம் ஆறுதல் கூறுகிறது.

படகு விபத்தில் அவரது மனைவி, மக்கள், பேரக் குழந்தைகள் அனைத்தையும் இழந்து விட்ட அந்த மனிதன் மற்றவருக்கு ஆறுதல் கூறுகிறான்.

கல்லூரிக்குச் செல்லும் சிறுவர்களைக் காணும் போதும், கணவன் மனைவியாக சோடியாக நடக்கும் தம்பதிகளைக் காணும் போதும் சந்தியாவுக்கு மக்களின் மருமக்களின் பேரக் குழந்தைகளின் நினைவு வரத்தான் செய்யும். அவன் சமாளித்துக்கொள்வான்.

"உவற்றை நினைவுக்குத்தான் உப்பிடி வந்தது... ஆள்பாடுதொப்பி...!

சந்தியாவின் பழைய கம்பீரிய நடவடிக்கைகளைப் பாரத்து பொறாமை வலை பின்னிய சிலர் கூறத்தான் செய்தார்கள். ஆனால் கிழவன் இன்றும் பழைய சந்தியாவே!

பெரிய கோயில் சவுக்காலையைத் தாண்டி சாராயத் தவறணையை நோக்கி நடக்கும் போது கிழவன் கவலையோடு நடப்பதுண்டு. அதற்குள் உறங்கும் அவனது குடும்பம் சில வேளை அவனை கெதிகல்க்கும். ஆனால் கண நேரம்...! தவறணையிலிருந்து திரும்பும் போது சந்தியாக்கிழவன் பழைய மனிதனாகி விடுவான்.

தனிச்சமையல், தனித் தொழில், எல்லாருக்கும் உதவி... தொழில் ஆசான். மதிபிற்குரிய சீவன்.

"அம்மான்"

சிறு தோல்விகளைக் கண்டு கலங்கி தற்கொலை செய்பவர்களும், தம் 'தோல்விகளால் விரக்தியுறுபவர்களுக்கான இளம் சந்ததியினருக்கு ஒரு உதாரணம் காட்டக்கூடிய மன வலிமை மிக்க, சலிக்காத உழைப்பாளியான நேர்மைத் தொழிலாளவர்க்க வாரிசுதான் சந்தியாக்கிழவன்.

ஆனால் அதிரியார்...?

"ம்... எழும்பு... வீட்டை போ. பொடிச்சி அந்தரப்படுவாள்..."

மீண்டும் உலுப்பினான் சந்தியா.

ஒற்றைத் தென்னையில் கையை ஊன்றி எழுந்திருக்கும் அதிரியார் சந்தியாவின் பின்னே தள்ளாடி நடக்கிறான்.

பன்னிரண்டு வெய்யில் நெருப்பைக்கக்கிக் கொண்டு இருக்கிறது.

ஓடிவரும் மாகிரற் தகப்பனை கையில் பிடித்து வீட்டுக்குள் கொண்டு செல்கிறாள்.

"அம்மான் சாப்பிட வாருங்கோவன்..."

"வேண்டாம் பிள்ளை. நான் சோறு காய்ச்சின்னான். உதிலை போட்டு வந்துதான் சாப்பிட வேணும்"

மாகிரற்றைப் பார்த்துக் கூறும் சந்தியாக் கிழவன் தவறணையை நோக்கி கம்பீரமாக நடக்கிறான்.

மாகிரற் தொலைவில் தெரியும் ஒற்றைத் தென்னையை வெறிக்கப் பார்க்கிறாள்.

அந்தத் தென்னை...அது....?

எத்தனையோ மழைபுயலுக்கும் அசையாது நிலைத்து நிற்கும் அத்தனிமரம்...?

குருநகரில் எதற்குமே அசையாத இரண்டு தென்னை கள்...!

ஒன்று அது. மற்றது...?

சந்தியாக்கிழவன்!

அவளுக்கு உடல் சிலிர்க்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பகுதி:-02

இதே விடுதலை என்ற தலைப்பினுள் பாரதி பெண் விடுதலை பற்றியும் பாடியிருக்கிறார். பாரதம் பெண்களையும் அடிமைகளாக வைத்திருந்ததாகக் கருதி, மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம் என்று பாடுவதைக் கீழே காண்போம்.

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக்கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையினும்நமக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர்சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே

(விடுதலை -3)

ஏழையும், அடிமையும் சாதிப் பிரிவினையும் இல்லாத இனிய சமுதாயத்தை எண்ணிப் பார்க்கும் பாரதி அச் சமுதாயத்திலே பெண்களை ஆண்கள் அடிமைப்படுத்தும் நிலையும் இருக்கக் கூடாது என்று எண்ணியே விடுதலை என்ற தலைப்பினுள் பெண் விடுதலைக்கும் குரல் கொடுக்கிறான்.

வையக வாழ்விலே எந்த வகையிலும் நமக்குள்ளே ஆண்டான், அடிமை என்ற நிலை இருக்கவே கூடாது. ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ வேண்டும் என்கிறார்.

"எந்த வகையிலும்" என்ற சொல்லும் ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்துவதையே குறிப்பதாகக் கொள்ளலாம்.

அதனையே ஆரம்பத்தில் "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை" எனக் குறிப்பிட்டு அந்த மடமைக் கொள்கையைக் கொளுத்திப் பொசுக்குவோம் என்று அறை கூவுவது அமைகிறது.

### பெண்மை வாழ்க

மாதர்களை இழிவு செய்யக் கூடாது அடிமைகள் என்ற நிலையை அவரகளுக்குக் கொடுக்கக் கூடாது என்று அறிவுரை கூறிய பாரதி பெண்களைப் போற்ற வேண்டு மென்று தொடர்கிறார்.

"பெண்மை வாழ்கவென்று கூத்திடு வோம்டா
பெண்மை வெல்கவென்று கூத்திடு வோமடா."

(பெண்மை-1)

என்று தமது பெண்மை என்ற கவிதையிலே ஆண்களைக் கூத்திட அழைக்கிறார் பாரதியார்.

பெண் அறத்தினை ஆண்மக்கள் வீரந்தான்
பேணு மாயிற் பிறகொரு தாழ்வில்லை.
கண்ணைக் காக்கும் இரண்டிமை போலவே
காதலின்பத்தைக் காத்திடு வோமடா.

(பெண்மை -4)

பெண்ணின் அறத்தை ஆண்களின் வீரம் காக்குமாயின் பின்பு பெண்ணினத்துக்கோ, மனித இனத்துக்கோ ஒரு தாழ்வும் இல்லை. கண்ணை இரு இமைகளும் காப்பது போல காதல் இன்பத்தை ஆணும் பெண்ணும் இருவருமே சுதந்திரமாகக் காக்க வேண்டும் என்று ஆண்களுக்கு அறிவுறுத்துகிறார் பாரதியார்.

புதுமைப் பெண்ணின் கூற்றாக மாதர்களின் சுதந்திர தாகத்தையும், சுதந்திர வார்த்தைகளையும் கேட்டுக் களிப்படைவதாகப் பாடும் பாரதி, பெண்களின் விடுதலை நிலையினை எண்ணி அக மிக மகிழ்கிறார்.

மாதர்க் குண்டு சுதந்திரம் என்றுநின்
வண்ம லர்த்திரு வாயின் மொழிந்த சொல்
நாதந் தானது நாரதர் வீணையோ
நம்பி ரான் கண்ணன் வேய்குழல லின்பமோ.

(புதுமைப் பெண்-2)

மாதர்க்குச் சுதந்திரம் உண்டென்று புதுமைப் பெண் கூறும் சொற்கள் பாரதியின் காதிலே தேனாக இனிக்கிறது.

அந்த நல்ல வார்த்தை நாதம் நாரதரின் வீணையிலிருந்து வந்ததோ, அல்லது கண்ண பிரானின் புல்லாங்குழலிருந்து வந்ததோ என்று அதியசிக்கிறார்.

அத்தனை தூரம் அவருக்குப் பெண்களின் சுதநதிரத்திலே ஆசையும் ஆர்வமும் இருந்தது என்பது தெரிகிறது.

### பெண் விடுதலை.

பெண் விடுதலை பற்றிய பாரதியாரின் கருத்துகளை இங்கே நோக்குவோம். பாடல்கள் இலகுவாகப் பொருள் விளங்கத் தக்கன என்பதனால் முக்கியமான செய்தியை மட்டும் தருகிறேன்.

விடுதலைக்கு மகளிரெல்லோரும்
வேட்கை கொண்டனம்; வெல்லுவம் என்றே
திடமனத்தின் மதுக்கிண்ண மீது
சேர்ந்து நாம்பிர திக்கினை செய்வோம்.
உடையவள்சக்தி ஆண்பெண்ணிரண்டும்
ஒரு நிகர் செய்துரிமை சமைத்தாள்
இடையிலே பட்ட கீழ்நிலை கண்டீர்
இதற்கு நாமொருப் பட்டிருப்போமோ.

(பெண்விடுதலை-01)

திறமையால் இங்கு மேனிலை சேர்வோம்
தீயபண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்
குறைவிலாது முழுநிகர் நம்மைக்
கொள்வ ராண்க ளெனிலவரோடும்
சிறுமை தீரநந் தாய்த்திரு நாட்டைத்
திரும்ப வெல்வதில் சேர்ந்திங் குழைப்போம்.
அறவிழுந்தது பண்டை வழக்கம்
ஆணுக்குப் பெண் விலங்கெனும் அஃதே.

(பெண் விடுதலை-2)

ஆணுக்குப் பெண் அடிமை என்ற விலங்குணர்வு அற வீழ்ந்தது என்று ஆனந்த மிகுதியால் கூறும் பாரதி, சக்தி அனைவரையுமே சமமாகப் படைக்க இடையிலே ஆணுக்குப் பெண் அடிமை என்ற மூடப் பழக்கத்தை ஆண்கள் கொண்டு வந்து விட்டனர் என்று ஆத்திரப்படுகிறார்.

குறைவில்லாது முற்று முழுதாக சரி நிகர் சமானமாகப் பெண்களை ஆண்கள் மதித்துச் சேர்த்துக் கொண்டால், பாரத விடுதலைக்கு ஆண்களோடு சேர்ந்து உழைக்கலாம், என்று பெண்கள் கூறுவதாகக் கூறுகிறார் பாரதியார்.

விடியு நல்லொளி காணுதி நின்றே
மேவு நாக ரிகம்புதி தொன்றே
கொடியர் நம்மை அடிமைகள் என்றே
கொண்டு தாம்முதல் என்றன ரன்றே
அடியொ டந்த வழக்கத்தைக் கொன்றே
அறிவும் யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்வீர் நந்தேசத்து வீரக்
காரிகைக் கணத்தீர் துணிவுற்றே.

(பெண் விடுதலை-3)

என்ற தமது விடுதலைப் பாடலில் பெண்களின் அடிமை இருள் அகன்று விடிவு நல்லொளி தோன்றுவதாகக் கூறுகிறார் பாரதியார்.

ஆண்கள் தம்மை ஆண்டானாகவும் பெண்களை அடிமைகளாகவும் எண்ணியிருந்த மடமை வழக்கத்தைக் கொன்றொழித்து, அறிவுச் செல்வத்தைப் பயிற்சியினால் வென்று மாதர்கள் தேசத்திற்குக் கடமை செய்ய வேண்டும் என்று பெண்கள் கூறுவதாகப் பாடுகிறார் பாரதியார்.

பெண்களுக்கு விடுதலை வேண்டும் என்ற நீதியைத் தாம் பிறப்பித்தே காரணத்தைப் பாரதியார் பின்வருமாறு கூறுகிறார்.

பெண்ணுக்கு விடுதலையென் றிங்கோர் நீதி
பிறப்பித்தேன்; அதற்குரிய பெற்றி கேளீர்;
மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வ மென்றால்
மனையாளும் தெய்வமன்றோ மதிகெட்டீரே;
விண்ணுக்குப் பறப்பது போல் கதைகள் சொல்வீர்
விடுதலையென் பீர்கருணை வெள்ள மென்பீர்
பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லை யென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லை.

(சுயசரிதை-45)

பெண்ணுக்குச் சுதந்திரம், விடுதலை இல்லை என்றால் பின்பு இந்த உலகிலே ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் இன்பமான வாழ்க்கையே இல்லை என்று அறிவுரை கூறுகிறார்.

மண்ணுக்குள்ளே எல்லா உயிரும் தெய்வம் என்றால், மனையாளும் தெய்வமே என்ற தத்துவத்தைச் சொல்லி தான் பெண் விடுதலை பற்றிப் பாடியதற்கரிய காரணத்தைக் கூறினார் பாரதியார்.

### பெண் கல்வி.

பாரதியார் பெண் விடுதலை பற்றிப் பாடிய பாடல்களை மேலே பார்த்தோம். விடுதலை அடைவதற்கு, பெண்களுக்குக் கல்வி அவசியம் என்ற கருத்தில் பாடிய பாடல்களை இனி நோக்குவோம்.

பெண்கள் கல்வி கற்று அறிவிலே மேன்மை பெற்று ஆண்களோடு சரிநிகர் சமானமாக உரிமை பெற வேண்டும் என்று பாடத் தொடங்கும் பாரதி, பெண்களுக்குக் கல்வியூட்டாமல் வீட்டுக்குள்ளே தடுத்துப் பூட்டி வைத்திருந்த ஆண்களுக்கும் அறிவுரை சொல்லி, பெண்களுக்கு கல்வி வேண்டும் என்று வலியுறுத்துகிறார். தமது முரசு என்ற கவிதையில் இப்படிச் சொல்கிறார்.

தொடரும்......




எங்களுக்கு மட்டுமோ..?
அவசரச் சட்டமும்
பயங்கள் நிறைக்கும் ரத்தக் குளிப்பும

எங்களுக்காக என்று
குரல் பிதுக்கி சத்தம் செய்வோரும்
தங்களுக்கான சுக இருப்பையும்
தங்களுக்கான இனிய சுகத்தையும் கண்டு
எங்கள் இருப்புகளை மறந்து விடுகின்றனர்
மறந்தால் பரவாயில்லை
ஓரம் கட்டியும்
உதாசீனம் செய்தும்
உருப்படியாகக் காட்டிக் கொடுத்தும்
இடையிடை கிழித்தெறிந்தும்
துப்பிப் பார்த்து அசிங்கப்படுத்தியும்
கோடாரிக் கூரினால் நெஞ்சைப் பிளக்கின்றனர

தேர்தல்காலச் சிரிப்புகளில்
காலம் பார்த்துப் பழகிய
என் போன்ற வயோதிபங்களுக்கும்
மீண்டும் ரோசம் துளிர்க்கத் தொடங்கிற்று

பொய் புரட்டு வஞ்சகம் சூது வாது
பித்தலாட்டம் பிடித்த மனிதர்களின் மனங்களும்
அடிமைகளின் கல்லறைகளும் சமம் போலவே
எனக்குள் எழுந்த அருட்டுணர்வு
மனம கிளித்துச் சொல்லிச் செல்கிறது

வயது போன நரைத்தலை ஒன்று
தன்னையும் தன் பரம்பரையினையும்
நல்லாக வைத்திருக்க நன்கு பழகியிருக்கிறது
தொளதொளத்த உடல் பருமனும்
கொஞ்சமும் நேர்த்தியில்லாத
வகிடு எடுக்காத குலைந்த நரைமுடியும்
பார்பதற்கே அருவருப்பு வருகிறது
அதன்
தடம் புரளும் சாதனை மனம் அறியும் போது..!

உண்மையாக.
'நான் எங்கே இதைச் சொன்னேன்?' என்று
கேட்கத்தான் போகிறீர்கள்.!

என்ன தெரியுமோ.?
சுரண்டிப் பிளைப்போர்
அனாயசமாகவே அண்டிப் பிளைக்கின்றனர்
தொடக்கூடக் கூசும்
துடக்கு மனிதர்களின் பிஸ்டத்தில் தொங்கும்
அசிங்கத்தைத் துடைத்து
தங்கள் முகத்தைச் சுத்தம் செய்கின்றனர்!

கைகட்டி சேவகம் செய்யும்
இவ்வகை நஞ்சர்களைக் காணும் போதெல்லாம்
உண்மை உணர்வு வெடிக்கத் தொடங்குகிறது
நாமெல்லாம் கூண்டோடு விலையாகிப்
போனோமோ?
என்பதை நினைக்கும் போது.!

நாங்கள் நம்பியிருந்த
நாங்கள் நம்பியிருக்கும்
இளையவனை நினைக்கும் போதுதான்
மறவர் குல பெருமை
மீண்டும் மீண்டும் நெஞ்சுக்குள் நிரம்பி வழிகிறது

இளையவன் தெய்வம் எடா..!
எங்களுக்கெல்லாம் அவன்தான்
சரியான தொண்டன் எடா..!

இறைவா.! இறைவா!! என்று
கையெடுத்து வணங்குவதைக் காட்டிலும்
இளையவா! இளையவா!! என்று
சொல்லும் போதுதான் யாருக்கும்
ஒரு வீரம் வீரியமுடன் முளைக்கிறது.!

என் எண்பது வயது அனுபவத்தில் சொல்லுறன்
இளையவன் போல் ஒரு பிள்ளையை
இனி யாருமே கண்டிலர்.!
இளையவன் எங்களுக்கெல்லாம்
இனியவன் எடா!
அவன்தான் எங்கள் தெய்வம் எடா!!
எட பொடியளா.! நான் சொல்வது
இத்தனை கால அனுபவ உண்மை எடா .!!!

-சமரபாகு சீனா உதயகுமார்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# துணிச்சலான மைக்கல் டைசன்

அமெரிக்காவின் முன்னாள் குத்துச் சண்டை ஜாம்பவான் மைக் டைசன், போட்டியில் ஆக்ரோஷமாக செயல்பட்டு, எதிராளியை நிலைகுலையச் செய்வார். 1997 இல், சக வீரர் இவான்டர் ஹோலிபீல்டுக்கு எதிரான போட்டியில், அவரின் காதைக் கடித்து, சர்ச்சையில் சிக்கினார். தற்போது, சின்னத்திரையில் முகம் காட்டவுள்ளார். இவரின் வாழ்வில் அடைந்த ஏற்ற, இறக்கங்கள், திருமண வாழ்க்கை போன்றவற்றை பற்றி பகிர்ந்து கொண்டார்.

போட்டியின்போது, துவக்கம் முதலே, எதிராளியை தாக்குவேன். இதைப்போல, எந்த நிகழ்ச்சியிலும் துடிப்பாக செயல்படுவேன். என் நண்பர்கள், எனக்கு பழக்கப்பட்ட இயக்குநர்கள் பலர் பார்ப்பதாகச் சொல்கிறார்கள், என்றார்.

இதன் இயக்குநர் ஸ்பைக் லீ கூறுகையில், பெரும்பாலான மனிதர்கள் தங்களின் மறைவான வாழ்வு பற்றி வெளியில் சொல்ல மாட்டார்கள். ஆனால், டைசன் தன் வாழ்வில் சந்தித்த அனுபவத்தை பகிர்ந்து கொள்கிறார். இந்த தைரியத்தை, இதற்கு முன் யாரிடமும் பார்த்ததில்லை," என்றார்.

# கவாஸ்கருக்கு விருது கிடைக்காததன் இரகசியம்

இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கவாஸ்கருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது கிடைக்காதது ஏன் என்று தற்போது தெரியவந்துள்ளது.

விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குபவர்களுக்கு பல பிரிவுகளில் மத்திய அரசு சார்பில் ஒவ்வொரு ஆண்டும் விருது வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு வாழ்நாள் சாதனையாளருக்கான தயான்சந்த் விருதுக்கு இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் சுனில் கவாஸ்கர், விஜய் அமிர்தராஜ் (டென்னிஸ்) உள்ளிட்ட பலரது பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன.



ரூ. 5 இலட்சம் மதிப்பிலான இவ்விருதுக்கான இறுதிப் பட்டியலில் கிரிராஜ் சிங் (பாரா விளையாட்டு), மேரி டிசவுசா (தடகளம்), அனில் மேன் (மல்யுத்தம்), சையது அலி (ஹொக்கி) ஆகியோரது பெயர் மட்டும் இடம் பெற்றன.

கவாஸ்கர், விஜய் அமிர்தராஜ் பெயர்கள் இல்லை. இதற்கான காரணம் குறித்து புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. அதாவது, வாழ்நாள் சாதனையாளருக்காக அர்ஜுனா விருது தான் முதலில் வழங்கப்பட்டு வந்தது.

இதை உமாபாரதி விளையாட்டு அமைச்சராக இருந்த போது (2002) மாற்றினார். அதாவது, வாழ்நாள் சாதனையாளர் விருதை மறைந்த ஹொக்கி வீரர் தயான்சந்த் பெயரில் வழங்க முடிவு செய்யப்பட்டது. இதன்படி 2002க்கு முன் அர்ஜுனா விருது வென்றவர்கள் இந்த விருதுக்கு தெரிவு செய்யப்படக் கூடாது.

1975ல் கவாஸ்கர், 1974ல் விஜய் அமிர்தராஜ் அர்ஜுனா விருது பெற்றுவிட்டனர். இந்நிலையில் வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கான தகுதி என்ன எனத் தெரியாமல் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ.இ). அகில இந்திய டென்னிஸ் சங்கம் (ஏ.ஐ.டி.ஏ.இ) இவர்கள் பெயரை பரிந்துரை செய்துள்ளது.

இதனால் தான் இவர்களுக்கு விருது தரப்படவில்லை என்று மத்திய விளையாட்டு விருது கமிட்டி தெரிவித்தது. சிறந்த பயிற்சியாளருக்காக வழங்கப்படும் துரோணாச்சார்யா விருதுக்கு ஐந்து பேர் பரிந்துரை செய்யப்பட்டனர்.

இதன்படி பர்னிமா மகட்டோ (வில்வித்தை), நரேந்திரா சிங் செய்னி (மகளிர் ஹொக்கி), ராஜ் சிங் (மல்யுத்தம்), கே.பி.தாமஸ் (தடகளம்), மகாவீர் சிங் (குத்துச்சண்டை) ஆகியோரது பட்டியல் மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் ஜிதேந்திரா சிங் ஒப்புதலுக்கு அனுப்பப பட்டது.



## விளையாட்டுச் செய்திகள்

# கிரிக்கெட்டின் பிதாமகன் பிரட்மன் பயன்படுத்திய துடுப்பு மட்டை ஏலம்




கிரிக்கெட்டின் பிதாமகன் என்றழைக்கப்படும் மறைந்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் ஜாம்பவான் பிரட்மன் பயன்படுத்திய துடுப்பாட்ட மட்டை ஏலத்துக்கு வரவுள்ளது.

வருகிற 15ம் திகதி ஏலம் விடப்படும் இந்த மட்டை, ரூ.11 லட்சம் வரை போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 1948ம் ஆண்டில் மிகவும் சக்தி வாய்ந்த அணியாகத் திகழ்ந்த அவுஸ்திரேலிய அணியில் இடம்பெற்றிருந்த அனைத்து வீரர்களும் இந்த மட்டையில் கையெழுத்திட்டுள்ளனர்.

இதனை விற்பனை செய்யவுள்ள நிறுவனத்தைச் சேர்ந்த சார்லஸ் லெஸ்கி என்பவர் கூறுகையில், 1948-ல் இங்கிலாந்து செல்வதற்கு முன்னதாக, அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற தனது கடைசி முதல்தர போட்டியில் இந்த மட்டையை பயன்படுத்தி தான் பிராட்மேன் 115 ஓட்டங்கள் குவித்தார் என்று தெரிவித்தார்.

இதுதான் பிரட்மன் விளையாடிய கடைசி டெஸ்ட் போட்டி, இவர் தனது 92ம் வயதில் 2001ம் ஆண்டில் காலமானார். டெஸ்ட் போட்டியில் துடுப்பாட்ட சராசரியில் இப்போதும் அவர்தான் முதலிடத்தில் (99.94) உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




# கிராண்ட்ப்ரீ கார் பந்தயம்

இந்தியாவில் எதிர்வரும் 2014 ஆண்டு முதல் கிராண்ட்ப்ரீ கார் பந்தயங்கள் நடைபெறாது என்ற அறிவிப்பு வந்தது.

இந்நிலையில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 25 முதல் 27ம் திகதி வரையில் நடைபெற உள்ள பந்தயங்களுக்கான டிக்கெட் விற்பனையை தொடங்கியுள்ளதாக ஜேபீ ஸ்போர்ட்ஸ் இண்டர்நேஷனல் அறிவித்துள்ளது.

இதற்கான குறைந்தபட்ச கட்டணத்தொகையாக 1,500 ரூபாயை அந்நிறுவனம் நிர்ணயம் செய்துள்ளது.

புத் சர்வதேச சுற்றில் நடைபெறவிருக்கும் இந்தப் போட்டிக்கான மூன்று நாள் நிகழ்ச்சிக்கான டிக்கெட் விற்பனையுடன் இறுதிநாள் போட்டிக்கான தனி டிக்கெட் விற்பனையையும் ஆரம்பித்துள்ளது.

வெள்ளிக்கிழமை [illegible] ஒத்திகை நிகழ்ச்சி, சனியன்று நடைபெறும் தகுதிச் சுற்றுப் போட்டி மற்றும் இறுதி நாளன்று நடைபெறவிருக்கும் போட்டி ஆகிய மூன்று போட்டிகள் நடைபெறும். மூன்று போட்டிக்கும் போக விரும்பாதவர்கள் கடைசி ஒருநாள் போட்டியினைப் பார்க்க ரூ. 1500 கட்டணம் செலுத்தினால் போதுமானது.

இந்தப் பிரிவு மாணவர்களைக் கவருவதற்காகப் போடப்பட்டுள்ளது. மூன்று நாள் நிகழ்ச்சிகளையும் பார்க்க விரும்புபவர்களுக்கும் கட்டணத் தொகையை 2000 ரூபாவிலிருந்து 1000 ரூபா வரை ஜேபீ நிறுவனம் குறைத்துள்ளது. இதுபோல் பார்வையாளர் கட்டணங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

மெர்சிடிஸ் பென்ஸ் நிறுவனம் இந்தப் பந்தய தளத்திற்கான அதிகாரபூர்வ பங்குதாரராக உள்ளது.

மூன்று நாள் சீசன் டிக்கெட்டுகளுடன் பார்வையாளர்களின் வரவை அதிகரிக்கும் விதமாக ஒரு நாள் டிக்கெட் விற்பனையும் உள்ளதால்பார்முலாஒன்றின்ரசிகர்களுக்கு இந்தப் போட்டி நினைவில் நிற்கும் விதமாக அமையும் என்று ஜேபீ ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் சமீர் கவுர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரியப் படலத்தில் இயங்கும் மடிக்கணினி உருவாக்கம்



தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக கணனிகளின் அளவுசுருங்கிஇன்று டேப்லட் வரை சிறிதாக மாறியுள்ளது. இந்நிலையில் அவற்றின் பாவனையை மேலும் இலகுபடுத்தும்பொருட்டு மேலும் பல தொழில்நுட்பங்கள் உட்புகுத்தப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க தற்போது சூரியப் படலத்தில் செயற்படக்கூடிய மடிக் கணனிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் நீடித்து செயற்படக்கூடிய மின்கலம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் 2 மணிநேரம் சூரிய ஒளியில் வைத்த பின்னர் சுமார் 8 தொடக்கம் 10 மணித்தியாலங்கள் வரை தொடர்ச்சியாக செயற்படக்கூடிய சக்தியை குறித்த மின் கலம் வழங்குகின்றது.

இந்நீண்ட பாவனையின் பொருட்டு இக்கணனிகளில்ருடிரவெர இயங்குதளம் நிறுவப்பட்டுள்ளது. WeWi Telecommunications எனும் கனடிய நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட இக்கணனிகளின் விலையானது 300 டொலர்கள் இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.




## பேஸ்புக் அறிமுகப்படுத்தியுள்ள புத்தம் புதிய வசதி


முன்னணி சமூகவலைத்தளமான பேஸ்புக் ஆனது தனது பயனர்களுக்காக தொடர்ந்தும் பல்வேறு வசதிகளை அறிமுகப்படுத்தியவண்ணம் உள்ளது.இந்த வரிசையில் தற்போது நுஅடிநனையடிடந ீழளவள எனும் வசதியை அறிமுகம் செய்துள்ளது. அதாவது யூ டியூப், பேஸ்புக் தளத்தில் பகிரப்படும் வீடியோ கோப்புக்களை வேறு இணையத்தளங்களில் பயன்படுத்தவதற்காக Embed வசதி தரப்பட்டிருக்கும்.

இதே போன்று பேஸ்புக் வோல்களில் பகிரப்படும் போஸ்ட்களினையும் இவ்வசதி மூலம் ஏனைய தளங்களில் நேரடியாக பயன்படுத்த முடியும்.இதனால் குறித்த போஸ்ட்களுடன் தொடர்பான புகைப்படங்களை தரவிறக்கம் செய்து மீண்டும் தரவேற்றம் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது என்பது குறிப்பிடத்தக்கது.

அப்பிள் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த MobileMe ஒன்லைன் ஸ்டோரேஜ் சேவையானது செப்டெம்பர் மாதம் 30ம் திகதியுடன் அஸ்தமனமாகின்றது.

இச்சேவைக்கு பதிலாகவே அந்நிறுவனத்தினால் iCloud எனும் புதிய சேவை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் MobileMe சேவையினூடாக தனது பயனர்களுக்கு 20GB சேமிப்பு வசதியினை இலவசமாக வழங்கி வந்தது.

இச் சேவை மூடப்படும்போது தற்போது இதனைப் பயன்படுத்துவர்கள் iCloud - இன் 5GB சேவையை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இதற்கு மேலதிகமாக பயன்படுத்த வேண்டுமாயின் வருடத்திற்கு 20 டொலர்கள் செலுத்தி 10GB வசதியினைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## விரைவில் அஸ்தமனமாகின்றது அப்பிளின் Mobile Me சேவை

# புதியவன் தொழில்நுட்பம்



கண் பார்வையில்லாதவர்கள் காட்சிகளை காணும் வகையில் அதி நவீன கருவியை ஆராய்ச்சியாளர்கள் வடிவமைத்துள்ளனர்.

கண் பார்வையற்றவர்கள் காட்சிகளை காணும் வகையில் நவீன கருவிகளை உருவாக்குவது குறித்து ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு நடத்தினர்.

இவர்களின் ஆராய்ச்சியின் பலனாக, காதில் பொருத்தப்படும் விசேஷ கருவியின் உதவியுடன் காட்சிகளை காணக்கூடிய வகையில், புதிய கருவியை உருவாக்கியுள்ளனர்.

இதுகுறித்து ஜெருசலேமில் உள்ள ஹீப்ரு மருத் துவப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் அமிர் அமேதி கூறுகையில்,

கண் பார்வையற்றோரின் காதுகளில் பொருத்தப்படும் இந்த கருவி, காட்சிகளின் ஒளி அலைகளின் அதிர்வுகளை உள்வாங்கி அதை ஒலி அலை களாக பதிவு செய்யும் தன்மை கொண்டது.

மேலும் இந்த கருவிகளில் பொருத்தப் பட்டுள்ள கமெராக்களில் Visual Word Form எனப்படும் காட்சிகளுக்கான ஒளி மற்றும் ஒலியியல் மொழிகள் எழுதப்பட்டுள்ளன.

எனவே இவை உள்வாங்கிய ஒளி அலைகளை Visual Word Form-ல் ஒலி எழுத்துகளாக மாற்றி மூளைக்கு அனுப்புகிறது.

மூளையில் உள்ள காட்சிப் பதிவுகளை அறியும் பகுதியில், இவை மீண்டும் ஒளி அலைகளாக மாற்றம் செய்யப்படுவதால் இந்த கருவியின் மூலம் பார்வையற்றோரும் காட்சிகளை காண முடியும்.

இந்த கருவியை பார்வையற்றோரிடம் பரிசோதனை செய்ததில், நல்ல பலன் கிடைத்துள்ளது. அவர்களால் காட்சிகளை தெளிவாக காண முடிகிறது.

இந்த கருவியில் நிறைய காட்சிகளுக்கு ஒலி வடிவம் கொடுத்து அதற்கான மொழியை எழுத வேண்டியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மேலும் முதற்கட்ட ஆராய்ச்சியில் வெற்றி கண்டுள்ளதாகவும், முழு பணிகள் முடிந்த பின் கருவியை வெளியிடுவோம் எனவும் தெரிவித்துள்ளார்.

## ‘காதுகளின் மூலம் காணலாம்” பார்வையில்லாதவர்களுக்கு ஓர் நற்செய்தி

## உயர் ரக புகைப்படங்களை எடுக்க துணைபுரியும் iblazr LED Flash

சிலவகை ஸ்மார்ட் கைப்பேசிகள், டேப்லட்கள் மூலம் இருள் சுழ்ந்த நேரங்களில் புகைப்படங்களை எடுப்பதற்கு குடயளா இணைக்கப்பட்டிருக்கும். எனினும் இவற்றின் தரம் குறைவாகவே காணப்படும். எனவே இதன் தரத்தை கூட்டுவதற்காக iblazr LED Flash எனும் துணைக் கருவி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்சாதனமானது ஒரே வகையான 4 LED Flash - களை கொண்டுள்ளதுடன் 60 டிகிரியை RO வெளிச்சம் கொடுக்கக்கூடியதாகக் காணப்படுகின்றது. இச்சாதனத்தை ஹெட்போன்களை இணைக்கும் பகுதியில் இணைக்கக்கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.



மேலும் 200 mh மின்கலத்தின் மூலம் 1000 தடைவைகள் Flash செய்யக்கூடியதாகவோ அல்லது தொடர்ச்சியாக 40 நிமிடங்களுக்கு ஒளிரச் செய்யக்கூடியதாகவோ காணப்படுகின்றது.

தற்போது கணனியை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படும் அனைத்து சாதனங்களும் USB இணைப்பானைக் கொண்டே பொருத்தப்படுகின்றன.




தற்போது பாவனையில் இருப்பது USB 2.0, USB 3.0 போன்ற இணைப்பான்கள் ஆகும்.

எனினும் இதனை அறிமுகப்படுத்திய குழு தற்போது 10 Gbps வேகத்தில் தரவுப் பரி மாற்றத்தை மேற்கொள்ளக்கூடிய USB 3.1 இணைப்பானை உருவாக்கியுள்ளனர்.

இம்மாதம் அறிமுகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படும் இந்த இணைப்பான் ஆனது, தற்போது உள்ளவற்றினை விடவும் 2 மடங்கு வேகத்தில் தரவுப்பரிமாற்றம் செய்யவல்லன என்பது குறிப்பிடத்தக்கது.

## 10Gbps வேகத்தில் தரவுகளைக் கடத்தும் புதிய USB இணைப்பான் உருவாக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிநேகிதன் சிநேகிதி காதலில்



காதல் உணர்வோடு வாழும் ஒரு மிகச் சிறந்த தம்பதியினர் கண்டிப்பாக நண்பர்களாகவும் இருப்பார்கள். ஒருவருக்கு நல்ல நண்பனே வாழ்க்கைத் துணையாக வந்தால், அதை விட பெரிய பாக்கியம் என்ன இருக்கிறது. அப்படிப்பட்ட வாழ்க்கைத் துணையிடம் வெளிப்படையாக எது வேண்டுமானாலும் பேசலாம், முழுமையாக நம்பிக்கையை அவர் மீது வைக்கலாம், அவரின் துணையை ஒவ்வொரு நொடியும் கொண்டாடுவதால், ஒரு இனிமையான உறவை மலரச் செய்யலாம். எம்மில் பல பேருக்கு, ஏற்கனவே அப்படிப்பட்ட வாழ்க்கைத் துணை அமைந்திருக்கும். அவர்களே உங்களின் நெருங்கிய நண்பர்களாகவும் இருப்பார்கள்.

ஆனால் வெறுமனே நெருங்கிய நண்பராக இருப்பவர், உங்களை நேசிக்க ஆரம்பித்தால், உறவை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் நேரம் வந்துவிடும். சில நேரம் நெருங்கிய நண்பரை நண்பராக மட்டுமே பார்க்குமாறு மனதளவில் ஒரு தடை இருக்கும். இந்தத் தடையை உடைத்து, நெருங்கிய நண்பரை காதலிக்க நாங்கள் கூறும் ஆலோசனையைப் பின்பற்றுங்கள். பின்னர் வாழ்க்கை ஜாலியாக செல்லும்.

முதலில் நட்பு கெட்டு போகும் என்ற பயத்தை விட்டொழிக்க வேண்டும். நீங்கள் இருவரும் ஏற்கனவே நெருங்கிய நண்பர்களாக இருக்கிறீர்கள். உங்கள் இருவருக்கு இடையே வரும் பிரச்சினையை எப்படி சமாளிப்பது மற்றும் சண்டைகளை எப்படி நிறுத்துவது என்பதை நன்கு அறிவீர்கள். உண்மையிலேயே நெருங்கிய நண்பர்களாக இருந்து, உறவுமுறை அடுத்த கட்டத்திற்குச் செல்லவில்லை என்றால் கவலைப்படாதீர்கள். உங்கள் நட்பை தொடரலாம். இது கண்டிப்பாக உங்களுக்கு வலியைத் தந்தாலும், சிறிது காலத்தில் இந்தக் காயம் ஆறும். மேலும் உண்மையான நட்புக்கு, இது ஒரு சோதனை என்றும் எண்ணிக் கொள்ளுங்கள்.

நெருங்கிய நண்பரிடம், உங்கள் தற்போதைய உறவை விளக்கி, அதை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல விரும்புவதையும் வெளிப்படுத்துங்கள். அவருக்கும் கூட இந்த எண்ணம் இருந்திருக்கலாம் அல்லவா?

நெருங்கிய நண்பரிடம் உங்களுக்கு பிடித்த மற்றும் நீங்கள் மதிக்கும் அனைத்து நல்ல குணங்களையும் பட்டியலிடுங்கள். பின்பு ஒரு காதல் உறவில் நீங்கள் என்னவெல்லாம் எதிர்பார்க்கிறீர்கள் என்பதையும் பட்டியலிடுங்கள். இப்போது இரண்டு பட்டியலிலும் ஒத்து போகிற அம்சங்களை குறித்துக் கொண்டே வாருங்கள். நீங்கள் எதிர்பார்த்தது அவரிடம் இருந்தால், கண்டிப்பாக இந்த வழிமுறை உங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கும்.

உங்கள் நெருங்கிய நண்பருடன் காதல் உறவில் ஈடுபட்டால், எப்படி இருக்கும் என்பதை கற்பனை செய்து பாருங்கள். அது நடந்தால் உங்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியை அளிக்கும் என்று எடுத்துகாட்டாக விளங்கும். உதாரணத்திற்கு, இருவரும் கடற்கரைக்கு செல்லுங்கள், மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் உணவு அருந்துங்கள். இவ்வகை சூழலில் இருவருக்கும் இடையே ஒரு புது வகை உணர்வு ஏற்படலாம்.

உங்கள் இருவரின் வருங்காலக் கனவுகளைப் பற்றி அடிக்கடி பேசும் போது, உங்கள் எதிர்காலத்தை அவருடன் தான் செலவிட வேண்டும் என்ற எண்ணம் வளரத் தோன்றும். காதலில் விழுவது என்பது துரிதமாக நடப்பது கிடையாது. காதலில் விழும் முன், வாழ்க்கையை எந்த ஒரு தருணத்திலும் உங்கள் நண்பரிடம் ஒப்படைக்க முழு மனதுடன் தயாராக வேண்டும். தயாரான நிலையில் இருந்த பின் காதலைச் சொல்லுங்கள்

நீங்கள் இருவரும் சேர்ந்து ஈடுபடும் செயல்கள் இனிமையாக இல்லாமல் போகலாம் அல்லது காதல் உணர்வு இல்லாமலும் போகலாம். இது நட்பு வரையில் இருந்தால், எந்தப் பிரச்சினையும் இல்லை. இதுவே உறவை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல விரும்பினால், செய்ததையே திரும்பத் திரும்ப செய்யாதீர்கள், போன இடத்திற்கே மீண்டும் அழைத்துச் செல்லாதீர்கள். மாற்றங்கள் தேவை, புதிதாக ஏதாவது செய்யுங்கள்.

முக்கிய மாக அது காதல் உணர்வை தூ ண்ட வேண்டும்.

நெருங்கிய நண்பருக்கு உங்கள் மீது காதல் மலரவில்லை என்றால், நீங்கள் அவரிடம் முன்பு இருந்ததைப் போலவே இருக்க வேண்டும். அவர் உங்களைக் காதலிக்க வற்புறுத்துமாறு, நீங்கள் நடந்து கொள்ளக் கூடாது. நீங்கள் நீங்களாகவே இருப்பதனாலேயே, அவர் உங்கள் நெருங்கிய நண்பராக இருந்தால், இதற்காகவே உங்களை அவர் காதலிக்கும் வாய்ப்புகள் உள்ளது. வேண்டுமென்றே காதலில் விழ வேண்டும் என்ற எண்ணத்தில், நண்பரைக் காதலிக்காதீர்கள்.

உங்களுக்கு என்ன தேவை என்பதை முதலில் தெளிவாக முடிவு செய்து கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் உயிர் நண்பரை மனதார விரும்பி, உங்கள் உறவை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல விரும்புகிறீர்களா? முதலில் அவருடைய எண்ணத்திற்கும் மதிப்பளியுங்கள். அவர்களின் மேல் அழுத்தம் போடாதீர்கள். இரண்டு பேரும் ஒத்துப்போனால் தான், ஒரு புது உறவு மலரும்.

**காதல் என்றால் உண்மையில் என்னவென்று தெரியுமா?**

காதல் என்ற வார்த்தை இல்லாத இடம் இந்த தரணியில் உள்ளதா? சிறிய கிராமத்தில் இருந்து, பெரிய நகரம் வரை காதல் இல்லாத இடமே இல்லை. ஆதாம் ஏவாள் காலத்தில் உருவான காதல், கடைசி மனிதன் இருக்கும் வரை அழியப் போவதில்லை. காதல் என்பது "அது எப்போ வரும் எப்படி வரும் என்று யாருக்கும் தெரியாது. ஆனால் வர வேண்டிய நேரத்தில் ஒவ்வொரு மனிதனும் காதலில் விழுவது நிச்சயம்". நம் வாழ்வின் முக்கியமான ஒரு நபரை சந்திக்கும் போதோ அல்லது அவரைப் பற்றி சிந்திக்கும் போதோ உங்களுக்குள் ஒருவித வினோத உணர்வு ஏற்படும் அல்லவா? சரி, அது காதலா இல்லையா என்பதை எப்படி அறிந்து கொள்ளப் போகிறீர்கள்? ஏன் அவர்களைப் பற்றிச் சிந்திக்கும் போது ஒரு இன்பமயமான உணர்வு ஏற்படுகிறது? இது வாழ்நாள் முழுவதும் நீடிக்குமா? காலம் காலமாக நிலைத்து நிற்கும் காதல் என்ற இந்த அபூர்வ உணர்வைப் பற்றி கொஞ்சம் பார்போமா...

காதல் என்பது ஒரு ஆழமான பாச உணர்வாகும். அது எம்மை ஒருவரிடம் மிகவும் நெருக்கமாக இருக்க ஊக்குவிக்கும். இந்த நெருக்கத்தின் அளவு ஒவ்வொருவரைப் பொறுத்து மாறுபடும். யாருக்காக என்பதை பொறுத்து, காதலானது வலுவற்றதாக, உறுதியானதாக அல்லது கட்டுப்படுத்த முடியாததாக இருக்கும். காதல் மலரும் போது சில அறிகுறிகள் அதனை எமக்குத் தெளிவுபடுத்தும். அவை படபடப்பு, தொண்டை அடைத்தல், வியர்க்கும் உள்ளங்கை, மனம் கவர்ந்தவரை காணும் போதோ அல்லது நினைக்கும் போதோ அதிக அளவில் சந்தோஷம் பொங்குதல் போன்றவைகள் தான். இப்படித்தான் காதலுக்கும், நட்பிற்கும் உள்ள வேறுபாடுகள் கூறப்படுகிறது.

மனோ தத்துவ நிபுணர்கள் பலரும் காதலைப் பற்றிய ஆய்வை நடத்திக் கொண்டு தான் இருக்கிறார்கள். காதல் என்பது சும்மா வாய்ப்பு கிடைப்பதால் நடக்கும் ஒரு விஷயம் அல்ல. யாருடன் இருக்கும் போது, மனமானது பூக்கிறதோ அவர்களின் மீது ஆழ் மனதில் உண்டாவதுதான் காதல். முக பாவனை, குரல் அல்லது சைகை என எது வேண்டுமானாலும், காதல் உணர்வை தட்டி எழுப்பலாம். மேலும் காதல் வயப்பட்டிருக்கும் போது ஆழமான உணர்வுகளும், உளப்பிணியும் அதிகரிப்பதை நன்கு உணரலாம். குறிப்பாக மகிழ்ச்சியான மனதோடு மட்டுமே இவ்வுலகைப் பார்ப்போம். காதலைத் தேடும் போது, நம் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற நபரை கண்களும் காதுகளும், தேடவும் கேட்கவும் செய்யும். அவர்கள் செய்யும் தவறைப் பெரிதாக எண்ணிக் கொள்ளாமல், நம் கனவுகளையும் ஆசைகளையும் அவர்களிடம் வெளிக்காட்ட முனைவோம். அதனால் தான் 'காதலுக்கு கண்ணில்லை' என்று கூறுகிறார்கள் போலும். சில சமயங்களில் காதல் குணத்தையும் கூட மாற்றி விடும். அதிலும் சகிப்புத்தன்மை மற்றும் பொறுமை அதிக அளவில் இருக்கும். தன் மீது குறைவான சுய மதிப்பீடு கொண்ட பெண்கள், காதலில் விழுந்த பின்பு ஆசைகளையும் குணங்களையும் மாற்றிக் கொள்வார்கள் என்று கூறப்படுகிறது.

காதலைப் பற்றி ஆராய்ச்சியாளர்களும் கூடச் சிலவற்றைக் கூறுகின்றனர். உடல் ரீதியான சந்தோஷத்தைக் காதல் அளித்தாலும், அதையும் தாண்டி, உடம்பில் ஹார்மோன் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. எண்டோர்பின், லூரிபெரின், ஆக்ஸிடாக்சின் மற்றும் காம ஹார்மோனான டெஸ்டோஸ்டிரோன் ஆகிய அனைத்து ஹார்மோன்களும் காதலில் ஈடுபடும் போது அதிக அளவில் சுரக்கிறது. இது மனதின் உள்தடைகளை உடைத்தெறிந்து, விரும்புபவரின் அன்பை பெறச் செய்யும். இவை அனைத்தும் டோபமைன் என்பதை சுரக்க வைக்கும். காதலால் ஏற்படும் உணர்வுகள் மற்றும் வெளிப்படும் ஹார்மோன்களும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒரே மாதிரி தான் இருக்கும். ஆனால் காதலினால் ஏற்படும் மாற்றங்களை, அவர்கள் வேறு இரு கண்ணோட்டத்தோடு பார்க்கின்றனர்

- ஆண்களுக்கு காம உணர்வு தான் அதிகமாக வெளிப்படும். டெஸ்டோஸ்டிரோன் தான் அவர்களின் நோக்கத்தை ஆட்சி செய்யும். மேலும் எண்ணத்தின் கொள்ளளவையும், உறவின் அமைப்புக்கு தரப்படும் மரியாதையையும் தீர்மானிக்கும். -

பெண்களுக்கு இது வேறு மாதிரியாக செயல்படும். அவர்களுக்கும் அதே உணர்வு வெளிப்பட்டாலும் முக்கியமாக காம உணர்வு, காதல் என்பது போதை வஸ்துவாக வேலை செய்யும். தன் காதலன் உடன் இருக்கும் போது, பாச உணர்வு அதிகமாக வெளிப்படும். இதுவே அவர் உடன் இல்லாத போது, ஒருவித ஏக்கத்தையும் தனிமையையும் ஏற்படுத்தும். யாரையாவது காதலிப்பதை நிறுத்தி விட்டால், மீண்டும் அவர்களின் மேல் காதல் பிறக்குமா? ஏமாற்றியவர் அல்லது மனதை காயப்படுத்தியவர் மீது காதல் எப்படி மலரும்? ஆனால், இது ஒவ்வொரு நபரை பொருத்ததாகும். மேலும் அந்த உறவு பிரிந்ததற்கான காரணத்தையும் பொருத்ததர்கும். நம் உடல் நலத்திற்கும், மன நலத்திற்கும் முக்கியமானதாக விளங்குகிறது காதல். மனம் கவர்ந்தவரை மீண்டும் மீண்டும் சந்திப்போம் என்று மனம் கூறினாலும், இந்தக் காதல் உணர்வு தினமும் கொழுந்து விட்டு எரியுமாறு பார்த்துக் கொள்வது சற்றுக் கடினமே. மேலும் மனம் கவர்ந்தவரைக் கவனித்துக் கொள்வது, ஆசைகளை வெளிக்காட்டுவது, விருப்பங்களை பகிர்வது, அவரின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது போன்ற வைகள் எல்லாம் காதல் நிலைத்திட உதவும் ரகசியங்கள்.

## இளமையில் வெல்

இளமைப் பருவத்தில் எல்லோருமே ஒருவித நிரந்தரப் போதை நிலையில் தான் இருக்கிறார்கள். காரணம் அது இனிமையானது. வளர்ந்து கொண்டிருப்பது.

–அரிஸ்ரோட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ப்பால் அதிகரிப்பதற்கு சில எளிமையான வழிகள்!!!

தாய்ப்பாலுக்குச் சிறந்த பால் இந்த உலகத்தில் ஏது? பொதுவாக தாய்ப்பால் குடிக்கும் குழந்தை ஆரோக்கியத்துடனும், திடமாகவும் நோய் எதிர்ப்பு சக்தியுடனும் வளரும். அதனால் தாய்மார்கள் தங்கள் குழந்தைக்கு தாய்ப்பாலை கொடுக்கவே விரும்புவார்கள். அவ்வாறு குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும் தாய்க்கு பெரும் எரிச்சலே, போதுமான அளவு பால் சுரக்காமல் இருப்பது தான்.

பசியில் குழந்தை அழுது துடிக்கும் போது, போதிய அளவு பால் சுரக்காமல் போனால் என்ன செய்யப்போகிறீர்கள்? போனால் போகட்டும் என விட்டு விடப் போகிறீர்களா? கண்டிப்பாக கூடாது. எல்லோருக்கும் பால் சீராக சுரப்பதில்லை. சிலருக்கு உடலில் சில பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால் சிலருக்கோ சரியான வழி முறையை பின்பற்றாததனால், பால் சுரப்பதில் பிரச்சனை ஏற்படும். ஆனால் பால் சுரப்பதை கண்டிப்பாக அதிகரிக்கலாம். அதற்காக மருந்து மாத்திரைகள் என நாடத் தேவையில்லை. பாதுகாப்பான சில இயற்கை வழியின் மூலமாகவே பால் சுரப்பதை எளிதில் அதிகரிக்கலாம். அதற்கு கீழ் கூறிய இயற்கை வழிகளை இன்றிலிருந்து பின்பற்றத் தொடங்கினாலே போதும்.





குழந்தைக்கு பால் கொடுக்கும் இடைவேளையில் பம்ப் செய்யும் கருவியை வைத்து மார்பகங்களை அவ்வப்போது பம்ப் செய்ய வேண்டும் என்று வல்லுனர்கள் கூறுகிறார்கள். அதிலும் குழந்தைக்கு பால் கொடுத்த பின்னர், குறைந்தது 5 நிமிடங்களுக்காவது பம்ப் செய்வதில் ஈடுபட வேண்டும். மார்பகங்களுக்கு இவ்வகை அழுத்தங்கள் கொடுக்கும் போது, அதற்கு அதிக அளவில் பால் தேவைப்படுகிறது என்று உடலுக்கு சொல்லப்படும்.

இரண்டு மார்பகங்களிலும் மாறி மாறி பால் கொடுத்தால், அது மார்பகங்களுக்கு அழுத்தம் கொடுத்து, அதிக அளவில் பால் தேவைப்படுகிறது என்று உடலுக்கு சொல்லப்படும். மேலும் அது குழந்தைக்கும் பாலை உறிஞ்சுவதற்கு வசதியாக இருக்கும். ஒரே பக்கத்தில் அதிக அளவில் பாலை குடித்துவிட்டால், அந்த மார்பகம் பால் இல்லாமல் வற்றிப் போகும். அதனால் அந்த பகுதியில் மீண்டும் பால் சுரப்பதற்கு, ஒரு முறை பால் கொடுக்கும் போது, இரண்டு அல்லது மூன்று முறை பால் கொடுக்கும் பக்கத்தை மாற்ற வேண்டும்.

குழந்தைக்கு பால் கொடுக்கும் போது மார்பகங்களை நன்றாக அழுத்த வேண்டும். இது பால் வெளிவர சுலபமாக இருக்கும். அதனால் ஒரு முறை பால் கொடுக்கும் போது, மார்பகங்கள் முழுமையாக காலியாகும்

குழந்தை பிறப்புக்கு உதவியாக இருக்கும் வெந்தயத்தை உண்டால், அது பால் சுரப்பதற்கும் பயன்படும். ஆனால் அது வாயுவை ஏற்படுத்துவதால், சற்று கவனமாக அளவாக சாப்பிட வேண்டும்.

வெந்தயத்தைப் போலவே தாய்ப்பாலில் தயாரிக்கப்பட்ட பாலைப் பருகினால், அது பால் சுரப்பதை அதிகரிக்கும். ஆனால் சிலருக்கு தேநீரைப் பருகினால், வயிற்று போக்கு ஏற்படும். அந்த நேரத்தில் உங்கள் மேல் துர்நாற்றம் வீசும். அதனால் கவனமாக இருக்கவும்.

பால் சுரப்பதற்கு சில பிஸ்கட்களும் உதவும். இதனை கடையில் வாங்கலாம் அல்லது வீட்டிலேயே கூடத் தயாரிக்கலாம் அல்லது இந்த குணங்கள் அடங்கிய ஓட்ஸை சாப்பிட்டால், தாய்மார்களுக்குப் பால் அதிகம் சுரக்க உதவியாக இருக்கும்.

அப்படி ஒனறும் விசேஷ உணவுகள் என எதுவும் தேவையில்லை. பொதுவாக குழந்தை பிறந்தவுடன் குழந்தையின் மீதே தாய் தன் கவனத்தை செலுத்துவதால், நல்ல உணவை அவர்கள் எடுத்துக் கொள்வதில்லை. ஆகவே நல்ல ஆரோக்கியமான உணவு களை அதிகம் உட்கொண்டால் தான், அது பால் சுரக்க எரிபொருளாக செயல்படும்.

பீர் குடிப்பதற்கு முன்பு முதலில் மருத்துவரிடம் கலந்தாலோசனை பெற வேண்டும். பொதுவாகவே பீர் என்பது பால் சுரக்க உதவும் ஒரு பானம் என்று பலராலும் கூறப்படுகிறது.

சொல்வதை விட, செய்வது தான் கஷ்டம். முக்கியமாக பால் கொடுப்பதில் சிரமம் ஏற்படும் போது தான் அதிக அழுத்தம் ஏற்படும். இவ்வகை அழுத்தம் ஏற்படும் போது, உடலில் ஆக்ஸிடாக்சின் சுரக்கும். இது பால் சுரப்பதை குறைக்கும். எனவே மன அழுத்தத்தை தவிர்க்க வேண்டும்.

குழந்தையுடன் சேர்ந்து படுக்கும் போது, கண்டிப்பாக பால் கொடுக்க தூண்டும். இவ்வாறு அதிகமாக பால் கொடுக்க கொடுக்க அதிகமாக சுரக்கும்.

பால் சுரப்பு நிபுணர்கள், தாய்மார்களை கண்டிப்பாக ஓட்ஸை சாப்பிடுமாறு பரிந்துரைக்கிறார்கள்.

இதற்கு அதன் இரும்புச் சத்தோ அல்லது வேறு என்ன காரணமோ தெரியவில்லை. ஆனால் அதை உண்ணும் அனைத்து தாய்மார்களும் பால் சுரப்பு அதிகரித்திருப்பதை ஒப்புக்கொள்கின்றனர்.

# பிரசவத்திற்கு பின் ஏற்படும் தழும்புகளை போக்க...



ஸ்ட்ரெட்ச் மார்க் என்பது நாம் சந்திக்கும் முக்கியமான பிரச்சினையாகும். குறிப்பாக பெண்கள், இந்தப் பிரச்சினைக்கு அதிகம் உள்ளாகிறார்கள். அதிலும் திடீரென உடல் எடை கூடுதல், அளவுக்கு அதிகமாக உடல் எடை குறைதல், பெண்மை அடைதல் அல்லது கருவுற்றல் போன்றவைகளால் சருமம் சுருங்கவோ அல்லது விரிவடையவோ செய்யும். அதன் விளைவாக சருமத்தின் பல பகுதிகளில் சிவப்பு அல்லது பழுப்பு நிற வரிகள் உண்டாகும். முக்கியமாக வயிறு, நெஞ்சு, தொடை மற்றும் கை பகுதிகளில் இதனைக் காண லாம்.

இவ்வகை மார்க்குகளை நீக்க பல கிறீம்களும், மருந்துகளும் சந்தையில் கிடைத்தா லும், அதில் கலக்கப்பட்டுள்ள சின்தடிக் இரசாயனங்கள் சருமத்திற்கு ஆபத்தாகக் கூட முடியும். அதனால் இவ்வகை மார்க்குகளை நீக்க சில வீட்டு சிகிச்சைகளைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். அதிலும் சமயலறையில் உள்ள பொருட்கள் அல்லது அருகில் இருக்கும் கடைகளில் வாங்கி அந்த பொருட்களைக் கொண்டு ஸ்ட்ரெட்ச் மார்க்குகளை நீக்கலாம்.

தண்ணீர் சரும பிரச்சனைகளுக்கு தீர்வு காண மிகவும் எளிய மருந்தாக விளங்குகிறது தண்ணீர். இது சருமத்தை நீர்ச்சத்துடன் ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும். ஈரப்பதம் இருப்பதால், சருமம் நெகிழ்ச்சித் தன்மையை இழக்காமலும், வறட்சி அடையாமலும் இருக்கும். அதனால் கர்ப்ப காலத்தில் தினமும் 8-10 டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

ஜெல் மற்றும் 2 தேக்கரண்டி சீனியைச் சேர்த்து செய்த பேஸ்ட்டை பயன்படுத்தி மசாஜ் செய்தால், சருமத்தில் உள்ள ஸ்ட்ரெட்ச் மார்க்கு களை நீக்கலாம். குறிப்பாக இதனை குளிக்கும் முன்பாகவோ அல்லது படுக்கும் முன்பாகவோ, இந்த கலவையை நன்றாக கலந்து ஸ்ட்ரெட்ச் குறிகளின் மீது தடவி மசாஜ் செய்ய வேண்டும். சீரான முறையில் இதனை மெதுவாக மசாஜ் செய்தால், இரத்த ஓட்டம் அதிகரிக்கும். இதனால் சருமத்தில் ஸ்ட்ரெட்ச் குறிகள் நீங்கும். பாதிப்படைந்த பகுதிகளில் ஓட்ஸ் அல்லது ஆப்ரிக்காட் மூலம் செய்த ஸ்க்ரப்களை தேர்ந் தெடுத்து, சருமத்தில் உள்ள இறந்த அணுக்களை நீக்கி விட வேண்டும்.

எலுமிச்சையைக் கொண்டு நன்றாக உடலில் தேய்த்து எடுத்து, பின் சரும நெகிழ்ச்சிக்கான லோஷன், விற்றமின் சி அடங்கியுள்ள குழந்தைகளுக்கான எண்ணெய் போன்றவைகள் கலந்த கலவையை பயன்படுத்தி மசாஜ் செய்ய வேண்டும். அதிலும் குளிப்பதற்கு முன் எலுமிச்சையை நன்றாக சருமத்தின் மீது தேய்த்து, 1-2 மணி நேரத்திற்கு அப்படியே விட்டு விட வேண்டும். இதனால் அதிலுள்ள விற்றமின் சி, சரும துளை வழியாக ஆழமாக உள்ளேறும். இது கொலாஜென் மற்றும் எலாஸ்டிக் பைபர்கள் பாதிப்படையாமல் உள்ளிறங்கும்.

விற்றமின்கள் மற்றும் கனிமங்கள் அதிகமாக உள்ள உணவுகளை சாப்பிட வேண்டும். அப்படி சாப்பிடும் போது, இதிலுள்ள ஆக்சிஜனேற்றத் தடுப்பான் மற்றும் கொலாஜென் தயாரிப்பு சருமத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும். சருமத்தின் அழகை பாதுகாக்க வேண்டுமானால், அதிலுள்ள முக்கிய புரதமும், பைபர்களும் பாதுகாக்கப்பட வேண்டும். பொதுவாக விற்றமின் ஏ, சி, டி3, ஈ மற்றும் போலிக் அமிலம் உள்ள உணவுகளை கர்ப்பக் காலத்தில் சாப்பிட வேண்டு மென்று மருத்துவர்கள் அறிவுறுத்துவார்கள். இது கருவின் வளர்ச்சிக்கு உறுதுணை யாகவும் விளங்கும். இந்த விற்றமின்கள் அடங்கிய உணவுகளை உண்ணுவதால், இது சருமத்தின் செல்புறத்திலுள்ள இடங்களை வலுப்படுத்தும். இதனால் சரும பாதிப்புகளை குணப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், ஸ்ட்ரெட்ச் குறி களையும் நீக்கும். கரட், கீரை, முலாம் பழம் என விற்றமின் ஏ உள்ள உணவுகளை உண்டால், உடலில் அதிக அளவு கொலாஜென் நிலவும். சிட்ரஸ் பழங்கள், மிளகு, ப்ராக்கோலி என விற்றமின் சி உள்ள உணவுகளை உட்கொண்டால், சருமத்திற்கு கொலாஜெனை அளிப்பதோடு, ஸ்ட்ரெட்ச் குறிகள் வேகமாக குணமாக்க வலிய ஆக்சிஜெ னேற்றத் தடுப்பானாக விளங்கும்.

ஜெனிஸ்டீன் ஜெனிஸ்டீன் என்ற பைட்டோ ஈஸ்ட்ரோஜென் பாலாடை கட்டி, சோயா பால், சோயா பீன்ஸ் மற்றும் இதர சோயா பொருட்களில் உள்ளது. இது கொலாஜென் தயாரிப்பதை அதிகரிக்க உதவும். செடிகளில் காணப்படும் மஞ்சள் நிறப் பசையான லூடீன் எனப்படும் பொருள், சருமம் பாதிப்படையாமல் காக்க ஆக்சிஜெனேற்றத் தடுப்பானாக விளங்குகிறது. அதிலும் கரும் பச்சை காய்கறி மற்றும் இலை வ்கை கீரைகளான பசலைக் கீரை, கடுகு கீரை, வெண்டைக்காய், செலரிக் கீரை, லெட்யூஸ், ப்ச்சை பட்டாணி, ஓலிவ், அவகேடோ, கிவி, நூல் கோல் ஆகியவற்றை அதிகம் சாப்பிட வேண்டும்.

ஸ்ட்ரெட்ச் குறிகள் ஏற்படுத்தும் அரிப்பை உடனடியாக நீக்க, அதன் மேல் தேங்காய் எண்ணெயை தடவி, ஒரு மணிநேரம் ஊற வைத்து, பின்பு குளிக்க வேண்டும். இதனை தொடர்ச்சியாக 2 வாரங்கள் செய்து வந்தால், ஸ்ட்ரெட்ச் குறிகளை தடுத்து, அதனை நீக்கவும் செய்யும். பாதாமில் விற்றமின் ஈ அதிகமாக உள்ளது. அதனால் பாதாமை அதிகம் சாப்பிட லாம் அல்லது ஸ்ட்ரெட்ச் குறிகள் உள்ள இடத்தில் பாதாம் எண்ணெயை தடவலாம். இந்த இரண்டு புரதமும், ஆரோக்கியமான சருமத்தை பெற உறுதுணையாக இருக்கும். குறிப்பாக இது கர்ப்ப காலத்தில் பயன்படுத்தப்படும் பாதுகாப்பான சிகிச்சையாக விளங்குகிறது. மேலும் தாய்க்கும், கருவிற்கும் சிறந்த ஊட்டச்சத்தாகவும் விளங்கும். முக்கியமாக மூளை வளர்ச்சிக்கு அத்தியாவசிய மூலமாக விளங்குகிறது.

சைக்கிள் ஓட்டுவது, படுத்து எழுந்திருப்பது போன்ற வயிறு சம்பந்தப்பட்ட உடற்பயிற்சிகளில் ஈடுபட்டால், தசைகள் வலுவ்டைந்து உடல் எடையும் குறையும். யோகா செய்யும் போது சில மூச்சு பயிற்சி அல்லது ப்ராணயாமத்தில் ஈடுபட்டாலும் கூட, சருமத்தின் நெகிழ்வு தன்மையை மேம் படுத்தி ஸ்ட்ரெட்ச் குறிகளை நீக்கலாம்.

கரும்பு மற்றும் பழுக்காத திராட்சையிலிருந்து எடுக்கப்படும் அமிலம், பாதிப்படைந்த சருமத்தின் மேல் பகுதியை நீக்கி விடும். அதனால் சருமத்தின் உட்புறம் உள்ள ஆரோக்கியமான அடுக்கு வெளிப்படும். இது கொலாஜென் பைபர்கள் உருவாகுவதிலும் உறுதுணையாக விளங்குகிறது என்று ஆய்வுகள் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணப்பொதி வெடிக்குமா?



## அமெரிக்கச் சூழ்ச்சி பலிக்குமா?

கரிகாலன்


இது ஒரு துப்பறியும் திரைப்படம் போலவே தொடர்கின்றது. இந்தக் கதையின் நாயகன் இறுதியில் வெற்றிபெறுவான். இது போலவே ஸ்நோவ்டென்னிடம் இருக்கும் ஆவணங்கள் அவருக்கு வெற்றியையே அளிக்கும்.

அமெரிக்காவின் கொடூர வேட்டையிலிருந்து தன்னைத் தப்பிவித்துக் கொள்ளும் மர்ம ஆயுதமாகத் தனது தகவல்களைப் பயன்படுத்துவதன் மூலம் தன்னை மௌனமாக்க முயலும் அமெரிக்காவின் அதிகாரத்துவ மையத்தையே மௌனமாக்கி விடுகின்றார் என ஏற்கனவே ஸ்நோவ்டென்னைச் சந்தித்துப் பல விபரங்களை வெளிக்கொணர்ந்த கிளென் கிறீன் வால்ட் நிறுவனத்திலிருந்து ஜலீன் சலிவன் கூறியுள்ளார். அவரிடமிருக்கும் ஆவணங்களே அவருக்குரிய சிறந்த உயிர்க் காப்புறுதி யாகும்.

உண்மையில் ஸ்நோவ்டென்னிற்கு எதுவும் ஆகிவிடக்கூடாது என்று அமெரிக்கா முழங்காலில் நின்று இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும் எனவும் இவர் தெரிவித்துள்ளார்.

ஸ்நோவ்டென் அமெரிக்காவின் இரு பெரும் உளவு நடவடிக்கைகளை பகிரங்கமாக வெளிப்படுத்தி உள்ளார். இதற்காக ஸ்நோவ்டென்மேல் மூன்று குற்றங் களைப் பதிவு செய்துள்ளனர்.

அதில் அமெரிக்காவிற்கு எதிரான உளவு பார்த்தல் என்பதும் ஒன்று. அதற்காக மட்டுமே 30 வருடச் சிறைத் தண்டனை வழங்க முடியும். மூன்று குற்றங்களும் சேர்ந்தால்



மரணதண்டனை என்பது நிச் சயமாகும்.

ஸ்நோவடென் எக்காரணம் கொண்டும் அமெரிக்கா தொடர்பான மேலதிக தகவல்களை வழங்கினால் உடனடியாக அவருக்கான தற்காலிகத் தஞ்சம் இரத்துச் செய்யப்படும் என விளாடிமிர் புட்டின் தனது அமெரிக்க விசுவாசத்தை நிரூபித்துள்ளார். ஆனாலும் ரஷ்யாவின் வெளியுறவுத் திணைக்களம் எக்காரணம் கொண்டும் ஸ்நோவ்டென்னை அமெரிக்காவிடம் வழங்கமாட்டோம். இதுவரை காலமும் வரலாற்றில் அமெரிக்கா எம்மிடமோ நாம் அமெரிக்காவிடமோ யாரையும் ஒப்படைத் தது இல்லை எனக் கூறியுள்ளார்.

ஸ்நோவ்டென் ஒரு மரணப் பொதியினை (Death Package) உருவாக்கி உள்ளதாக கிளென் கிறீன்வால்ட் தெரிவித்துள்ளார். ஸ்நோவ்டென் பல ஆவண்ங்களையும் அமெரிக்க அரசையே பெரும் சிக்கலுக்குள்ளாக்கும் தகவல்களையும் தனது கணினிநிபுணத்துவத்தின்மூலம் Cryptage முறையில் பாதுகாத்து வைத்திருப்பதை ஏற்கனவே தெரிவித்திருந்தோம். அதே முறையில் அமெரிக்கா தனது புலனாய்வாளர்கள் அல்லது உளவாளிகள் மூலம் 'தனது உயிருக்கு ஆபத்து ஏற்படுமாயின் அத்தனை தகவல்களுக்கும் தன்னிச்சையாகவே மக்களுக்கு வெளிப்படுத்தப்படும்' என ஸ்நோவ்டென் கூறியதாக கிளென் கிறீன்வால்ட் அமெரிக்க அரசாங்கத் திற்கு மேலும் ஒரு குண்டைத் தூக்கி வீசியுள்ளார்.

பாம்பின் கால் பாம்பறியும் என்பது போல் அமெரிக்கா தனது எதிரிகளை எப்படி அழிக்கும் என்பது தேசியப் பாதுகாப்புச் சபையின் முன்னாள் அதிகாரியும் கணனி நிபுணருமான ஸ்நோவ்டென்னிற்குத் தாராளமாகவே தெரியும். அதனாலேயே இந்த மரணப்பொதி தனது உயிருக்குப் பாதுகாப்பாக அமையும் என ஸ்நோவ்டென் இதனை உருவாக்கி இருக்கலாம்.

'ஒபாமாவின் நிர்வாகம் என் மீது மேலும் கடுமையான நடவடிக்கை எடுக்க முயன்றால் அவர்கள் மக்கள் முன்னால் மக்களின் கடுமையான கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலையை உருவாக்குவேன்' என்று ஸ்நோவ்டென் ஒரு இணையக் கருத்தரங்கில் தெரிவித்துள்ளார். இதுவே இவரின் மரணப் பொதியின் எச்சரிக்கை.

ஸ்நோவ்டென்னிடம் அமெரிக்க அரசையும் அதன் நிர்வாகத்தையும் ஒரு நிமிட நேரத்திற்குள் பாதிப்புக்குள்ளாக்கும் அளவிற்கு மிகவும் கனமான தகவல்கள் உள்ளன. இதுவரை வரலாற்றில் யாரிடமும் அமெரிக்க அரசை எச்சரிக்கக்கூடிய இந்த அளவு தகவல்கள் கிடைத்திருக்கவில்லை என கிறீன்வால்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் உளவுக் குற்றங்களில் சிக்கியிருப்போருக்காக வாதாடும் வழக்கறிஞர் மார்க் சையித், ஸ்நோவ்டென்னும் கிறீன்லாண்டும் செய்வது GRAY MAIL என்று கூறியுள்ளார். 'பிளெக் மெய்ல்' எனும் ஒருவரது தகவலை வைத்து அவரை மிரட்டும் முறைமை போல் கிரேமெய்ல் என்பது உளவு பார்த்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் ஒருவர் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அரசாங்கத்திற் கெதிரான தகவல்களை வெளியிட்டு விடுவேன் என மிரட்டித் தன் மீதான குற்றச்சாட்டை நீக்க மிரட்டுவதேயாகும்.

'ஒவ்வொருமுறையும் ஒவ்வொரு தகவலை வெளியிடும் போதும் ஒருவ ரது குற்றப் பத்திரிகை நீண்டுகொண்டே போகும். அவருக்கான தண்டனையும் அதிகரித்தே செல்லும். ஸ்நோவ்டென்னை இன்னமும் தொடர்பு கொள்ளவில்லை. தொடர்பு கொண்டால் நான் ஸ்நோவ்டென்னை வாயைப் பொத்திக் கொண்டு இருக்கும்படியே எச்சரிப்பேன்.

அத்தோடு ரஷ்ய உளவாளியான Anna chapman திருமணக் கோரிக்கையை உடனடியாக ஏற்கும்படியும் கூறுவேன்' என்று கூறியுள்ளார். Anna chapman 2010 ஆம் ஆண்டு மேலும் ஒன்பது உறங்கு நிலை உளவாளிகளுடன் அமெரிக்க அரசாங்கத்தால் நாடுகடத்தப்பட்டவர். இவர் ஸ்நோவ்டனைத் திருமணம் செய்ய விரும்புவதாக வெளிப்படையாகக் கூறியிருந்தார்.

கிறேமெயில் என்பது பொதுவான தற்பாதுகாப்பு இராஜதந்திரமாகும். முப்பது ஆண்டுகளிற்கு முன்னர் இதனை முறியடிக்கும் வகையில் அமெரிக்கக் குற்றவியல் சட்டங்கள் மாற்றப்பட்டுள்ளன. ஸ்நோவ்டென்னிடம் இருக்கும் ஆவணங்கள் மூலம் அவர் தனது குற்றப்பத்திரிகையை கனமற்றதாக்கித் தண்டனையைக் குறைக்கவோ அல்லது நிம்மதியாக உலகின் ஏதாவது ஒரு மூலையில் வாழவோதான் முடியும் என மார்க் சையித் கூறியுள்ளார்.

ஆனாலும் அமெரிக்கப் புலனாய்வு நிறுவனங்கள் ஸ்நோவ்டென் ஏற்கனவே பல சேதங்களை தேசியப் பாதுகாப்பிற்குச் செய்துவிட்டார். ஆனால் இதன் பாதிப்புக்களை அறிய நாளாகும் என்று தெரிவித்துள் ளார்கள். அவர்களிற்குத் தானே ஸ்நோவ் டென்னிடம் தாங்கள் எந்த அளவிற்குச் சிக்கி இருக்கிறோம் என்பது தெரியும். அமெரிக்கா தனது தகவல்கள் எதுவும் மக்கள் மயமாகி விடக்கூடாது என்பதில் இருக்கும் அக்கறையையே தனது ஆயுதமாக்கி ஸ்நோவ்டென் தன்னை நாடுகடத்தி அமெரிக்காவிடம் ஒப்படைப்பதிலிருந்தும் அல்லது அமெரிக்க அரசின் உளவாளிகளால் கொல்லப்படாமல் இருக்கவும் தன் மீதான தண்டனைகளிலிருந்தும் தப்பிக்கவும் வியூகமைத்து இருப்பது தெரிகின்றது. இந்த வியூகத்திற்கான பலன் உடனடியாகக் கிடைத்திருப்பது போல் தான் தெரிகின்றது.

அமெரிக்காவின் தலைமை அரச வழக்கறிஞர் எரிக் ஹோல்டர் அவசர அவசரமாக 'நாம் ஸ்நோவ்டென்னைக் கொல்லவோ சித்திரவதை செய்யவோ மாட்டோம்' எனத் தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் நீதி அமைச்சருக்கு எழுதி இருக் கும் கடிதத்தில் ஹோல்டர் இதனைத் தெரிவித்துள்ளார். 'ஸ்நோவ்டென் மரண தண்டனைக்குரிய குற்றங்களையே செய்திருந்தாலும் அவருக்கு நாம் மரண தண்டனை வழங்க மாட்டோம் என்பதை உறுதிப்படுத்துகின்றேன். அத்தோடு சித்திரவதையும் செய்யமாட்டோம். சித்திரவதை அமெரிக்கச் சட்டத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

உலகின் மிக மோசமான சித்திரவதைக் கூடமான குவாண்டனாமோவையும் Black sites எனப்படும் தேசியபாதுகாப்புச்சபைமற்றும் சிமிகிவின் சித்திரவதைக் கூடங்களைப் பல நாடுகளிலும் வைத்திருக்கும் அமெரிக்கா சித்திரவதையைச் சட்டமூலம் தடுத்திருப்பதாகக் கூறுவது பெரும் முரணாகவே தெரிகின்றது. அமெரிக்க அரசாங்கம் தடாலடியாக இந்த அறிவிப்பை விட்டிருப்பது ஸ்நோவ்டென்னின் ரஷ்யத் தற்காலிக தஞ்சக் கோரிக்கையின் அடிப்படையைத் தகர்க்கவே.

மரணதண்டனை விதிக்கப்படும் என்றால் மரணதண்டனைக்கு எதிரான நாடுகள் ஸ்நோவ்டென்னிற்குத் தஞ்சம் கொடுக்க முன்வரலாம். மனித உரிமைகள் அமைப்புக்கள் மேலும் ஆதரவை வழங்க முன்வரலாம். இவற்றைத் தடுக்காவிட்டால் ஸ்நோவ்டென்னை அணுகுவது ஒபாமா நிர்வாகத்திற்கும் அதன் உளவாளிகளிற்கும் மேலும் முடியாத காரியமாகிவிடும். எப்படியாவது ரஷ்யாவிலிருந்து ஸ்நோவ்டென்னை வெளியேற்றினால் மட்டுமே தனது உளவாளிகள் மூலம் அமெரிக்க அரசு ஒரு நடவடிக்கையை மேற்கொளள் முடியும்.




என்னதான் அமெரிக்காவைத் தன் நண்பன் என்று புட்டின் கூறிக் கொண்டாலும் அமெரிக்க உளவாளிகளை உள்ளே அனுமதிக்கும் நிலையில் ரஷ்யாவும் அதன் உளவுத் துறையான குளுடீயும் இல்லை. எனவே தனது சூழ்ச்சியை உலகின் மிகவும் ஜன நாயக நாடு போல் காட்டிக் கொண்டு ஆரம் பித்துள்ளது.

ஸ்நோவ்டென்னின் கடவுச் சீட்டு இரத்துச் செய்யப்பட்டதால் அவர் வேறு ஒரு இடமும் செல்லமுடியாது. அவர் விரும்பினால் அவர் அமெரிக்காவிற்குத் திரும்பிச் செல்ல மட்டும் நாம் கடவுச்சீட்டு வழங்கத் தயாராக உள்ளோம் என ஹோல்டர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவை சூழ்ச்சிக்குள் வீழ்த்தி ஸ்நோவ்டென்னை எங்கும் அகலாதபடி சிக்க வைக்கும் அமெரிக்காவின் இந்தச் சூழ்ச்சி பலிக்குமா? அல்லது ஸ்நோவ்டென்னின் மரணப் பொதி இதனை முறிய டிக்குமா?

## சிரிப்பே சிரிப்பு



இது அவசர காலம். வேலைகளும், தேவைகளும் பெருகிவிட்ட காலம். நாம் மன அழுத்தம், மனப் பதற்றத்திற்கு அடிக்கடி ஆளாகிறோம்.

கவலையை மறக்கப் பலர் பல வழிகளை நாடுகிறார்கள். புகைக்கிறார்கள்... குடிக்கிறார்கள்...உடல் நலம் கெட்டு, மன நலம் கெட்டு... தற்கொலை வரை போகிறார்கள். ஆனால் கவலையை மறக்கச் சிரிப்பே ஒரு மிகச் சிறந்த மருந்து என உளவியல் மருத்துவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

சிரிப்பை, உணவைப் போல, உடற்பயிற்சியைப் போல் ஓர் அன்றாட வாழ்க்கைப் பழக்கமாக ஆக்கிக் கொள்வோம்.

தினமும் குடும்பத்தினருடன் நண்பர்களுடன் சிரித்துப் பேசக் கொஞ்சமாவது நேரம் ஒதுக்குவோம்!

நமது தோல்விகள், ஏமாற்றங்களையும் மற்றவர்களிடம் துணிச்சலோடு பகிர்ந்து கொள்ளலாம். அவர்களும் தோல்விகளைச் சந்தித்தவர்கள் தான். அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதால் கவலை நிச்சயம் குறையும்.

மற்றவர்கள் குறையைச் சுட்டிக்காட்டும் போது கூடக் கொஞ்சம் மறைமுகமாக நகைச்சுவையோடு அவர்கள் மனம் புண்பட்டு விடாமல் சுட்டிக்காட்டலாம். வாழ்க்கையையே கொஞ்சம் நகைச்சுவை உணர்வோடு பார்க்கக் கற்றுக் கொள்ளலாம். மனஇறுக்கம் தொடர்பான ஏராளமான நோய்களிலிருந்து தப்பிக்கச் சிரிப்பு ஒரு சிறந்த மருந்து.

"நகைச்சுவை உணர்வு நமது வாழ்வை மாற்றும். நலமாக்கும். வளமாக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தைகளுக்கென எழுதுவது



குழந்தைகளுக்கான புத்தகங்கள் வேடிக்கையாகவும், விசித்திரமாகவும் இருந்த காலம் மலையேறி விட்டது. இப்பொழுது பயங்கரவாதத்திலிருந்து உடல் ஊனம் வரையான பல தரப்பட்ட விஷயங்கள் அவற்றில் இடம்பெறத் தொடங்கிவிட்டன. குழந்தைகள் இலக்கியத்தன் போக்கு இப்பொழுது விரைவாக மாறி வருகிறது.

"ஏன்? மேதா தேவியின் புத்தகத்தில் ஏன்-ஏன் பெண் கேட்கிறார். "ஏன்? ஏன்? ஏன்?

ஏன்-ஏன் பெண், இன்றைய குழந்தையன் சாரமாக, தொடர்ந்து எதற்கெடுத்தாலும் கேள்விகள் கேட்டு தனது தலையெழுத்தை தானே எழுதுவதற்கான அதிகாரத்தை வேண்டுபவளாக படைக்கப்பட்டுள்ளாள். சுதந்திர அடையாளத்துக்கான வேட்கையும் வற்புறுத்தலும், தற்காலத்திய இந்தியக் குழந்தைகள் இலக்கியத்தின் முக்கிய அம்சமாக உள்ளன.

தேவியின் கதாநாயகி தன்னைப் படிக்க வைக்குமாறு கோருகையில், சில குழந்தைப் பாத்திரங்கள் தங்கள் நடப்பு மற்றும் வருங்காலத்தையும் கூட கற்பனை செய்து களிக்கின்றனர். சுமதி சுகர்கரின் பரோமிதாவில் வங்காளத்துப் பண்ணையார் குடும்பத்தில் ஒரு சிறுபெண், தன்னை அக்குழந்தைப் பருவத்திலேயே மணம் முடிக்க முயலும் குடும்பத்தினரின் முயற்சிகளை முறியடித்து, எழுத்தறிவு பெறுவதற்கான தனது முயற்சியில்வெற்றி பெறுகிறாள்.

இல்லை, இவை மட்டுமே முக்கியமாக இடம் பெறும் விஷயங்களாக நாம் எண்ண முடியாது. குழந்தைகளின் பிடிவாதங்களை பூர்த்தி செய்ய பல வகைகளில் முயற்சிக்கும் பெரியவர்களைப் பற்றியும் கதைகள் ஏராளமாக வந்துள்ளன. வந்தனா சிங்கின் 'யங் அங்கிள் கம்ஸ் டவுன்' (Young Zubaan) ஒரு குழந்தையின் 'விருப்பத்தை' பூர்த்தி செய்யும் பொருட்டு, புலி வாலிலிருந்து ஒரு முடியைத் திருடுவது உள்ளிட்ட ஏராளமான தடைகளை, ஒரு இளம் மாமா கடந்து வருவதை படம் பிடித்துக் காட்டுகிறது. ஆமாம், இந்தியாவில் இன்று குழந்தைகள் 'உரிமையுடனும்' 'அதிகாரத்துடனும்' தங்கள் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். மற்றும் முக்கியமாக அவற்றை பெறவும் செய்கின்றனர். இன்று இந்தியக் குழந்தைகளின் இலக்கியம் மாறி வருகிறது. ஏனெனில் மாறி வரும் சமுதாயச் சூழலுக்கு ஏற்ப இந்தியக் குழந்தைளும் கூட மாறி வருகின்றனர்.

இந்தியப் புத்தகங்களின் உள்ளடக்கம் மட்டுமே முன்னேறவில்லை. கதைகளுடன் பிரசுரிக்கப்படும் படங்கள், வடிவமைப்பு மற்றும் தயாரிப்புக் குறிக்கோள்களும் கூட பெருமளவு மாறிவிட்டன. வாசகர்களின் அதிகரிக்கும் கோரிக்கைகளுக்கு ஏற்ப. புததக வெளியீட்டாளர்களும் புத்தகத்தில் படங்களை கவர்ச்சியாக, கவனத்தை ஈர்க்கும் வகையில் பிரசுரிப்பது மீது தங்கள் கவனத்தை முக்கியமாக செலுத்தி வருகின்றனர். 'ஒரு போதும் புன்னகைக்காத இளவரசி' என்ற கதைப் புத்தகத்தில் மரபுக்கலை பாணியிலான அற்புதமான படங்கள் இடம்பெற்றுள்ளன. அது போன்றே துலிகா மற்றும் தாரா ஆகிய பிரபல பதிப்பாளர்களும், தரத்தையும், நியாயமான புத்தக விலையையும் சற்றும் விட்டுக் கொடுக்காமல், இதே போன்ற மற்ற பிறபாணிகளையும் சோதித்துப் பார்த்துள்ளனர்.

நிச்சயமாக, இளம் பிராயத்தினருக்கான இலக்கியம் வளர்ந்து முதிர்ந்து வருகிறது எப்படி என்கிறீர்களா? நீண்ட காலமாகவே குழந்தைப் பருவத்துக்கு அங்கீகாரம் கிடைத்து வந்தது என்னவோ உண்மைதான். ஆனால் 'குழந்தைப் பருவம்' இப்பொழுது பதின்ம வயதுக்கும் அப்பால் இளைய சமூகத்தினர் வரை நீடிக்கப்பட்டு விட்டது - இவ்வாறு-செய்யப்பட்டது நிச்சயம் சரியே.

3-5 வயது வரையான குழந்தைகளுக்கான பள்ளிக்கு முந்தைய கட்டப் புததகங்கள், கருத்துப் புத்தகங்கள், படப் புத்தகங்கள், 8-10 வயதுக் குழந்தைகளுக்கான கருத்தாழமற்ற பொழுது போக்கு புத்தகங்கள் மற்றும் அதிக வயதான மற்ற பிற வாசகர்களுக்கான மகவும் தீவிர- கலப்புக்கருத்து புத்தகங்கள், இந்திய புததகக் கடைகளை ஆக்கிரமித்துள்ளன.

தீபா அகர்வாலின் 'நாட் ஜஸ்ட் கேர்ள்ஸ்' லிருந்து 'ஃபையர்' என்ற கதை. எனக்கு மிகவும் பிடித்தமான கதைகளில் ஒன்று. நான் அதை மிகவும் விரும்புகிறேன். நிதர்சனத்தை தலை நிமிர்ந்து சந்திக்கும் அதன் திறன் மற்றும் அது எழுப்பும் கேள்விகளால், நான் அதை மகவும் விரும்புகிறேன். அவை நன்னெறி ஒழுக்கங்களை ஊட்டுபவையல்ல. குற்ற உணர்வை கிளப்புபவையும் அல்ல. ஆனால் வாசகர்களை மென்மையாகத் தூண்டி படிக்கச் செய்பவை மட்டுமே.

அது போன்றே மனிதர்களின் தோல்விகள் மற்றும் பலவீனங்கள் பற்றிய புத்தகங்கள் அதிகமாகவும், கடவுள்களின் குறையின்மை மற்றும் இராட்சகர்கள் மற்றும் பேய், பிசாசுகளின் தீய சக்திகள் பற்றி குறைவாகவும் புதத கங்கள் வெளிவருகின்றன. மனநலம் குன்றியவர்கள், இறப்பு, மன அழுத்தம் மற்றும் போதை பழக்கத்துக்கு அடிமையாதல் போன்ற சிக்கலான விஷயங்களை கையாளுகிறது. ஆனால் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும் அல்லது, குறைந்தது கொண்டு வர முயற்சிக்கும் ஒரு சிறுபெண்தான் இப்புத்தகத்தின் கதாபாத்திரம்.

இத்தகைய கதைகள், இளம் வாசகரை அவன்-அவளது இதயம் கூறுவதை பின்பற்றவும், மற்றும் அவன் -அவள் சரி என்று நினைப்பதை அனைத்து தடைகளுக்கும் எதிராக கடைபிடிக்கவும் அதிகாரமளிக்கிறது. உருது மொழியில் பண்டிதர் புகான் எழுதி வெளியான 'ஒரு சர்க்கஸ் வந்தது' என்ற புத்தகத்தில் வளர்வதின் மிதமிஞ்சிய பளுவால் துன்புறும் குழந்தைகள் சிலர் ஒரு சர்க்கஸ்"க்கு செல்வதைப் பற்றி எழுதப்பட்டுள்ளது. மகாஷ்வேதா தேவியின் மிக அழகிய 'ஆர்மனி சம்பார்காச்சி பெஹ்ராம்பூரில் வாழும் ஒரு சிறுவன் மற்றும் அவனது நம்பிக்கைக்குகந்த தாயாரைச் சுற்றி நெய்யப்பட்ட கதையாகும். இதன் மொழி பெயர்ப்பு மூலம், நமக்கு இல்லாவிட்டால் தெரியவே வந்திருக்காத ஒரு கலாசாரத்தைப் பற்றி தெரிந்து கொள்ள முடிந்தது.

வங்காள மொழியில் ஏராளமான மர்மக் கதைகளும் கூட உள்ளன. ராஜசேகர புசானுர்மதாவால் எழுதப்பட்ட பரமாணு லோகாடாலி (அணு உலகில்) என்ற கதையில் ஒரு சிறுமி அவளது சகோதரன், மற்றும் அவர்களின் வளர்ப்பு நாய் ஒரு அணு நகருக்குள் துணிகரமாக நுழைகின்றனர். இவை தவிர சத்யஜித் ரே மற்றும் சுகுமார் ரேயின் படைப்புக்களிலும் வி.நரசிம்மனால் எழுதப்பட்ட குட்டிச்சாத்தான் (தமிழ்) என்ற கதையிலும் நாம் நகைச்சுவை ததும்புவதைக் காணலாம். மேலும் சந்திரா திரிவேதியின் அத்புத் 14000 அல்லது குஜராத்தியில் அபிட் சுர்டியால் எழுதப்பட்ட டப்பூஜிகா 'கஜானா' மற்றும் அனுஷ்கா ரவிசங்கரின் 'மோயின் அண்ட் தி மான்ஸ்டர்' போன்றவை புதிய கதைகளாகும்.

பல பிரசுரகர்தாக்கள் பாமாலைகளை வெளியிட்டுள்ளனர். குழச முனைள டில முனைள என்ற புத்தகத்தில், நகைச்சுவை, கற்பனை. அறிவியல் மீதான கதைத் தொகுப்புக்கள், புனைக் கதைகள் மற்றும் குழந்தைகளின் சொந்த படைப்புக்களை ஸ்காலஸ்டிக் கொண்டு வருகிறது. பிரபல ஆசிரியர் ரஸ்கின் பாண்ட்டின் கதைத் தொகுப்பை ரூபாவும், ரோசலிண்ட் வில்சன் கதைத் தொகுப்பை கதாவும் பிரசுரித்துள்ளன.

நன்னெறிக் கதைகள் மற்றும் மரபுக்கதைகள் இந்தியக் குழந்தைகள் இலக்கியத்தின் முதுகெலும்பாக இதுவரை தொடர்ந்து வந்துள்ளன. மற்றும் ஓரளவுக்கு இன்னமும் தொடரும் என்பதில் ஐயமில்லை. இவற்றில் பெரும்பாலானவை மீண்டும், மீண்டும் சொல்லப்பட்டாலும், புதிய வடிவங்களிலும் பல பிரசுரிப்பாளர்கள் சோதித்துள்ளனர்.

இந்தியாவில் குழந்தைகள் இலக்கியத்தற்கு ஒரு பிரகாசமான வருங்காலம் உளளது. மற்றும் பொருளடக்கம் மற்றும் படங்களை சிறப்பாக புதிய பாணியில் பிரசுரிப்பாளர்கள் பரிசோதனை செய்து வருவதை அடுத்து, வருங்காலத்தில் ஏராளமான புத்தகங்கள் காத்திருக்கின்றன என்பது உறுதி.



## நல்லது கெட்டதுகளில் கலந்து கொள்ளும் கலை!

*நாளை மணிவிழா, ஆனால் நான் அதே தினத்தில் சென்னையில் இருக்க வேண்டிய நிலை. என் பிறந்த ஊரில் நடந்த அந்த மணிவிழாவிற்கு முதல் நாள் சென்றேன். நாளை கலந்து கொள்ள இயலாத நிலையை ஆற அமர விளக்கினேன். புரிந்து கொண்டார்கள். அவர்கள் இல்லத்தில் சாப்பிடடேன். காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றேன். புறப்பட்டுவிட்டேன்.*

*ஒரு திருமணத்திற்குப் போக முடியவில்லை. வெளியூரில் திருமணம். வாழ்த்து மட்டும் அனுப்பினேன். இரண்டு தினங்கள் கழித்து சென்னைக்குத் திரும்பிய அந்தத் திருமணப்புதுத் தம்பதியைப் போய்ப் பார்த்தேன். ஏன்வர இயலவில்லை என விளக்கினேன். ஏற்றுக் கொண்டார்கள்.*

*ஒரு நிகழ்ச்சி[illegible] குறிப்பிட்ட தினத்தன்று இல்லை. என்றாலும் சம்பந்தப்பட்டவர்களிடம் என் பிரியத்தை வெளிப்படுத்தி அவர்களது மகிழ்ச்சியைப் பெற்று விட்டேன். குறைந்த பட்சம் அவர்களது மன வருத்தத்திற்கு ஆளாகாமல் தப்பி விட்டேன்.*

*"முகூர்த்த நேரம் முடிஞ்சிட்டுதுங்க: அதனால போகலைங்க," என்று சிலர் அசடு வழிவார்கள். ஒரு திருமணத்தில் கலந்து கொள்வதில் நேரத்திற்கு இரண்டாம் பட்ச முக்கியத்துவம்தான். முதல் முக்கியத்துவம் உணர்வுக்குத் தான்.*

*இங்கே ஒரு திருமணம்: ஐம்பது கிலோ மீட்டர் தள்ளி ஒரு திருமணம். இரண்டிலும் எப்படிக் கலந்து கொள்வது என்று ஒரு திருமண வீட்டில் இருக்கிற நாற்காலியில் தங்களை மானசீகக் கயிற்றால் கட்டிப் போட்டுக் கொண்டு அமர்ந்து கொள்கிறவர்கள் பலர்.*

*'நேரமாவது தூரமாவது?' என்று அலைச்சலையும் செலவையும் பாராமல், கொஞ்சம் முன்பின் போனால்கூட நம் நிலைமையை விளக்கிவிடலாம் என்று இரண்டு விசேஷங்களையும் எட்டிப் பிடிக்கிறவர்கள்தாம் புத்திசாலிகள்.*

*பலருக்கு ஒரு விஷயம் மட்டும் ஏனோ பிடிபடுவது இல்லை. அந்தக் குறிப்பிட்ட மணநாளோ அந்தக் குறிப்பிட்ட முகூர்த்த நேரமோ முககியமில்லை கலந்து கொள்ள வேண்டும் என்கிற உணர்வுதான் முக்கியம். மறற வர்கள் மீது உள்ள மரியாதையையும், பிரியத்தையும் வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் இது. இதை நழுவ விடக் கூடாது. வாழ்த்தும் அனுப்பாமல, முதல் நாளும் போகாமல் திருமணம் முடிந்த பிறகும் போய்ப் பார்க காமல் நாட்களை ஏகமாய்க் கடத்தி விட்டு. "வரமுடியவில்லைங்க: வேலைங்க." என்று போகிற போக்கில் பார்க்கிற இடத்தில் சொன்னால், அது மன இடைவெளிகளைத் தான் அதிகப்படுத்துமே தவிர, சொல்லப்படும் எத்தகைய காரணமும் எடுபடாமல் போய்விடும்.*

*திருமணத்தில் கலந்து கொள்ள முடியாமல் போனாலும் அதை ஈடு செய்யக் கூடிய சிறு முயற்சியிலாவது நாம் இறங்கியாக வேண்டும். இல்லாவிட்டால் நம்முடைய உணர்வுகளைத் திருமண இல்லத்தைச் சேர்ந்தவர்கள் புரிந்து கொள்ளாமல் போய், உறவே முறிந்துவிட வாய்ப்பாகிவிடும்.*

*'எங்கு என்ன நடந்தாலும் சரி நான் எங்கும் நகர மாட்டேன். பிடிச்சு வச்ச பிள்ளையார் மாதிரி உட்கார்ந்த இடத்திலேயே இருப்பேன்' என்று அடம் பிடித்தால், நமக்கென்று நான்கு பேர் வேண்டாமா? நம் வீட்டு விசேஷத்திற்கு நான்கு பேர் வர வேண்டாமா?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# புக்கர் பரிசு : ஓர் அறிமுகம்

உலக அளவில் எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு பரிசுகளில் தனி இடத்தையும், மதிப்பையும் பெற்றது 'புக்கர் பரிசு'.

1960களில் தலைசிறந்த எழுத்தாளர்களான அகஸ்தா கிறிஸ்டிடென்னிஸ் வெல்த்திலே, ஜஸீஜெட் மற்றும் ரால் பின்டோர் போன்ற நாவல்களை வெளியிட்டு வந்த தலைசிறந்த நிறுவனம் புக்கர் பிரதர்ஸ் ஆகும். அதே கால கட்டத்தைச் சார்ந்த தலை சிறந்த பிரெஞ்சு எழுத்தாளர் கோன்கவுன்டின் எழுத்துக்களால் ஈர்க்கப்பட்ட மற்றொரு பிரபலமான் பதிப்பாளரான திரு மாஸ்செல்லர் நாவலாசிரியர்களை கவுரவிக்க புதிய விருதினை உருவாக்க எண்ணினார். அதனடிப்படையில் புக்கர் நிறுவனதைதை அணுகி புத்தக விற்பனையில் கிடைக்கும் வருமானத்தில் ஒரு சிறு பகுதியை 'இலக்கியத்திற்கான பரிசாக' வழங்க பயன்படுத்த வேண்டுமென கேட்டுக் கொண்டார். இந்த சந்திப்பினால் 1968ம் ஆண்டு உருவாக்கப்பட்டதே புக்கர் பரிசு. தொடக்கத்தில் புக்கர் நிறுவனத்தோடு கூட்டாக இணைந்து மெக்கானல் நிறுவனம் இப்பரிசினை ஸ்பான்சர் செய்தது. அதனால் "புக்கர்மெக்கானல் பரிசு" என்றே அழைக்கபட்டது. நாளடைவில் அது புக்கர் பரிசு அல்லது புக்கர் என்ற பெயரே அதற்கு நிலைத்தது.

**தகுதி:**

காமன்வெல்த் நாடுகள் அல்லது அயர்லாந்து நாட்டு குடிமகன்களால் எழுதப்பட்டு நடப்பாண்டில் வெளியிடப்படும் முழுநீள நாவல்கள் மட்டுமே இப்பரிசு பெற தகுதியுடையவை. மேலும் இந்நாவல் ஆங்கிலத்தில் நாவலாசிரியர்களால் சொந்தமாக வெளியிடப்படாததாக இருக்க வேண்டும். மொழிபெயர்ப்பு நாவல்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**இன்றைய நிலை:**

2002ஆம் ஆண்டு இப்பரிசினை நிரவகிக்கவும், செயல்படுத்தவும் 'புக்கர் பரிசு அறக்கட்டளை' என்ற பெயரில் பதிவு செய்யப்பட்ட புதிய அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தியது அந்நிறுவனம். இது இலக்கிய வரலாற்றில் முக்கிய நிகழ்வாகும். அதன் பிறகு இப்பரிசினை ஸ்பொன்சர் செய்யும் பொறுப்பினை உலகின் மிகப்பெரிய முதலீட்டு நிறுவனங்களில் ஒன்றான "ஆயஸீமுசடிரி" ஏற்றுக் கொண்டதோடு இதன் பரிசுத் தொகையை 21,000 பவுண்டிலிருந்து 5 பவுண்டாக அதிகரித்தது.

**தேர்வு முறை :**

உலகில் 'புக்கர் பரிசு' மிகச் சிறந்த பரிசாக கருதப்படுவதற்கு அதன் தேர்வு முறையில் உள்ள நேர்மையான நடைமுறைகள் தான் காரணமாகும். ஆண்டு தோறும் பரிசினை தேர்வு செய்யும் நீதிபதிகளின் பட்டியல் ஒவ்வொரு வருடமும் மாற்றப்படுகின்றது. வெகு அரிதாகவே நீதிபதிகள் இரண்டாவது முறையாக தேர்வு செய்யப்படுகிறார்கள்.

இக்குழு நீதிபதிகளை தேர்வு செய்யும் போது பாலினம், தெளிவு, கடமை ஆகிய அடிப்படையில் நடுநிலையோடு கூடிய உள்ளடக்கத்தில் இலக்கிய விமர்சகர், கல்வியாளர், புத்தக் விற்பனையாளர், எழுத்தாளர் மற்றும் பிரபலமானவர் ஒருவர் என்ற அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறார்கள். இவ்வாறு தேர்வு செய்யப்பட்டவர்கள் கடமையை செய்யும் போது நிர்வாகத்தினரோ, விளம்பரதாரரோ குறுக்கீடு செய்வதில்லை. இந்தச் சுதந்திரமும், நீதிபதிகளின் சொந்த மதிப்பீடும் தான் புக்கர் பரிசு மற்ற உலகளாவிய இலக்கிய பரிசுகளிலிருந்து சிறப்பான முறையால் வேறுபடுவதற்கு அடிப் படை காரணமாகிறது.

**பதிப்பாளர்களின் பங்கேற்பு:**

தகுதி வாய்ந்த புத்தகங்கள் பரிசிற்கான போட்டியில் சேர்த்துக் கொள்வதற்கு முன்னர் அதன் பதிப்பாளர்கள் கீழ்கண்ட நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். முதலாவதாக அப்புத்தகம் இறுதிக் கட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்டவுடன் விளம்பரப்படுத்திட 5000 பவுண்டுகளும், பரிசிற்கு தேர்வு செய்யப்பட்டவுடன் மேலும் 5000 பவுண்டுகளும் பதிப்பாளர் வழங்க ஒப்புதல் அளிக்க வேண்டும். போடடிக்கு தகுதி வாய்ந்த புத்தகங்களைப் பற்றிய அறிவிப்பு வெளியான 10 நாட்களுக்குள் ஒவ்வொரு புத்தகமும் குறைந்த பட்சம் 1000 பிரதிகளாவது தனது இருப்பில் அவர் வைத்திருக்க வேண்டும். இது பதிப்பாளர்களிடையே பெரும் உற்சாகத்தினை ஏற்படுத்துவதாய் அமைகின்றது.

**உயரும் விற்பனை:**

புக்கர் பரிசுக்கு தேர்வு செய்யப்படும் புத்தகங்களின் மதிப்பு பல மடங்கு உயர்ந்து வடும். 1980களில் அனிதா ப்ரூக்னர் அவர்களின் புத்தகங்கள் சந்தையில் சராசரியாக 2000 லிருந்து 3000க்குள் விற்பனையாகும். ஆனால் 1984ம் ஆண்டு அவர் எழுதிய "ஸீஉறலீட் டல் டுலாக்" புக்கர் பரிசினை பெற்ற பின்னர் அதன் விற்பனை பல லட்சங்களைக் கடந்து சாதனை படைத்தது. அதோடு மட்டுமின்றி எழுத்தாளர்களின் புகழ் பரவுவதற்கும் அடிப்படையாக அமைந்தது. அதன் பின்னர் பல எழுத்தாளர்கள் இப்புகழ் பெற்ற பரிசினை வெல்வதற்கான போட்டியில் தங்களை இணைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் சுவாரசியமான அனுபவம்.

**பரிசு பெற்ற இந்தியர்கள்:**

2006ஆம் ஆண்டிற்கான புக்கர் பரிசு இந்தியாவைச் சேர்ந்த இளம் எழுத்தாளர் கிரண் தேசாய்க்கு வழங்கப்பட்டது. 36 வயதே நிரம்பிய இவர் எழுதிய நாவலுக்கு இப்பரிசு வழங்கப்பட்டது. 1997ல் தனது நாவலுக்காக பரிசு பெற்ற திருமதி அருந்ததி ராய் அவர்களை தொடர்ந்து இப்பரிசு பெறும் 2வது இந்தியராக கிரண் தேசாய் திகழ்கிறார்.

இத்தகைய சிறப்பான இப்பரிசு இலக்கியத் துறையில் பல ஆரோக்கியமான முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. கனவுகளோடும், இலட்சியங்களோடும், களமிறங்க எழுத்தாளர்களை ஊக்குவிப்பதோடு, இதனால் உயரும் புத்தகங்களின் விற்பனை பதிப்பாளர்களிடையே பெரும் எதிர்பார்ப்புகளை உருவாக்குகிறது. அதையொட்டி புதிது, புதிதாய் வெளிவரும் பல படைப்புகள் மக்களிடையே வாசிப்பு பழக்கத்தினை வலுப்படுத்திட பெரும் பங்காற்றுகிறது.

---

# கரிசனைமிக்கவர்களாக பிள்ளைகளை வளர்க்க...



மற்றவர்களுக்கு உதவ நமக்கு ஒவ்வொரு நாளும் ஏராளமான வாய்ப்புகள் கிடைக்கின்றன. ஆனால் இன்று நிறையப் பேர் தங்களைப் பற்றி மட்டுமே யோசிக்கிறார்கள். சொல்லப் போனால், இந்த உலகமே இப்போது சுயநலததில் தான் சுழன்றுகொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு, சிலர் ஏமாற்றுப் பேர் வழிகளாக இருக்கிறார்கள். சிலர் தான்தோன்றித்தனமாக வண்டி ஓட்டுகிறார்கள். சிலர் கோபாவேசத்தில் கன்னா பின்னாவென்று கத்துகிறார்கள்.

சுயநலம் என்ற இந்த விஷச் செடி குடும்பத்திலும் வேர்விட ஆரம்பித்திருககிறது. உதாரணத்திற்கு, சில கணவர்கள், மனைவிகள் தங்கள் துணையை விவாகரத்து செய்கிறார்கள். காரணம்? 'என்னுடைய தகுதிக்கு இவள், இவர் எல்லாம் கால்தூசு' என்று நினைக்கிறார்கள். சில பெற்றோர் தங்களுக்குத் தெரியாமலேயே பிள்ளைகள் மனதில் சுயநல விதையை விதைக்கிறார்கள். எப்படி? பிள்ளைகள் கேட்டதையெல்லாம் வாங்கிக்கொடுக்கிறார்கள். ஆனால் தவறு செய்தால் கண்டிக்கத் தயங்குகிறார்கள்.

எல்லா பெற்றோர்களுமே அப்படி இல்லை. சுயநலத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு பிறர் நலனில் அக்கறை காட்ட நிறையப் பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இதனால் நல்ல பலன்களையும் அனுபவித்திருக்கிறார்கள். இப்படி அன்பும்,கரிசனையும் காட்டும் பிள்ளைகளுக்கு நடபைச் சம்பாதிப்பதும் சுலபம். அதைத் தக்கவைத்துக் கொள்வதும் சுலபம். அவர்களால் திருப்தியாகவும் வாழ முடிகிறது. ஏன்? ஏனென்றால் பெற்றுக் கொள்வதை விடக் கொடுப்பதிலேயே அதிகச் சந்தோஷம் இருக்கிறது.

உங்கள் பிள்ளைகள் கனிவாக நடந்து கொள்ளவும், உலகின் சுயநல மனப்பான்மையால் கறைபடாமல் இருக்கவும் பெற்றோராக நீங்கள் எப்படி உதவலாம்? பிள்ளைகளின் மனதில் சுயநலம் குடிகொள்ள காரணமாக இருக்கும் மூன்று விஷயங்களை இப்போது பார்க்கலாம். அதை எப்படித் தவிர்ப்பது என்றும் பார்க்கலாம்.

1.புகழ்ந்து தள்ளாதீர்கள்

பிரச்சினை: இன்று இளைஞர்கள் மத்தியில் படர்ந்து வரும் ஆபத்தைப் பற்றி ஆராய்ச்சியாளர்களின் கருத்து இதுதான். நிறையப் பேர் வேலைக்குச் சேரும் போதே தங்களைப் பற்றி அளவுக்கு மிஞ்சிய எதிர்பார்ப்போடு வருகிறார்கள். கொஞ்சமும் கஷ்டப்படாமல், துளியும் முயற்சி செய்யாமல் வெற்றியடைய வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். இன்னும் சிலர், வேலையில் காலெடுத்து வைத்ததுமே பதவி உயர்வு வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். சிலர் தங்களை ரொம்ப முக்கியமான நபராக நினைத்துக் கொண்டு, மற்றவர்களும் தங்களை அப்படி நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் எதிர்பார்ப்பு ஏமாற்றம் அடையும் போது நொந்து போகிறார்கள்.

2.பிரச்சினையின் ஆணிவேர்:

இளைஞர்களுக்குத் தங்களைப் பற்றி அளவுக்கு மிஞ்சிய எதிர்பார்ப்பு இருப்பதற்கு ஒரு காரணம் அவர்கள் வளர்ந்த விதம். பிள்ளைகளைச் சுயமரியாதையோடு வளர்க்க வேண்டும் என்ற கருத்து இன்று மக்கள் மத்தியில் பிரபலமாகி வருகிறது: இதை வேதவாக்காக எடுத்துக் கொண்டு சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வளர்க்கிறார்கள். இந்தப் பிரபல கருத்து பின்வரும் நியமத்தின் அடிப்படையில் தோன்றியிருக்கலாம். நங்கள் கொஞ்சம் புகழ்ந்தால் பிள்ளைகள் கெட்டிக்காரர்களாக வளருவார்கள். நிறைய புகழ்ந்தால் படு கெட்டிக்காரர்களாக வளருவார்கள்! அதேசமயம் பிள்ளைகளிடம் கொஞ்சம் முகம் சுளித்தால் கூட தன்னம்பிக்கை இழந்து விடுவார்கள் என்ற கருத்தும் நிலவுகிறது. பிள்ளைகளின் சுயமரியாதையை வளர்க்க துடியாய்த் துடிக்கும் உலகத்தில் பெற்றோர் **இப்படியெல்லாம் செய்யாவிட்டால**, அவர் ஒரு பெற்றோராய் இருக்கவே லாயக்கில்லை என்று மற்றவர்கள் முத்திரை குத்துகிறார்கள். லாயக்கற்றவர்கள் என்ற எண்ணம் பிள்ளைகளின் மனதில் வரக் கூடாது. அப்படிப்பட்ட எண்ணத்தை பெற்றோரும் ஏற்படுத்தக் கூடாது என்றும் நினைக்கிறார்கள்.


பிள்ளைகள் சின்னதாக ஏதாவது நல்லது செய்தாலும் அது எவ்வளவு சாதாரணமாக இருந்தாலும் அப்பாவும் அம்மாவும் அதை ஆஹா ஓஹோ-வென்று புகழ்ந்து தள்ளுகிறார்கள். ஆனால் அவர்கள் ஏதாவது தவறு செய்தால், அது எவ்வளவு பெரியதாக இருந்தாலும் அதைக் கண்டும் காணாமலும் விட்டு விடுகிறார்கள். பிள்ளைகளின் சுய மரியாதையை வளர்க்க விரும்பும் இது போன்ற பெற்றோர்களின் கொள்கை: எல்லாவற்றையும் புகழுங்கள். தவறைக் கண்டு கொள்ளாதீர்கள். பிள்ளைகளைப் புகழ்வதன் மூலம் அவர்களுடைய தன்னம்பிக்கையை வளர்க்க முடியும் என்று பெற்றோர் நினைகின்றார்கள். ஆனால் நல்லது செய்ய பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்து **அதன் மூலம** தன்னம்பிக்கையை வளர்க்க முடியும் என்று நினைப்பதில்லை.

பிள்ளைகள் சந்தோஷப்பட வேண்டும் என்பதற்காக காரணமே இல்லாமல் அவர்களைப் புகழும் போது அவர்கள் தங்களைப் பற்றி அளவுக்கதிகமாக யோசிக்க ஆரம்பித்து விடுவார்கள். பைபிள் சொல்வது எவ்வளவு உண்மையாக இருக்கிறது. "ஒருவன் முக்கியமானவனாக இல்லாதிருந்தும் தன்னை முக்கியமானவனாக நினைத்துக் கொண்டால், அவன் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறவனாக இருப்பான். அதனால் தான் பெற்றோருக்கு இந்த ஆலோசனையை பைபிள் கொடுக்கிறது. பிள்ளைகளைக் கண்டித்து திருத்த தயங்காதீர்கள். நீங்கள் கண்டிப்பதால் அவர்கள் சாகமாட்டார்கள்.

**நீங்கள் என்ன செய்யலாம்:**

பிள்ளைகள் நல்லது செய்யும் போது பாராட்டவும் தவறு செய்யும் போது கண்டிக்கவும் கொஞ்சம்கூட தயங்காதீர்கள். ஆனால் பிள்ளைகள் சந்தோஷப்பட வேண்டும் என்பதற்காக அவர்களைப் புகழ் மழையில் நனைக்காதீர்கள். அதனால் பெரிதாக எந்தப் பிரயோஜனமும் இருக்காது. ஜெனரேஷன் மீ என்ற புத்தகமும் இந்தக் கருத்தை ஆதரிக்கிறது: "திறமைகளை வளர்த்துக் கொள்வதாலும் ஒருவருக்குத் தன்னம்பிக்கை பிறக்கிறதே தவிர, வெறுமனே பாராட்டை அள்ளி வீசுவதால் இல்லை". ○

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பாவலன் பக்கம்

## நில ஆக்கிரமிப்பும், விடுவிப்பும் அரச மூலோபாயமும், தந்திரோபாயமும்



வழமை போன்றே இம்முறையேனும் வடக்கினில் வெற்றியை பெற்றுவிட வேண்டுமெனும் முனைப்பு ஆளும் தரப்பிடையே காணப்படுகின்றது. கல்லைக் குத்தியேனும், காரியத்தை சாதித்த விடவேண்டுமென்றமுனைப்பும் இம்முறை அத்தரப்புகளிடையே அப்பட்டமாக தெரிகின்றது.

வடக்கின் ஆளும் தரப்பிற்கும் அதன் பங்காளிகளுக்கும் தலையிடியை தந்து வரும் உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் முகாம்களிற்கென ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குடியிருப்புகள் விவகாரம் இம்முறையும் தொடங்கியுள்ளது. ஒவ்வொரு தேர்தல் அறிவிப்பின் போதும், கோலாகலம் காட்டும் மீள் குடியமர்வு விவகாரம் பின்னர் தேர்தல் முடிவோடு நமத்துப் போய்விடுவது வழமையானதே.

ஜனாதிபதி தேரதல், பாராளுமன்ற தேர்தல் எனத் தொடரும் இந்த நாடகம், கடைசியாக கடந்த உள்ளூராட்சி சபைகளது தேர்தல்கள் வரை நீடித்திருந்தது. என்னை விட்டால் பலாலியில் கூட குடியேற்றுவேனென வீரம் பேசிய அமைச்சரது கந்தறுந்த கதை. ஒரேயொரு நாளேனும் சொந்த ஊர் கோவிலில் வழிபட முடியுமென நம்பிக்கையுடன் போய் துரத்தியடிக்கப்பட்டவர்களது கதைகளில் தொங்குகின்றது. எடுத்ததிற்கெல்லாம் வீரம் பேசும், அமைச்சர் இன்று வரை அதற்கு பதில் சொல்லியிருக்கவில்லை. ஆனாலும் இப்போது ஜனாதிபதியுடன் பேசி தீர்வு காணப்போவதாக கூறும் அவர், கடந்த பத்து வருடங்களிற்கு மேலாக அதையே கூறிவருவது தெரிந்ததே.

குடாநாடு படையினரது கைகளில் வீழ்ந்திருந்த 1996ம் ஆண்டின் பின்னரான காலப்பகுதியினில் பெருமளவிலான மக்கள் குடியிருப்புக்கள், மற்றும் அரச கட்டிடங்கள் முப்படைகளினதும் முகாம்களிற்காக ஆக்கிரமிக்கப்பட்டன. அவ்வெண்ணிக்கை ஆயிரக் கணக்கில் இருந்தது. கொத்துக் கொத்தாக வீடுகள் ஆக்கிரமிக்கப்பட்டு படைத்தளங்களும், முகாம்களும் அமைக்கப்பட்டன. அவற்றை விட்டு விலக 16 வருடங்கள் தாண்டியும் முப்படை தலைமைகள் விரும்பவில்லை.

ஆனாலும் வடக்கு தேர்தலின் வரப்பிரசாதமாக கடந்த ஒரு சில நாட்களுள் மட்டும் நூற்றுக்கும் அதிகமான பொது மக்களது வீடுகள் விடுவிக்கப்பட்டிருந்தன. ஆனால் இவ்விடுவிப்புக்கள் தேர்தலை முன்னிறுத்தி இடம் பெற்றிருக்கவில்லையென கூறிக்கொண்ட யாழ். மாவட்ட இராணுவத்தளபதி 'ஹததுறு சிங்க. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளின் பேரிலேயே இந்த விடுவிப்புக்கள் நடப்பதாக கூறியுள்ளார்.

எது எவ்வாறாக இருப்பினும், வீடுகளை உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வுகள் அப்பட்டமாக தேர்தல் பிரச்சார நிகழ்வுகளாகி விடுகின்றது உண்மையாகும். அரச அதிகாரிகள் சகிதம் பிடித்து வைத்திருந்தவற்றை எலும்புக்கூடுகளாக வேனும் விட்டுக் கொடுக்கும் கட்டைப் பஞ்சாயத்தில் கப்பமாக இம்முறையும் வாக்குகளே கோரப்படுகின்றன.

வீதியால் சாதாரண பயணிகள் பயணிப்பதற்கு கூட அனுமதி மறுக்கப்பட்டிருந்த வரணி 512வது படைத்தளம் கூட இழுத்து மூடப்படவுள்ளதாக, மகிந்த 'ஹத்துறுசிங்க தெரிவித்திருக்கின்றார். தேர்தலிற்கு இன்னும் ஒரு மாத கால அவகாசமிருப்பதால் சொல்பவற்றினில் ஒரு சிலவேனும் அதிசயமாக விடுவிக்கப்பட்டுவிடலாம். அவ்விடுவிப்பு நிகழ்வுகளில் ஆளும் தரப்பினது வேட்பாளர்கள், முன்னுக்கு நிற்க தவறப் போவதில்லை.

### வலிகாமம் வடக்கு.....

வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயமென்ற பேரினில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவு கொண்ட அந்த நிலப்பரப்பு பறிபோவது நிச்சயமாகியுள்ளது. ஆளும் அரசின் முன்னாள் விசுவாசியான லக்ஸ்மன் கதிர்காமரது மகன் கூட பறிபோகும் தனது பரம்பரைக் காணிக்காக நீதிமன்ற படிகளில் காத்திருக்க தொடங்கிவிட்டார் உள்ளே அதிசயங்களை நடத்திவிட்டு "அப்புக்காத்து"மார் வெளியே வருவார்கள் என விரக்தியுடன் அவர்கள் காததிருக்கிறார்கள்.

வலிவடக்கு நிலப்பறிப்பு நிச்சயமாகியிருந்த நிலையினில் ஊடகங்களையும், உலகையும் கண்கட்டு வித்தையால் ஏமாற்ற மற்றொரு நாடகமாக தொண்டமானாறு அக்கரை கிராம விடுவிப்பு அமைந்திருந்தது. ஆட்கள் நடமாட்டம் என்றுமேயிருந்திராத விவசாயத்திற்கோ, மீன்பிடிக்கோ எப்போதுமே பொருத்தமற்றிருந்த 30 ஏக்கர் நிலம் பெரும் பிரச்சாரங்களுடன் விடுவிக்கப்பட்டிருந்தது. தேர்தல் அறிவிப்பு வெளியாகவிருந்த நிலையில் விடுவிக்கப்பட்ட அப்பொட்டல் வெளி இப்போது எவ்வாறிருக்கின்றதென்பது பற்றி ஊடகங்கள் அலட்டிக்கொள்ளவில்லை. கையளித்த அன்றைய தினம் போன்று ஆடகளற்று பொட்டல் வெளியாகவே அது இருக்கின்றது. அருகாக சீன உதவியின் கீழான பாரிய முகாமொன்று வேகமாக முளைத்தும் வருகின்றது.

இந் நிலையில் வலி வடக்கு நில சுவீகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை, தேர்தல் நிவாரணமாக காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை அண்டிய பகுதிகளில் குடியமர்த்துவது தொடர்பான பேச்சுக்கள் முன்வைக்கப்படுகின்றது. எனினும் ஏற்கெனவே சுண்ணக்கல் வெட்டி எடுக்கப்பட்டு, கடல் நீர் புகுந்துவிடுமென மிரட்டப்படும் இடங்களை தேர்தல் பலிகளுக்காக ஒதுக்கி வழங்கும் முயற்சிகள் ஆரம்பமாகியுள்ளன.

எனினும் ஏற்கெனவே இடம்பெயர்ந்து வாழுமிடங்களில் காணி, நட்ட ஈடென வீசப்பட்டு வரும் ஆசை வார்த்தை வலையினுள் அகப்படாது தப்பித்து உறுதியுடன் நிற்கும் வலிகாமம் வடக்கு மக்கள் இம்முறை என்ன செய்யப்போகின்றார்களென்ற கேள்வி மீண்டும் எழுந்திருக்கிறது.

வழமை போலவே ஆளும் தரப்பு தேர்தல் காலங்களில் அள்ளி வீசும் அற்ப சலுகைகளான வேலை வாய்ப்பு, மற்றும் வசதிகள் போன்றே இப்போது முப்படைகள் வசமிருக்கும் காணிகள் மற்றும் வீடுகள் விடிவிப்புமாகும். தேர்தல்கள் அண்மிக்கும் வேளைகளிலெல்லாம் அங்கொன்றும் இங்கொன்றுமாக இவ்வாறான விடுவிப்புக்கள் நடப்பது புதிய விடயமல்ல. அவை கூட தேர்தல் முடிந்த பின்னர் பலவேளைகளில் இடையினில் நின்று போய் விடுவதுண்டு.

அவ்வாறே இம்முறையும் தேர்தல் பிரச்சாரத்திற்கு விடுவிபபு நாடகங்கள் யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றப்படுகின்றது. ஆனால் வன்னியிலோ அவ்வாறு ஏதேனும் விடுவிப்புக்கள் நடந்திருக்கின்றதாவென கேள்வி எழுப்பினால் இல்லையென்றே பதில் கிடைக்கின்றது. அங்கு புதிது புதிதாக நில ஆக்கிரமிப்பும், முகாம்களும் தோற்றம் பெற்றே வருகின்றது. வடக்கு முழுவதும் ஒரு இலட்சம் படையினர் நிலைகொள்ள வைக்கப்பட்டுள்ள நிலையினில், அவர்களிற்கான குடியிருப்பு திட்டங்கள் பற்றி இப்போது பேசப்படுகின்றது.

வடக்கு தேர்தலில் குடிசன ரீதியாக 16 ஆசனங்களை யாழ்ப்பாணமே கொண்டிருப்பதால் ஆட்சியை தீர்மானிக்க கூடியவர்களாக யாழ்ப்பாண வாக்காளர்களே இருக்கப் போகின்றார்கள். அதற்காகவே அள்ளி வீசப்படும் சலுகைகள், வெற்றியைப் பெற்றுத் தருமா? என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டியதே. ◆



# இரகசியத்தை உடைப்பது அவசியமா?

நமக்கு மட்டுமோ, நம்மோடு சம்பந்தப்பட்ட ஒருவருக்கோ தெரிந்தது மட்டுமே இரகசியமாக இருக்க முடியும். மூன்றாவது மனிதருக்குத் தெரிந்தால் அங்கு இரகசியத்தின் இலக்கணம். உடைந்து விடுகிறது அதாவது, அது இரகசியமாக இல்லாதபடி அவர்கள் பார்த்துக் கொள்கிறார்கள். தண்டோரா போடாத குறையாக, "உங்களுக்கு விஷயம் தெரியுமா?" எனறு பார்க்கிற ஒவ்வொருவரிடமும் பரப்ப ஆரம்பித்து விடுவார்கள்.

நம்முடைய இரகசியங்களை, "காதை இப்படிக் கொண்டு வாருங்கள்" என்று கூப்பிட்டுச் சொல்வது இருக்கிறதே இது, "இந்தாருங்கள் என் காது: இதைப் பிடித்துத் திருகுங்கள்" என்று சொல்வதற்கு இணையானது.

அதாவது, எப்போது நம்மைப் பற்றிய இரகசியங்களை ஒருவரிடம் சொல்கிறோமோ, அவர்களுக்கு நான் மறை முகமாகப் பயப்படவோ கடமைப்பட்டவர்களாகவோ ஆகிவிடுகிறோம். சம்பந்தப்பட்டவர்களைத் தவிர மூன்றாமவர் எவராலும் இரகசியங்களை அடக்கி வைத்திருக்கவே முடியாது. இது மனித பலவீனம் -ஏன்-மனித சுபாவம் என்றே சொல்லலாம்.

இந்த உண்மையை உணர்த்தும் நாம் மற்றவர்களிடம் நம்மைப் பற்றிய இரகசியங்களையோ, மற்றவர்களைப் பற்றிய இரகசியங்களையோ சொல்வானேன்?

இப்படி நான் சொல்வது. தவறுகளைச் செய்துவிட்டு அதை எவரிடமும் கூறவேண்டாம் என்ற பொருளில் அல்ல. ஒரு நியாயமான காரியத்தைச் செய்வதில் கூட சில நேரம் இரகசியங்களைக் காப்பாற்ற வேண்டியுள்ளது.

ஒரு தாய்கூடத் தன் இளைய மகனுக்குத் தெரியாமல் பெரிய மகனுக்கு உதவ எண்ணுகிறாள். உதவவும் செய்கிறாள். இதை ஒரு மூன்றாவது மனிதரிடம் சொல்லியும் வைக்கிறாள். வருகிறது வினை. விஷயம் உடைகிறது.

விளைவு? இளைய மகனுக்கும் பெரிய மகனுக்கும் தாயாருக்கும் சண்டை. தேவையா இது?

நாம் செய்ததை யாரிடமாவது சொல்ல வேண்டும். என்று துடிப்பது பெரும்பாலானவர்களின் பலவீனம். இந்தப் பலவீனத்தை முதலில் வெற்றி கொள்ள வேண்டும். கோளாறு இங்கே தான் ஆரம்பிக்கிறது. இந்த உணர்வை அடக்கியே ஆள வேண்டும்.

நாமே எதிரிகளை உருவாக்கி, எதிரிகளுக்குப் பலம் தந்து. நண்பர்களையெல்லாம் எதிரிகளாக்கிக் கொண்டு, ஆபத்தை நாமே விலை கொடுத்து வாங்கும் இத்தகு செயலை இனியும் செய்யத்தான் வேண்டுமா?

இரகசியங்களைச் சொல்லிச் சொல்லி அனுபவித்த துன்பங்கள் போதாதா?

-ஜென் கதை-



# மூன்று வாசல்கள்

ஜென் குரு தோசோட்டோ மூன்று வாயில்களைக் கட்டினார். இந்த வாயில்களைக் கடந்து சென்றால் என்னவாகும் என்று தம் சீடர்களுக்குச் சொன்னார். முதல் வாயிலில் ஜென் பாடம் கற்பிக்கப்படும் இடமாகும். ஜென் கற்றுக் கொள்வதால் நீ உன்னுடைய இயல்பைப் பார்க்கலாம். ஆனால் 'அது' எங்கே இருக்கிறது.

இரண்டாவது வாயிலில் நுழைந்து போனால், நீ பிறப்பு, இறப்பு என்பதிலிருந்து விடுதலை அடைய முடியும். நீ செத்த பிணமாகப் போனால், எப்படி உன்னை நீ விடுதலைச் செய்ய முடியும்?

மூன்றாவது வாயிலில் நுழைந்து போகும் போது உன் உடலானது நான்கு தாதுக்களாக பிரிந்து போய் விடும். அப்போது நீ எங்கே இருக்கிறாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை #87, பிரதான வீதி,மன்னாரில் ... அச்சகத்தால் 12.08.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.